பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்

முனைவர் தா. ஈசுவரபிள்ளை

6182
6182
07102

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்

முனைவர் தா.ஈசுவரபிள்ளை

இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

இலக்கியத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN:81-7090-366-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு -23

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 305

திருவள்ளுவராண்டு 2037, பங்குனி-ஏப்பிரல் 2006

நூல் : பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்

ஆசிரியர் : தா.ஈசுவரபிள்ளை

மொழி : தமிழ்

பொருள் ; இலக்கியம்

பதிப்பு : முதற்பதிப்பு 2006

பக்கம் : 250

தாள் : டி.என்.பி.எல்.மேப்லித்தோ 18.6 கிலோ

அளவு : டெம்மி 1/8

நூற்கட்டுமானம் : சாதாக்கட்டு

விலை ; உரூ.100/-

படிகள் : 1000

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

அணிந்துரை

சமுதாயம் என்பது குடும்பங்கள் அல்லது குழுக்களின் அடிப்படையிலானது. பொதுவாக, பழக்க வழக்கங்களாலும் சட்டத்தாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புக்களான குழுக்களாயிருக்கும் மக்கள் வாழும் முறையைச் சமுதாயம் என்கிறோம். சமுதாய நடத்தைகள், சமுதாய அமைப்பு, சமுதாயப் பண்பாட்டு மதிப்புகள் ஆகியவை மாறுதலுக்கு உட்பட்டவையாகும். இவ்வாறு சமுதாயத்தின் அமைப்பிலும், செயல்பாடுகளிலும் ஏற்படும் மாற்றங்கள் சமுதாய மாற்றம் எனப்பெறுகிறது. இது காலந்தோறும் நடைபெற்று வருவதாகும். இவ்வகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும் என்னும் தலைப்பிலான இச் சிறப்பான நூலை இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் தா.ஈசுவரபிள்ளை அவர்கள் உருவாக்கி அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இதனைப் பெருமையுடன் வெளியிடுகின்றது.

சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம், மறுமலர்ச்சி, புரட்சி, நவீனமயமாதல், ஆரியமயமாதல், தொழில் மயமாதல் போன்றவையும் சமுதாய மாற்றம் போலத் தோற்றமளிப்பவனவாம் என்பதை நூலாசிரியர் தம் முன்னுரையில் தெளிவாக விளக்குகின்றார்.

சமுதாய மாற்றம் நடைபெறும் முறைகள் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களுடன், சமுதாய மாற்றத்திற்கான பல்வேறு காரணிகளையும் இந்நூலில் ஆராயக் காண்கிறோம். குறிப்பாக, தொழில்நுட்பக் காரணிகள்,

பொருளாதாரக் காரணிகள், மக்கள் தொகைக் காரணிகள், நிலவியல் காரணிகள், உயிரியல் காரணிகள், சட்டம், பண்பாட்டுக் காரணிகள், அறிவியல் வளர்ச்சி போன்றவை சமுதாய மாற்றத்திற்குத் துணை நிற்பதை நூலாசிரியர் திறம்படத் தொகுத்தளித்துள்ளார்.

இந்திய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் மிகவும் குறிப்பிடத்தக்கதொரு காலகட்டமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய அரசியல் சூழல், கல்வி, சாதிமுறை, பெண்கள் நிலை, சட்டங்கள், கூட்டுக்குடும்ப அமைப்பு, பொருளாதார நிலை, வாணிபம், தொழிலாளர் நிலை, சமுதாய மதிப்பு, போக்குவரத்து வசதிகள், சமயம், குறிப்பிட்ட இயக்கங்கள் போன்றவற்றில் தோன்றிய மாற்றங்கள் மிகப்பல. இத்தகைய சமுதாய மாற்ற நிகழ்வுகளின் காரணமாகத் தமிழ் இலக்கியப் போக்கு எவ்வாறு அமைந்தது என்பதை மையப்படுத்துவதாக இவ்வாய்வு நூலினை ஆசிரியர் உருவாக்கி அளித்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

சமயங்களைத் தழுவியே பல நூற்றாண்டுகளாக வளர்ந்த தமிழிலக்கியம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சமயச் சார்பு குறைந்தும் சமுதாயச் சார்பு மிகுந்தும் புதுப்பாதையில் செல்லத் தொடங்கியமை இவண் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொருண்மை அடிப்படையிலும், யாப்பு அடிப்படையிலும், பாடல் எண்ணிக்கை அடிப்படையிலும், நாட்டுப்புற இலக்கிய வகையின் அடிப்படையிலும், இசை அடிப்படையிலும் தோன்றிய பல்வேறு இலக்கிய வகைகள், இலக்கியப் படைப்பாளிகள், இதழ்கள், உரைநடை நூல்கள், வரலாற்று நூல்கள், நாடகநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், வினாவிடை நூல்கள், இலக்கண நூல்கள், உரைகள் போன்ற பலவும் இந்நூலில் முழுமையாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவை, இனிவரும் இலக்கிய வரலாற்று ஆய்விற்குப் பெருந்துணையாகும்.

சமுதாய மாற்றங்களின் விளைவாகத் தமிழ் இலக்கியப் படைப்புக்களின் பொருண்மைப் போக்கும் மாறுதலடைந்து வந்துள்ளது.

மரபு வழியாக வந்த இலக்கியப் பொருண்மைகளுடன், சாதிய ஒழிப்புச் சிந்தனை, பொருளாதாரச் சமத்துவச் சிந்தனை, பெண்ணுரிமைச் சிந்தனை, சமயக் காழ்ப்பற்ற சிந்தனை, தாய்மொழி பற்றிய சிந்தனை போன்றன பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் படைப்புக்களில் பெருமளவு இடம் பெற்றமை இவ்வாய்வுகளால் தெளிவாகின்றது. இத்தகைய ஆய்வுகள் மேலும் தொடர வேண்டுமென விழைகிறேன். இவ்வாறு, குறிப்பிட்ட நூற்றாண்டில் தோன்றிய தனித்தனி இலக்கிய வகையின் பொருண்மைப் போக்கையும் விரிவாக ஆராய்ந்து வெளியிட்டால் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சியும் மாண்பும் பற்றிய ஆய்வுகள் பலவும் தெளிவாகும். இவை, பல்வேறு சமூக ஆய்வுகளுக்கும் பெருந்துணையாகும். இவ்வகையில் நூலாசிரியர் முனைவர் தா.ஈசுவரபிள்ளை அவர்கள் தொடர்ந்து பல நூல்களை உருவாக்கியளிக்க வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இந்நூலை மிக அழகுற வெளியிட்ட பதிப்புத்துறையினருக்கு என் நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்கள்.

(சி.சுப்பிரமணியம்)

முன்னுரை

ஆய்வின் நோக்கம்

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்" என்ற பொருண்மையில் அமையும் இவ்வாய்வு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்வேறு காரணிகளால் தமிழகத்தில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களையும், சமுதாய மாற்றங்களின் விளைவாகத் தமிழ் இலக்கியப் போக்கிலும், இலக்கியப் பொருண்மையிலும் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கருதுகோள்

பல்வேறு சமுதாய, அரசியல், பொருளாதார, சமய, தொழில்நுட்ப, அறிவியல் காரணிகளால் சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதையும், இம்மாற்றங்கள் இலக்கியப் போக்கிலும் பொருண்மைப் போக்கிலும் தாக்கங்களைச் செலுத்துகின்றன என்பதையும் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வின் எல்லை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கியப் போக்கையும், பொருண்மைப் போக்கையும் ஆராய்தல் மட்டுமே இவண் ஆய்வுக்குரிய எல்லையாக அமைகின்றது.

ஆய்வு ஆதாரங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் பற்றிய செய்திகளைத் தரும் நூல்களும், இலக்கிய

வரலாற்று நூல்களும், திறனாய்வு நூல்களும, வரலாற்று நூல்களும், சமூகவியல் நூல்களும் இவ்வாய்வின் ஆதார நூல்களாக அமைகின்றன. இலக்கியப் பொருண்மைப் போக்கினை அறியக் கால எல்லையைக் கருத்திற்கொண்டு அதியூர் அவதானி சரிதம், இராமலிங்க அடிகளின் படைப்புக்கள், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் படைப்புக்கள் என்பன மட்டும் ஆதார நூல்களாக எடுத்துக்கொள்ளப்பெற்றுள்ளன.

ஆய்வுப்பொருள் பாகுபாடு

இவ்வாய்வுப் பொருண்மை முன்னுரை, முடிவுரை நீங்கலாக,

1. சமுதாய மாற்றம்
2. பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலும் சமுதாய மாற்றங்களும்
3. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியப் போக்கு
4. சமுதாய மாற்றங்களும் இலக்கியப் பொருண்மைப் போக்கும்

என நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல்களில் கூறப்பெறும் கருத்துக்கள்

ஆய்வின் நோக்கம், கருதுகோள், ஆய்வின் எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வுப்பொருள் பாகுபாடு, இயல்களில் கூறப்பெறும் கருத்துக்கள், இயல்களின் வைப்புமுறை, இந்த ஆய்வின் தேவை, ஆய்வு அணுகுமுறைகள் என்பன "முன்னுரை" என்ற பகுதியில் சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளன.

"சமுதாய மாற்றம்" என்ற தலைப்பில் அமையும் முதல் இயலில் சமுதாயம் என்பது குறித்துச் சமூகவியலாளர்கள் தரும் சில விளக்கங்கள், சமுதாய மாற்றம் என்பது பற்றிய சமூகவியலாளர்களின் விளக்கங்கள், சமுதாய அமைப்பிற்கும் சமுதாய மாற்றத்திற்கும் உள்ள தொடர்பு, சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வு வரலாறு, சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம், சமுதாய மறுமலர்ச்சி, புரட்சி, நவீனமயமாதல், தொழில்மயமாதல், ஆரியமயமாதல் என்பன பற்றிய விளக்கங்கள், இவற்றிற்கும் சமுதாய மாற்றத்திற்கும்

இடையேயுள்ள வேறுபாடுகள், சமுதாய மாற்றத்திற்குரிய ஆதாரங்கள், சமுதாய மாற்றம் பற்றிய கொள்கைகள், சமுதாய மாற்றம் நிகழும் முறைகள், சமுதாய மாற்றத்திற்குரிய அரசியல், பொருளாதார, சமய, சமுதாய, தொழில்நுட்ப, அறிவியல் காரணிகள் என்பன சமூகவியல் அறிஞர்களின் கருத்துக்களின் துணையுடன் விளக்கப்பெறுகின்றன.

இரண்டாவதாக அமையும் "பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலும் சமுதாய மாற்றங்களும்" என்ற இயலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழக அரசியல் நிலை, கல்வி, சாதிமுறை, பெண்கள்நிலை, கூட்டுக் குடும்பச் சிதைவு, பொருளாதாரநிலை, வாணிபம், தொழிலாளர் நிலை, சமுதாய மதிப்புகள் என்பனவும், சமுதாய, அரசியல், பொருளாதார, அறிவியல், தொழில்நுட்ப, தொடர்பு வசதிக் காரணிகளாலும், சட்டங்களாலும், இயக்கங்களாலும் சமுதாயத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் என்பனவும் விரிவாக விளக்கப் பெறுகின்றன.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியப் போக்கு" என்ற மூன்றாவது இயல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களால் தமிழ் இலக்கியப் போக்கில் நிகழ்ந்த மாற்றங்களைச் சுட்டுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கிய வகைகள், படைப்பாளர்கள், பதிப்பாளர்கள், இதழ்கள், உரைநடை நூல்கள், நாடக நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், உரைகள், மருத்துவ நூல்கள், அறிவியல் நூல்கள், பொது அறிவு நூல்கள், சுருக்கெழுத்து நூல்கள், பாடநூல்கள், களஞ்சிய நூல்கள், அகராதிகள், நிகண்டுகள், ஆராய்ச்சி நூல்கள், வினாவிடை நூல்கள், கட்டுரைகள், இலக்கண நூல்கள், சமயப்பூசல்களின் காரணமாகத் தோன்றிய நூல்கள் என்பன தொகுக்கப்பெற்று, வகைதொகை செய்யப்பெற்று, ஆசிரியர் / நூல் அகர வரிசையில் தரப்பெறுகின்றன.

"சமுதாய மாற்றங்களும், இலக்கியப் பொருண்மைப் போக்கும்" என்ற இயலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் மன்னர்களைப் புகழ்தல், பாட்டுடைத் தலைவர்களைப் புகழ்தல், வீரத்தை எடுத்துரைத்தல், காதலைப் பாடுதல், இறைவன் பெருமைகளைக்

கூறுதல், அகப்பொருள் செய்திகளைக் கூறல் என்பன போன்ற மரபு வழியான பொருண்மைகளைக் கொண்டு திகழ்வதுடன், சமுதாய மாற்றங்களுக்கு ஏற்பப் பொருண்மைகளிலும் மாற்றங்களைப் பெற்றுத் திகழ்தலும் சுட்டப்பெறுகின்றன. கால எல்லையைக் கருத்திற்கொண்டு ஆதியூர் அவதானிசரிதம், இராமலிங்க அடிகளின் படைப்புக்கள், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் படைப்புகள் என்ப ா எடுத்துக்கொள்ளப்பெற்று, இவற்றுள் இடம்பெறும் விதவை மறுமணச் சிந்தனை, தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனை, சாதி வேறுபாடுகளற்ற சமத்துவச் சிந்தனை, பொருளாதாரச் சமத்துவச் சிந்தனை, தாய்மொழிவழிக் கல்விச்சிந்தனை, குடும்பநலச் சிந்தனை, சமயக்காழ்ப்பற்ற நிலைக்கான சிந்தனை என்பன சான்றுகளுடன் விளக்கப்பெறுகின்றன.

இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட குறிப்பிடத்தக்க சிந்தனைகளைத் தொகுத்துத் தரும் நிலையில் 'முடிவுரை' என்ற பகுதி அமைகின்றது.

இறுதியில், இவ்வாய்வுக்குத் துணைநின்ற இலக்கியங்கள், ஆங்கில, தமிழ்த் திறனாய்வு நூல்கள், கட்டுரைகள் அடங்கிய நூற்பட்டியல் தரப்பெறுகின்றது.

இயல்களின் வைப்புமுறை

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்" என்பது ஆய்வுப் பொருண்மை ஆகையால் "சமுதாய மாற்றம்" என்பது பற்றி விளக்கும் முதல் இயல் முன்னுரையை அடுத்து வைக்கப்பெற்றுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழல்களையும், சமுதாய மாற்றம் நிகழ்வதற்குரிய காரணிகள் நிலவியமைமையையும், அதன் விளைவாக ஏற்பட்ட சமுதாய மாற்றங்களையும் விளக்கும் "பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலும் சமுதாய மாற்றங்களும்" என்ற இயல் இரண்டாவதாக வைக்கப் பெற்றுள்ளது.

அடுத்து, பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களின் விளைவாகத் தமிழ் இலக்கியப்போக்கு எவ்வாறு

அமைந்து காணப்பட்டது என்பதை விளக்கும் இயலும், இலக்கியப் பொருண்மைப் போக்கை விளக்கும் இயலும் அமைக்கப் பெற்றுள்ளன.

இந்த ஆய்வின் தேவை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கியங்களைப் பற்றிய ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. மயிலை சீனி. வேங்கடசாமி, சு. சிவகாமி என்போர் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களைத் தொகுத்துத் தந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றம் என்பதை ஆராயும் நிலையிலும், அதன் விளைவான இலக்கியப் போக்கையும் பொருண்மைப் போக்கையும் விளக்கும் நிலையிலும், சமுதாய நோக்கில் அணுகும் நிலையிலும் இவ்வாய்வு அமைதல் குறிப்பிடுதற்குரியதாகும்.

ஆய்வு அணுகுமுறைகள்

ஆய்வின் நோக்கிற்கேற்பவும், இயல்களின் பொருண்மைக் கேற்பவும், போக்கிற்கேற்பவும் இவண் தொகுப்புமுறை, பகுப்புமுறை, விளக்கமுறை, சமூகவியல் அணுகுமுறை ஆகிய ஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

இயல் 1

சமுதாய மாற்றம்

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்" என்ற பொருண்மையில் ஆய்வு மேற்கொள்ளும்முன்பு சமுதாயம் என்பதன் விளக்கம், சமுதாய மாற்றம் என்பதன் விளக்கம், பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம், மறுமலர்ச்சி, புரட்சி; நவீனமயமாதல், ஆரியமயமாதல், தொழில்மயமாதல் என்பன பற்றிய விளக்கங்கள், சமுதாய மாற்றத்திற்குரிய ஆதாரங்கள், சமுதாய மாற்றம் பற்றிய கொள்கைகள், சமுதாய மாற்றம் நடைபெறும் முறைகள், சமுதாய மாற்றத்திற்கான காரணிகள் என்பன பற்றிப் பொதுவாகக் கூறுதல் தகும்.

சமுதாயம் - விளக்கம்

சமுதாயம் (society) என்பது குறித்துச் சமூகவியலாளர்கள் பல்வேறு விளக்கங்கள் அளித்துள்ளனர். அவற்றுள் ஒருசில்வற்றைக் காண்போம்.

பொதுவான உடற்கூறியல்புகளையும் பொதுவான வாழ்க்கை நோக்கங்களையும் (common mode of life), பொதுவான விதிகளையும் பொதுவான விருப்பார்வங்களையும் (common interests) கொண்டுள்ள உறுப்பினர்களை ஒருங்கிணைக்கும் சிறியதும், பெரியதும், நிரந்தரமானதும் ஆகிய அமைப்பைச் சமுதாயம் என்று கூறலாம். தனி மனிதர்களின் (individuals) கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏகதேசம் நிரந்தர இயல்பு முதலான சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ள அமைப்பைச் சமுதாயம் எனலாம்.[1]

மனிதச் சமுதாயம் என்பது முன்முடிவுடன் (pre-determinents) கூடிய பரந்த அடிப்படையைக் கொண்டது என்று கருதப்படுகிறது. சமுதாயம் என்பது ஒரு கருத்துமயமான அமைப்பு அல்லது முறை ஆகும். அது ஒரு குழுவைச் சார்ந்த உறுப்பினர்களை மட்டும் குறிப்பது ஆகாது. அது அக்குழு உறுப்பினர்களின் செயல்களையும் பரஸ்பர உறவுகளையும் குறிப்பதும் ஆகும்.[2]

கேசல் என்பவர் தம் அகராதியில் சமுதாயம் என்பது பொதுமக்கள் அமைப்பு. சமுதாயம் என்பது சமூகங்கள் (communities) அல்லது குடும்பம் அல்லது சமூகமாகக் கருதத்தக்க அளவுக்கு நாகரிகம் வாய்ந்த கட்டமைப்பாலான மனிதகுலம் என்று விளக்குகிறார்.[3]

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில - தமிழ் அகராதி 'சொசைட்டி' என்பது மன்னாயம், சமுதாயம், கூட்டு வாழ்வுக்குழு என்பனவற்றைக் குறிப்பிடுவதுடன் நட்புக்குழு, உயர்குடிவகுப்பு, கூட்டுறவுக்கழகம், சேவைக்குழு என்பனவற்றையும் குறிப்பிடுவதாகும் என்று பொருள் கூறுகிறது.[4]

வாழ்க்கைத் தேவைகளை வழங்குவதற்கு உத்தரவாதம் அளிக்கும் தொழிற்பகிர்வுடன் ஒருவர்க்கொருவர் பாதுகாப்பு, உதவி, அரசு போன்றனவற்றின் நடவடிக்கைகள் செயல்படுவதற்கு, பழக்கவழக்கங்களாலும் சட்டத்தாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புக்களான குழுக்களாயிருக்கும் மக்கள் வாழும் முறையைச் சமுதாயம் எனலாம் என்று அனைத்துலக ஆங்கில மொழி அகராதி விளக்குகிறது.[5]

குப்புசாமி சமுதாயம் என்பது மனித இனங்களுக்கிடையே நடைபெறும் இடையீட்டுச் செயல்களின் (Interactions) வரிசைகள் என்று விளக்குகிறார்.[6] மேலும் அவர், செயலெதிர்செயல்கள் இன்றி எச்சமுதாயமும் இல்லை என்றும் கூறுகிறார். செயலெதிர் செயலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அம்மா - பிள்ளை உறவுமுறையைக் காட்டுகின்றார். இந்த உறவுமுறையின் அடிப்படையிலேயே குழந்தை வளர்த்தல், சமூகமயமாக்கல் முதலியன நடைபெறுகின்றன என்கிறார்.

சமுதாயம் என்பது வளர்கின்ற உறுப்பாண்மையைக் கொண்டது. சமுதாயம் பல பரிணாமமாற்றங்களை அடைகின்றது என்ற பரிணா'ம வளர்ச்சிச் சிந்தனையுடன் சமுதாய நடைமுறை என்பது நெருங்கிய தொடர்புடையதாக அமைகின்றது.[7] எனவே, சமுதாயத்தின் இயல்புகளுள் ஒன்றாகச் சமுதாய மாற்றம் அமைகின்றது எனக் கொள்ளலாம்.

சமுதாய மாற்றம் - விளக்கம்

மாற்றம் (change) என்பது இயற்கையின் நியதி. உலகில் எதுவும் மாறாமல் நிலைத்து நிற்பது இல்லை. உலகில் உள்ள அனைத்தும் மாற்றம் என்ற நடைமுறைக்கு உட்பட்டனவே ஆகும். இவ்வகையில் சமதாயமும் பல மாற்றங்களை உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது எனலாம்.

சமுதாய மாற்றம் (social change) என்பது பற்றி விளக்கும் ஜான் எம்.ஷெப்பர்ட் என்ற சமூகவியல் அறிஞர் மிக நீண்டகால மற்றும் தொடர்புடைய, இன்றியமையாமை வாய்ந்த சமுதாய மதிப்புகளைக் கொண்ட சமுதாய அமைப்பில் ஏற்படுகின்ற சில திருத்தங்களைக் (alternations) குறிப்பது சமுதாய மாற்றம் என்கிறார்.[8]

குப்புசாமி என்பவர் சமுதாய மாற்றம் என்பது நிலைத்து நிற்பது (persistance) என்பதற்கு மாறானது என்கிறார்.[9] மேலும் அவர், சமுதாய மாற்றம் என்பது குழுக்களின் அளவிலுள்ள மாற்றம் என்றும், குறிப்பிட்ட சமுதாய நிறுவனங்களிலுள்ள மாற்றம் என்றும், நிறுவனங்களுக்கிடையே காணப்படும் உறவுகளைக் குறிப்பது என்றும் விளக்கம் தருகின்றார்.[10] சமுதாய நடத்தைகள் (Social Behaviours), சமுதாய அமைப்பு (Social Structure), சமுதாய, பண்பாட்டு மதிப்புகள் (Social and Cultural Values) ஆகியவற்றுள் காணப்படும் சில மாறுதல்களைச் சமுதாய மாற்றம் என்று பொதுவாகக் கூறலாம் என்று குப்புசாமி மேலும் விளக்கம் தருகின்றார்.[11]

சமுதாய மாற்றம் சமுதாய வரலாற்று நடைமுறைகளைக் கொண்டது. வரலாற்றுப் போக்கு உடலியற் போக்கைப் போன்றது அன்று. சமுதாய நடைமுறைகளின் காலஇணைவு

(Time sequence) உடற்கூறியலுடன் தொடர்புடைய வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்டது. உறுப்பாக்க வடிவங்கள் (organic forms) வளர்வன போன்று சமுதாயம் வளராது.

எனவே, சமுதாய மாற்றம் என்பது சூழலுடன் கூடிய மனித அனுசரிப்பில் (social adjustment) நடைபெறும் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கிய ஓர் முறையாக (process) உள்ளது. இவ்வகையில் சமுதாய மாற்றம் என்பது சமுதாயத்தின் அமைப்பிலும், செயல்பாடுகளிலும் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பதாய் அமைகின்றது என்று பொதுவாகக் கூறலாம்.

சமுதாய மாற்றம் என்பது கால நடைமுறை (Time Process). சமுதாய வாழ்க்கை நிலையில் ஏற்படும் மாற்றங்களுடன் தொடர்புடையனவாகச் சமுதாயங்களும் மாறுகின்றன.

சூழல்களின் பல்வேறு காரணிகள், சிறந்த சமுதாய வாழ்க்கையை உருவாக்கும் மனித அறிவுக்கூர்மை (human ingenuity) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று நடைமுறை (historical process) சமுதாய மாற்றம் எனப்படும்.[12]

இச்சமுதாய மாற்றமானது பிற மாற்றங்களைவிடவும் சிக்கல் நிறைந்தது என்று கருதப்படுகின்றது. மாற்றங்கள் மக்களைப் பல்வேறு நிலைகளில் பாதிப்புக்களுக்கு உள்ளாக்குகின்றன. தகுதியால் (status) நன்மை அடைபவர்கள் அதைத் தக்கவைத்துக் கொள்ள அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். மாற்றங்கள் அவர்களுடைய அதிகாரங்களையும் அவர்கள் அடைந்துவரும் சலுகைகளையும் அச்சுறுத்தும்போது அவர்கள் அந்த மாற்றங்களை எதிர்க்கின்றனர். சான்றாக நில உரிமையாளர்களுக்கும் நில உரிமையற்ற விவசாய உழைப்பாளர்களுக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தைக் கூறலாம்.

சமுதாய மாற்றங்கள் முகவர்கள் (agents) எனப்படும் தனிநபர்களை அறிமுகப்படுத்துகின்றன. அவர்கள் அரசு அதிகாரி களாகவோ, தொழில்துறையில் தேர்ச்சிப் பெற்றவர்களாகவோ,

பொதுநல அதிகாரிகளாகவோ, பள்ளி நிர்வாகிகளாகவோ, படிநிலை அமைப்புக்களைச் சார்ந்தவர்களாகவோ, சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையாளர்களாகவோ, அரசியல் அமைப்பைச் சார்ந்தவர்களாகவோ இருக்கலாம். இவர்கள் சமுதாய மாற்றங்களை ஏற்கும்போது முழுச் சமுதாயமும் அம்மாற்றங்களை ஏற்கும்.

இவ்வாறு சமுதாய மாற்றம் பற்றிய விளக்கங்களை அறியமுடிகின்றது.

சமுதாய அமைப்பும் சமுதாய மாற்றமும்

அமைப்பு (structure) என்பது உறுப்புக்கள் அல்லது பகுதிகளின் ஒழுங்காக அமைக்கப்பட்டமுறை (ordered arrangements of parts) ஆகும். இவ்வகையில் சமுதாய அமைப்பு என்பது நிறுவனபூர்வமாக வரையறுக்கப்பட்டதும் ஒழுங்குபடுத்தப் பட்டதும் ஆகிய மனித உறவுகளின் வரிசை எனலாம்.[13]

சமுதாயச் செயல்பாடுகளை அல்லது செயல்களை (activities) நிறைவேற்றுவதைச் சுற்றி அமைக்கப்பட்ட இனம்காணத் தக்க தோரணிப்பங்கு நிலை (Pattern of Role) சமுதாய அமைப்பு என்று ஜெமல்சர் விளக்குகின்றார்.

சமுதாய முறைகள் காலப்போக்கில் சில மாற்றங்களை எதிர்கொள்கின்றன. ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப்பில் காணப்பெறும் குறிப்பிடத்தக்க மாற்றம் சமுதாய மாற்றம் எனப்படுகிறது. சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படும்போது சமுதாய மாற்றம் நிகழும்.[14] இவற்றால் சமுதாய அமைப்புக்கும் சமுதாய மாற்றத்திற்கும் இடையே உறவு உள்ளமை புலனாகிறது.

சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வு (Study of Social Change)

சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வு என்பது சமுதாய வாழ்க்கையில் காணப்படும் வேறுபாடுகள் (Variations) பற்றி முறையாக ஆராயும் ஆராய்ச்சி என்பதைக் குறிக்கும். சமூகவியல் கல்வியில் (Sociological Studies) சமுதாய மாற்றம் பற்றிய கல்வியும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது.

பெரும்பாலான சமுதாயத் தத்துவவியலாளர்களும் (Social Philosophers), சமூகவியல் விஞ்ஞானிகளும் மாற்றம் என்ற நோக்கில் மனிதச் சமுதாயத்தை ஆராய்கின்றனர்.

சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வில் இருபதாம் நூற்றாண்டில் ஒரு புதிய பார்வை ஏற்பட்டது. சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு நிறுவனங்களையும் (institutions), அவற்றின் செயல்பாடுகளையும் (functions) பாதிப்புக்குள்ளாக்கும் காரணிகள் பல காணப்படுகின்றன என்று கருதினர். இதனால், சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வில் ஓர் உந்துதல் (drift) ஏற்பட்டது என்று கருதப்படுகிறது. இதன் விளைவாகச் சமுதாய மாற்றத்தின் இயல்பு (Nature of Social Change), சமுதாய மாற்றத்தின் போக்கு (Direction of Social Change) ஆகியவற்றைத் தீர்மானிக்கும் பல கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.

குப்புசாமி சமுதாய மாற்றம் குறித்த ஆய்வில் சில நிலைகள் உள்ளமையை விளக்குகிறார்.[15] அவை பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

1. சமுதாயத்தில் காணப்படும் குழுக்களுள் ஒரு குழு பிற குழுக்களுடன் தொடர்புகொள்ளும்போது ஏற்படும் மாற்றங்களைப் பற்றி ஆராய்தல் ஒரு முறை ஆகும். இதைப் பண்பாட்டுக் கலப்புப் பற்றிய ஆய்வு என்பர்.

2. சமுதாய இயக்கம் காரணமாகச் சமுதாய அமைப்பில் ஏற்படும் மாற்றம் இந்தியச் சமுதாயம் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கால் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முதற்கால் பகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சியின்போது இந்துக்கள் மேற்கத்தியக் கல்வி கற்றல், நடுத்தர நிலைமைக்காகத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளல் ஆகிய செயல்களில் ஈடுபட்டனர். இவற்றால் சமுதாயத்தில் வியக்கத்தக்க மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன. கல்வி வசதியின் காரணமாக அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு ஏற்பட்டது. இதனால் அரிசனங்கள் மற்றும் கிரிசனங்கள் (Girijans) மதிப்புமிக்க

இடத்தைப் பெற்றனர். சமுதாயமாற்றம் பற்றிய அறிவைப் பெற இத்தகைய தொழில் இடப்பெயர்பாற்றல் (Occupational Mobility) பற்றிய அறிவு தேவையானது ஆகும். இத்தகைய முறை சமுதாய இயக்கம் மற்றும் உயர்ந்தோர் குழாம் இயங்காற்றல் (Social Mobility and Dynamics of Elite) என்று கருதப்பட்டது.

3. சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வின் மற்றொருமுறை நகரியமாதல் பற்றிய ஆய்வு (Urbanization Studies) ஆகும். இம்முறை மக்கள் தொகை ஆய்வுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

நகரியச் சமுதாய அமைப்பின் ஆதிக்கத்தாலும், கிராம மக்கள் நகரப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து செல்வதாலும் சமுதாய மாற்றங்கள் நிகழ்கின்றன. பழமையான, பெரிய நகரங்கள் மேலும் வளர்ச்சி அடைகின்றன. தொழில்களை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல நகரங்கள் உருவாகின்றன. இவற்றின் அடிப்படையில் சமுதாய மாற்றங்கள் ஆராயப்படுகின்றன.

4. சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வின் மற்றொருமுறை மக்கள் தொகை மற்றும் இடச்சூழல் பற்றியனவாக அமையும். (Democraphic and Ecological Studies). ஒரு நாட்டில் காணப்படும் மக்கள் தொகை பற்றிய ஆய்வானது அந்நாட்டின் சமுதாய நடைமுறையைப் பற்றி அறியப் பெரிதும் துணை நிற்கும். இத்தகைய ஆய்வு முறைக்கு உதவும் இன்றியமையாக் காரணிகளாக ஒரு குறிப்பிட்ட பரப்பில் காணப்படும் மக்கள் தொகையின் கலவை மற்றும் பகிர்வு ஆகியன அமைகின்றன. உள்ளார்ந்த இடப்பெயர்வு பற்றிய ஆய்வும் சமுதாய மாற்றம் பற்றிய சிக்கல்களை அறியப் பெரிதும் துணைநிற்கும். அதாவது ஒரு நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளவர்கள் யாவர்? அவர்கள் தாம் இடம்பெயர்ந்து சென்றுள்ள பகுதிகளில் தத்தம் நிலையைத் தக்கவைத்துக்கொள்ள எதிர்கொள்ளும் சிக்கல்கள் யாவை? இடம்பெயர்ந்தமையால் ஏற்படும் விளைவுகள் யாவை? என்பனவற்றை ஆராய்தலும் சமுதாய மாற்றம் பற்றிய ஆய்விற்குப் பயனுள்ளதாய் அமைகின்றது.

5. குடும்பம், பொருளாதாரம், அரசியல், சமயம் போன்ற சமுதாய நிறுவனங்களிலும் (Social Institutions), கிராமச் சமுதாயம். நகரங்கள் ஆகியவற்றிலும் நிகழும் மாற்றங்கள் பற்றி ஆராய்தலும் சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வின் ஒருமுறை ஆகும். இது நிறுவனம் மற்றும் சமூக மாற்றம் பற்றிய ஆய்வு (Institutional and Community Change Studies) என்று அழைக்கப்படுகிறது.

6. சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வின் மற்றொரு முறை சமுதாய இயக்கங்கள் பற்றிய ஆய்வு ஆகும். சமுதாய இயக்கங்கள் (Social Movements) என்பன சமுதாய நிறுவனங்களில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த இயலும் நிறுவப்பட்ட முயற்சிகள் (organized attempts) என்று கருதப்படுகின்றன. சான்றுகளாகச் சமய இயக்கங்கள், தொழிலாளர் இயக்கங்கள், சமுதாயப் பாதுகாப்பு இயக்கங்கள், அரசியல் இயக்கங்கள் முதலியன சமுதாயத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்று ஆராயும் ஆராய்ச்சிகளைக் கூறலாம்.

முற்கூறியவாறு சமுதாயமாற்றம் பற்றிய ஆய்வில் பல முறைகள் காணப்படுகின்றன.

இனி, சமுதாய மாற்றம் பற்றி அறியமுற்படும் முன்பு சமுதாய மாற்றம் போல் தோற்றமளிக்கும் சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம், மறுமலர்ச்சி, புரட்சி, நவீனமயமாதல், ஆரியமயமாதல், தொழில்மயமாதல் என்பன பற்றிச் சிறிது காண்போம்.

சமுதாயப் பரிணாம வளர்ச்சி

பரிணாம வளர்ச்சி என்பது ஒரு பொருளில் மறைந்து காணப்படும் சுழற்சியற்முறை (unrolling process) என்று கருதுவர். "Evolution" என்ற சொல்லின் இலக்கியப் பொருள் (Literary meaning) ஒரே வகையைச் சார்ந்த அமைப்பிலிருந்து (homogeneous form) கலவை வகை அமைப்பாக மாறும் மாற்றத்தின் படிப்படியான முறை என்பது ஆகும். இது அமீபியாவிலிருந்து மனித இனம் வரை உள்ள மாற்ற நடைமுறையைக் குறிப்பதாகக் கருதுவர்.

இப்படிமலர்ச்சி வளர்ச்சிக்கொள்கையை (Theory of Evolution) முதலில் கண்டுபிடித்தவர் சார்லஸ் டார்வின் என்பவர் ஆவார். டார்வின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டுபிடித்தார். வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் ஏற்படும் வளர்ச்சி நிலைகளை விளக்கவே இக்கொள்கையைக் கண்டுபிடித்தார். டார்வினின் பின்னர் வந்த ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) என்பார் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையைச் சமுதாயப் பரிணாம வளர்ச்சி என்ற நோக்கில் சமுதாயம் பற்றி ஆராய விரிவுபடுத்தினார்.

ஸ்பென்சர் சமுதாய ஆய்வுக்கு உயிர்ப்பொருளின் பரிணாம வளர்ச்சியுடன் ஒப்பீட்டு ஆய்வை மேற்கொண்டார். உயிர்ப்பொருளின் பரிணாம வளர்ச்சியைப் போலவே மனிதச் சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியும் உள்ளது என்று கருதினார்.

பரிணாம வளர்ச்சிக் கொள்கையாளர்கள் சமுதாயச் சூழலில் பரிணாம வளர்ச்சி என்பது புராதனச் சமுதாய அமைப்பிலிருந்து (primitive commune) நாகரிகச் சமுதாய அமைப்பு, அடிமை உடைமைச் சமுதாய அமைப்பு, முதலாளித்துவச் சமுதாய அமைப்பு, பொதுவுடைமைச் சமுதாய அமைப்பு என்று மாறியுள்ள சமுதாய மாற்றத்தின் வரலாற்று நடைமுறையைக் (historical process)குறிக்கின்றது என்று கருதினர்.

புராதனச் சமுதாயத்தின் எளிய ஒத்திருக்கும் அமைப்பிலிருந்து (simple hormonious structure) கூட்டுத்தொகுதியான அமைப்புக்கு (complex horminious structure) மாறும் மாற்ற நடவடிக்கையைச் சமுதாயப் பரிணாம வளர்ச்சி என்பது குறிப்பிடுகின்றது எனக் கருதினர்.

பரிணாம வளர்ச்சியைப் பற்றிய அறிவானது வழக்கம் - சட்டம், மந்திரம் - சமயம், நீதி ஒப்புரவுப் பண்பு (equity) - நீதி (justice), பொருளாதாரம் - அரசியல் அதிகாரம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள் பற்றிய தெளிவை உண்டாக்கும் என்று நம்பினர். இத்தெளிவு மனித அனுபவங்களில் ஏற்படும் இயல்புகளைப் புரிந்துகொள்ள உதவும் என்றும் எண்ணினர்.

சமுதாயப் பரிணாம வளர்ச்சி என்ற நிலையில் வேறுபாடு (differentiation), ஒற்றுமை (integration), வளர்ச்சி (development) என்ற உயிரியல் தொடர்கள் முறையே வேலைப்பங்கீடு (division of labour), சமுதாய ஒற்றுமை (Social solidarity) சமுதாய முன்னேற்றம் (Social progress) என்பனவற்றுடன் ஒப்புமையாக்க அடிப்படையில் ஆராயப்பட்டன.

பரிணாம வளர்ச்சியைப் பற்றிய ஆய்வு சமூகவியலாளர் களுக்குச் சமுதாய வகைகளின் ஒழுங்கு (order of social types) பற்றிய அறிவை அளிக்கிறது. சமுதாய நிகழ்ச்சிகள் (social events) பலவற்றுக்குரிய காரணங்களை அறியப் பரிணாம வளர்ச்சிக் கொள்கை மிகவும் பயனுள்ள வகையில் அமைகின்றது. மேலும், இக்கொள்கை குறிப்பிட்ட நிலைகளில் மனிதச் சமுதாயத்தைப் புரிந்துகொள்ள உதவுவதாகவும் சமூகவியலாளர்கள் கருதினர்.

கோம்டி (காம்டே) என்ற சமூகவியலறிஞர் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை விளக்கும்போது மனித எண்ணங்கள் இறையியல் (theological) பொருண்மைசாராத அல்லது இயல் கடந்த தத்துவம் (meta physical), புறமெய்மை (positive) என்ற மூன்று நிலைகளைக் கடந்துள்ளன என்கிறார். மேலும் அவர், மனிதச் சமுதாயம் மட்டுமன்றி, அறிவியலும்கூட இந்த மூன்று நிலைகளைக் கடந்து வந்துள்ளது என்கிறார். அனைத்தும் முன்னோக்கிய வளர்ச்சி என்ற ஒரே நேர்கோட்டிலேயே செல்கின்றன என்றும் கருதுகின்றார்.

சமுதாய முன்னேற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமூகவியலாளர்கள் மனிதச் சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சி என்ற நோக்கில் சமுதாய முன்னேற்றத்தை அணுகினர். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் சமுதாய முன்னேற்றம் (Social progress) என்பது பற்றிய சிந்தனையில் சமூகவியலாளர்களிடையே மாற்றம் காணப்பட்டது.

சமூகவியலாளர்கள் சமுதாய முன்னேற்றம் பற்றிக் கூறும்போது அது நேரத்திற்கு நேரம் நிறம் மாறும் ஓணானைப் போன்றது என்று வருணிக்கின்றனர். இதனால், சமுதாய

முன்னேற்றம் நிலையான போக்குடையது அன்று என்பது உணர்த்தப்படுகின்றது.

சமூகவியலாளர்கள் சமுதாய முன்னேற்றம் ஒழுங்கற்றது என்றும், வேறுபட்டது என்றும், பல வடிவங்களை உடையது என்றும், பரிணாம வளர்ச்சியை மாற்றக்கூடியது என்றும், இந்நிலையில் சமுதாய முன்னேற்றத்திற்குக் குறிப்பிட்ட விளக்கம் அளிக்க இயலாது என்றும் கருதுகின்றனர்.

இயற்கை வளங்களை நுகர்வதன் மூலம் ஏற்படும் மனித நாகரிகத்தின் முன்னேற்றம் சமுதாய முன்னேற்றம் என்று சமூகவியலாளர்களில் சிலர் எண்ணுகின்றனர். மற்றும் சிலர் முன்னேற்றம் என்பது செல்வம், வாழ்க்கைத்தரம் (Standard of living) ஆகியவற்றில் ஏற்படும் முன்னேற்றம் என்கின்றனர்.

ஆனால், சமுதாய ஒழுங்கையும், தொழில்நுட்ப, அறிவுபூர்வமான ஒழுக்க நிலைகளையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பராமரித்தலே சமுதாய முன்னேற்றம் என்று கூறுவதே அறிவியல் பூர்வமான விளக்கம் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

டாட் (Todd) என்பார் ஒழுக்கத்தில், அறிவில், பொருளில், நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றம் மட்டுமன்றி, இவை அனைத்தும் சேர்ந்த, இவற்றிற்கும் மேலான கூட்டுக் கலவையே சமுதாய முன்னேற்றம் என்று விளக்குகிறார்.

வேறு சிலர் புராதனச் சமுதாய அமைப்பு முதல் இக்காலச் சமுதாய அமைப்பு வரையிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைச் சமுதாய முன்னேற்றம் என்கின்றனர்.

சமுதாய முன்னேற்றம் என்பது பல நிலைகளில் ஏற்படும் சமுதாய வளர்ச்சியின் பல வடிவங்களைக் குறிப்பதாகக் காணப்படினும், அது ஓர் உண்மையற்ற அல்லது மயக்கும் கருத்து (Dislusive concept) என்றும் கருதப்படுகின்றது.[16]

கோம்டி, ஸ்பென்சர், மார்கன் (Morgan), வார்ட் (Ward), தர்க்கீம் (Durkhiem), ஹோப்ஹவுஸ் போன்ற சமூகவியலாளர்கள் சமுதாய முன்னேற்றம் என்பது பற்றி ஒரு சார்பான விளக்கங்களை அளித்துள்ளனர் என்ற கருத்தும் உள்ளது.

தத்துவத்திலிருந்து அறிவியல் நிலைக்கு மாறிய மாற்றமே சமுதாய முன்னேற்றம் என்று கோம்டி கருதுகிறார்.

காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு மாறிய மாற்றத்தைச் சமுதாய முன்னேற்றம் என்று மார்கன் விளக்குகிறார்.

வார்ட் மகிழ்ச்சியின் திட்டமிடலைச் சமுதாய முன்னேற்றம் என்கிறார்.

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகள் முன்னேற்றத்தின் அறிகுறிகள் என்று ஹோப்ஹவுஸ் மற்றும் டர்க்கியாம் கூறுகின்றனர்.

சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சியைச் சமுதாய முன்னேற்றம் என்கிறார் டாயன்பி (Toynbee).

சமுதாயப் பொருளியல் அறிஞர்கள் (Social Economists) வேலைப் பங்கீட்டையும், வேலையின் சிறப்புத் தகுதியையும் (specialization of tasks) சமுதாய முன்னேற்றம் என்று கருதுகின்றனர்.

மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்ற பொருளைக் குறிப்பிடும் 'Renaissance' என்ற ஆங்கிலச் சொல்லானது Ranase cence என்ற பிரஞ்சுமொழிச் சொல்லிலிருந்து உருவாக்கம் பெற்றதாகக் கருதுவர். இப்பிரஞ்சுமொழிச் சொல்லின் பொருள் 'புத்துயிர் பெறுதல்' என்பதாகும் என்று ஆங்கிலக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.[17]

ஈ.எம்.டானர் என்பார் மறுமலர்ச்சியைப் பின்வரும் நிலைகளில் பாகுபாடு செய்து விளக்குவார்.[18]

1. சமுதாய மறுமலர்ச்சி (Social Renaissance)
2. அறிவு மறுமலர்ச்சி (Intellectual Renaissance)
3. சமய மறுமலர்ச்சி (Religious Renaissance)

4. அரசியல் மறுமலர்ச்சி (Political Renaissance)
5. கலை, இலக்கிய மறுமலர்ச்சி (Revival of Letter and Art)

பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் "ரெனைஸன்ஸ்" என்ற சொல்லை இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பிய நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமூகம், சமயம், பொருளாதாரம் போன்ற கூறுகளை உள்ளடக்கிய எல்லா மாற்றங்களையும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தினர் என்கிறது.[19]

ஆக்ஸ்போர்டு அகராதி மறுமலர்ச்சி என்பது பழைய கலைப் பாணியின் செல்வாக்கில் கலையும் இலக்கியமும் புத்துயிர் பெற்ற நிலை என்று விளக்குகிறது.[20]

ஈ.எம்.டபிள்யூ.டில்யார்ட் (E.M.W. Tillyard) என்பார் மறுமலர்ச்சி என்பது ஒரு புதிய வாழ்க்கையின் வெளிப்பாடு என்கிறார். மக்கள் தங்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்த கட்டுப்பாடுகளையும், வருத்திக் கொண்டிருந்த கடுமையான நோன்புகளையும் உதறி எறிந்துவிட்டுத் தங்கள் எண்ணங்களை வண்ணப் பகட்டோடு வெளிப்படுத்தும் புத்தெழுச்சியே மறுமலர்ச்சி என்று அவர் மேலும் விளக்கம் தருகின்றார்.[21]

புரட்சி

பழங்கால அரசியல் முறை, மரபு வழியில் வந்த பண்பாடு, படைப்பற்ற பொருளாதாரம் (uncreative economy), சுரண்டும் ஆளும் வகுப்பு, மக்களை நீண்ட காலமாக நிறைவு செய்யாத சமுதாய அமைப்பு போன்ற பழைய ஒழுங்குகளை அறவே அகற்றுதல் புரட்சி (Revolution) ஆகும் என்பர்.

மரபு நிலையிலிருந்து சமூக அடிப்படை மாற்றத்தை (social transformation) ஏற்படுத்த விளையும் மக்களின் புதிய உந்துதலிலிருந்து சில தீவிர மாற்றங்கள் விளைகின்றன. இத்தீவிர மாற்றங்கள் (radical changes) புரட்சி எனப்படும் என்று அளிக்கப்படும் விளக்கமும் உள்ளது.

மரபு நிலையான சமுதாய ஒழுங்குடன்கூடிய காலம் கடந்த தொடர்புகளை முறியடிக்கும் அல்லது தகர்க்கும் ஒரு

முயற்சியே புரட்சி எனப்படும். புரட்சிக்கு ஆயுதம் வேண்டும் என்ற தேவை இல்லை. புரட்சியை ஏற்படுத்துவதற்கு வெடிக் குண்டுகளும் பீரங்கிகளும் தேவை இல்லை. சமுதாயத்தின் சிந்தனைகளும் மதிப்புகளுமே புரட்சியை ஏற்படுத்தப் போதுமானவை ஆகும்.. எனவே, புரட்சி என்பது சமுதாயத்தின் மைய மதிப்புக்களில் (Central Values) ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும் என்பர்.

ஒரு புதிய ஒழுங்குமுறை ஏற்படுவது வரையிலும் புரட்சி சமுதாய அமைப்பைச் சிதறடித்து மரபு ரீதியான உறவை உடைக்கிறது. குடும்பம், அரசு. பொருளாதாரம் போன்ற சமுதாய நிறுவனங்களைப் புரட்சி சிதறடிக்கிறது. பழைய மதிப்புக்கள் பாதிப்புகளுக்குள்ளாகின்றன. எனவே, புரட்சி என்பது வலிமைமிக்க மற்றும் தீவிரமான மாற்றம் (drastic, radical change) என்று கருதப்படுகிறது.

புரட்சியின் காரணமாகப் பொருளாதாரம், சமயம், அரசியல் போன்றவற்றுள் ஒன்று அமையலாம். ஒரு நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்களின் தாழ்ந்த வாழ்க்கைநிலை மக்களைப் புரட்சிச் செயலுக்கு உள்ளாக்குகிறது. பொருளாதாரத் துன்பமும் (economic distress) புரட்சியின் காரணங்களுள் ஒன்றாக அமைகின்றது. பொருளாதாரத் தாழ்நிலையின் காரணமாக உருவாகும் பசி, இழிந்த வாழ்க்கைநிலை, இயலாமைநிலை முதலியன பிரஞ்சுப் புரட்சிக்கும் இரஷ்யப் புரட்சிக்கும் உரிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

பொருளாதாரக் காரணியைப் போன்றே அரசியல் சூழலும் புரட்சிக்குரிய காரணமாக அமையலாம். சுதந்திரம், சமத்துவம் போன்றவை அமெரிக்கப் புரட்சியின் காரணங்களாகியுள்ளமையைச் சான்றாகக் கூறுவர்.

கொடுமையான சாதிப் பிரிவுகள், வகுப்புப் பிரிவுகள் (class divisions) போன்ற காரணங்களால் சமுதாயத் தரப்பிரிவுகள் (social stratifications) தோன்றுகின்றன. இத்தரப்பிரிவுகளால் தாழ்த்தப்பெற்ற நிலையில் வாழும் மக்கள் மன அழுத்தத்திற்கு (tension) ஆளாகின்றனர். இதனால் மக்கள்

சமுதாய அநீதிகளையும் மரபு முறைகளையும் எதிர்த்துப் போராடுகின்றனர். இதுவும் புரட்சிக்குக் காரணமாக அமைகின்றது எனலாம். எனவே, முழுக் குழுக்களின் புதிய மதிப்புகளுக்கான தேவையே புரட்சியின் முன்தேவை (pre requistes) எனக் கருதப்படுகிறது.

வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகள், உடைமைகளின் பாதுகாப்பற்ற நிலை போன்ற சூழல்களில் மக்களின் வாழ்க்கையில் அச்சம் தோன்றுகின்றது. இச்சூழலிலும் புரட்சி தோன்றலாம்.

புரட்சி என்பது வன்மையான முறையிலோ அல்லது மென்மையான முறையிலோ அமையலாம். பல விவசாயப் புரட்சிகளும் தொழிற்புரட்சிகளும் புதிய புதிய தொழில் நுட்பங்களைக் கையாண்டமையின் காரணமாக அமைதியான முறையில் ஏற்பட்டுள்ளன. அதேவேளையில் இரஷ்யப் புரட்சி குருதி சிந்தி நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

புரட்சி ஏற்படுவதன் காரணங்களாக மேலும் சிலவற்றைக் குறிப்பிடுவர்.[23] அவையாவன :

1. நிலவுகின்ற ஒழுங்குமுறையில் (order) ஏற்படும் நிறைவின்மையின் காரணமாக உருவாகும் பரவலான தூண்டுதல் (wide spread provocation)

2. ஒருங்கிணைந்த அடக்குமுறையின் அடிப்படையில் எழும் பொதுக்கருத்து (collective repression).

3. தொந்தரவுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய சீர்திருத்தச் சட்டம்.

4. வெகுசனங்களைச் (mass) செயல்படுத்தத் தூண்டும் நம்பிக்கையான தலைமை.

5. பழைய செயல்களில் ஏற்பட்டுள்ள தளர்ச்சி போன்றனவற்றைக் குறிப்பிடுவர்.

நவீனமயமாதல்

நவீனமயமாதலின் (modernization) அடிப்படையான மூலக் கூறுகள் பல மனித நாகரிக வரலாற்றில் பல வியக்கத்தக்க

மாறுதல்களை உருவாக்கியுள்ளன. நவீன மயமாதல் என்பது சமுதாயப் பரிணாம வளர்ச்சி, தொழிற்புரட்சி, மேற்கத்திய மயமாதல் (westernization) போன்றவற்றிலிருந்து வேறுபட்ட, ஆனால் சமுதாய மாற்றத்தை உருவாக்கும் செயல்முறை என்று கருதப்படுகிறது.[23]

நவீனமயமாதல் என்பது வரலாற்று நிலையில் தொழில்மயமாதலின் காரணமாகப் பல்வேறு நாடுகளில் பரவிய சமுதாய, பொருளாதார, அரசியல் முறைகளில் ஏற்பட்ட மாற்றம் என்பதைக் குறிக்கும்.

சத்யேந்திர திரிபாதி நவீனமாதல் முறையின் இரண்டு முக்கியமான கூறுகள் சமுதாய மாற்றத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாகச் செயல்படுமாற்றை விளக்குகிறார்.[23] அவை :

1. அறிவியலும் தொழில் நுட்பமும் (Science and Technology)

2. சமுதாயத் திட்டமிடல் (Social Planning)

குப்புசாமி நவீனமயமாதலின் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாகக் கல்வி வசதி பெருகுதலைக் குறிப்பிடுகின்றார். மக்களுக்குக் கல்வி வசதி அளிப்பதன்மூலம் உலகளாவிய எழுத்தறிவு கிடைக்கிறது. பெரிய விகிதாச்சாரத்தில் ஆடவர்களும் பெண்களும் இடைநிலைக் கல்வியைப் பெறுகின்றனர். குழந்தைகள் தம் பெற்றோர்களால் தொழில்களில் பழக்கப்படுத்துவதற்குப் பதில் நிறுவனங்களில் பயிற்சி பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்கிறார். மேலும் அவர், நவீனமயமாதல் என்பது சமுதாய, அரசியல், பொருளாதார அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களை உள்ளடக்கியது என்றும் கூறுகிறார்.[24]

பெக்கர் (Becker) நவீனமயமாதலை மாற்றத்தைத் தடை செய்யும் புனிதமான பார்வையிலிருந்து (change resistance sacred outlook) மாற்றத்தை ஏற்கத் தயாராகும் மதச் சார்பற்ற பார்வைக்கு (change ready secular outlook) மாறும் மாற்றம் என்கிறார்.

நவீனமாதல் என்பது விவசாயத்துறையில் பிழைப்பாதார விவசாயத்திலிருந்து (subsistance agriculture) முன்னேறிய விதைகள், இரசாயண உரங்கள், டிராக்டர்கள் முதலியவற்றைப் பயன்படுத்தும் வாணிப உற்பத்திக்கு மாறும் மாற்றம் என்றும், தொழில் துறையில் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் சக்தியைப் பயன்படுத்துவதிலிருந்து இயந்திரங்களைப் பயன்படுத்துதல் என்பதற்கு மாறும் மாற்றம் என்றும் குப்புசாமி விளக்கம் தருகின்றார்.[25]

உண்ணுதல், குடித்தல், ஆடை அணிதல், நடனமாடுதல் முதலான நடத்தை முறைகளிலும், அறிவுத்துறைகளிலும், மனித நேயம், சமத்துவம், சமயச்சார்பின்மை ஆகியவற்றிலும் நவீனமயமாதல் காணப்படுகிறது என்று கூறும் ஸ்ரீநிவாஸ், நவீனமயமாதல் என்பதை இந்தியாவில் ஆங்கில ஆட்சி ஏற்பட்டபோது நிகழ்ந்த மாற்றங்களைக் குறிக்கப் பயன்படுத்துகிறார்.

ஆரியமயமாதல்

ஆரியமயமாதல் என்பது கீழ் இந்து சாதியினர் அல்லது பழங்குடியினர் அல்லது மற்ற குழுக்கள் தங்கள் வழக்கங்களையும், கருத்தாக்கங்களையும், வாழும் வழிகளையும் உயர்ந்த அல்லது இரு பிறப்பாளர் சாதியினரைப் போன்று மாற்றிக் கொள்வது ஆகும் என்று ஸ்ரீநிவாஸ் விளக்கம் அளிக்கின்றார். மேலும் அவர், தாழ்த்தப்பெற்ற சாதியினர் ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் சைவ உணவு, மதுவிலக்கு, மேல்சாதி மக்களின் சடங்குகள், தெய்வ வழிபாடு போன்றவற்றைப் பின்பற்றுவதன் மூலம் சமுதாயத் தரப்பிரிவில் உயர்நிலையை அடைய முயல்கின்றனர் என்றும் கூறுகிறார். ஆரியமயமாதல் மூலம் நடைபெறும் இயக்கம் தகுதி மாற்றத்திற்கு (positional change) வழிவகுக்கும்.ஆனால், ஆரியமயமாக்கம் அமைப்பு மாற்றத்தை (structural change) உருவாக்காது என்கிறார்.

தொழில் மயமாதல்

அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாகவும், அறிவியல் கண்டுபிடிப்புகளின் காரணமாகவும் உற்பத்தித் தொழில் நுட்பங்களில் ஏற்படும் மாற்றங்களின் செயல்முறையைத்

தொழில்மயமாதல் (industrialization) என்பர். தொழில்மயமாதலின் பயனுள்ள கூறு (beneficial aspect) நவீனமயமாதல் (modernization) ஆகும். தொழில் மயமாதல் புதியன கண்டுபிடித்தல், புதிய தொழில் நுட்பங்களின் அறிமுகம் ஆகியவற்றுடன் தொடர்புடையது ஆகும்.

இனி, சமுதாய மாற்றத்திற்கும் முற்கூறியனவற்றிற்கும் இடையேயுள்ள தொடர்புகளைச் சிறிது விளக்கலாம்.

சமுதாய மாற்றமும் சமுதாயப் பரிணாம வளர்ச்சியும்

சமுதாய மாற்றம், சமுதாயப் பரிணாம வளர்ச்சி ஆகிய இரண்டும் மாற்றத்தின் வடிவங்களாகத் திகழ்கின்றன. ஆனால், இரண்டும் ஒன்றல்ல. இரண்டிற்கும் இடையே அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பரிணாம வளர்ச்சி என்பது வளர்ச்சியின் ஒரு வகையான முறை ஆகும். சமுதாய மாற்றமும் சமுதாயப் பரிணாம வளர்ச்சியும் அவற்றின் தன்மை (nature), விகிதம் (rate), மாற்றத்தின் போக்கு (direction of change) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபடுகின்றன. சமுதாயத்தில் ஒரே நேரத்தில் பல மாற்றங்கள் நிகழலாம். சமுதாய மாற்றம் பல்வகை நேரியல் அமைப்பு (multi linear) உடையது. பரிணாம வளர்ச்சியோ நேரான மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சிக் கோட்டைக் (steady and continuous line of development) கொண்டது. இவ்வகையில் சமுதாய மாற்றமும் சமுதாயப் பரிணாம வளர்ச்சியும் வேறுபடுகின்றன.

சமுதாய மாற்றமும் சமுதாய முன்னேற்றமும்

சமுதாய மாற்றம் என்பது சில குறிக்கோள்களை எட்டுவதற்காக முயலும் இலக்குடன் கூடிய மேல் நோக்கிய போக்கு (upward direction) என்று பொதுவாகக் கூறப்படுகிறது. ஆனால், சமுதாய முன்னேற்றம் என்பது சமூகச் சீரமைப்பில் (social adjustment), சமுதாய நிலைக்கேற்ப முன்னோக்கியதாகவோ அல்லது பின்னோக்கியதாகவோ அமையலாம். இவ்வகையில் சமுதாய மாற்றமும் சமுதாய முன்னேற்றமும் வேறுபடுகின்றன.

சமுதாய மாற்றம், சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம்

பொதுவாகச் சமுதாய மாற்றம் என்பது சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் என்பனவற்றுடன் இணைத்துப் பேசப்படுகின்றது. பத்தாம் நூற்றாண்டு வரை சமுதாய மாற்றம் என்பதை இந்த நோக்கிலேயே அணுகினர். ஆனால், சமுதாய முன்னேற்றமும் சமுதாயப் பரிணாம வளர்ச்சியும் வேறுபட்டனவும் வேறுபடுத்தப்பட்டனவும் (distinct and distinguishable) ஆகும். சமுதாய மாற்றம் என்பது சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் என்ற இரண்டையும்விடப் பரந்துபட்டது என்று கருதப்படுகிறது.

சமுதாய முன்னேற்றம் குறிப்பிட்ட காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. சமுதாய முன்னேற்றம் மாற்றத்தின் ஒரு வடிவம் ஆகும். ஆனால், அதுவே சமுதாய மாற்றம் ஆகாது. சமுதாயப் பரிணாம வளர்ச்சி என்பது சமுதாய முன்னேற்றத்தின் ஒரு வடிவம் ஆகும்.

சமுதாய மாற்றமும் பண்பாட்டு மாற்றமும்

எல்லாச் சமுதாய மாற்றங்களும் பண்பாட்டால் இயக்கப்படுகின்றன. எனினும், சமுதாய மாற்றங்கள் முழுப் பயன்பாட்டு முறையையும் உள்ளடக்கியிருக்கும் என்று கூறமுடியாது. பண்பாடு நிறுவன மாற்றங்களுக்கு (institutional change) உரிய அடிப்படையான ஊற்று (main spring) என்றும், மனிதச் சமுதாயம் பண்பாட்டு நிலையில் முன்னமே தீர்மானிக்கப்படுகிறது. எனினும் சமுதாய மாற்றம் பண்பாட்டு மாற்றத்தின் பகுதியே ஆகும் என்றும் மேக்சு வெபர் கருதுகின்றார்.

சமுதாயவியலாளர்களில் சிலர் சமுதாயம் என்பது பண்பாட்டின் மேற்கட்டுமானம் (super structure) என்றும், பண்பாட்டு நலன்களை உள்ளடக்கிய சமுதாய நிலைகளிலிருந்து எல்லா மாற்றங்களும் ஏற்படுகின்றன என்றும், சமுதாய மாற்றம் பண்பாட்டு மாற்றத்தின் ஒரு பகுதியே என்றும் கருதுகின்றனர். சமுதாய மாற்றம் பல்வேறு நிறுவனங்கள் மற்றும அவற்றின் செயல்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பதாய் அமைகின்றது என்றும் கருதப்படுகிறது.

சமுதாய மாற்றத்தின் ஆதாரங்கள் (Sources of Social Change)

சமூகவியலாளர்கள் சமுதாய மாற்றத்திற்குரிய ஆதாரங்களாகப் பின்வருவனவற்றைக் கூறுகின்றனர்.

1. அகத்தூண்டல் செயல்கள் (internally induced actions)
2. புதிய மாறுதல்கள் (innovations)
3. மற்றவர்களால் மேற்கொள்ளப்படும் இருவேறுபட்ட முறைகளின் கூட்டிணைவு. இது பரவுதல் (diffusion) எனப்படும்.
4. நெருக்கடி (Cricis)
5. முரண் (Conflict)

முதலியன கூறப்படுகின்றன.

புதிய மாறுதல்கள் என்பன ஏற்கனவே காணப்படும் மூலக்கூறுகளை (elements) .இணைப்பதால் உருவாகும் புதிய மூலக் கூறுகள் ஆகும். இதன்மூலம் ஏற்படும் சமுதாய மாற்றத்தின் வேகமானது பண்பாடு மற்றும் சமுதாய அடித்தளங்களின் கூட்டுடன் நெருங்கிய தொடர்புடையதாக அமையும். புதிய மாறுதல்கள் இருநிலைகளில் ஏற்படும்.

1. முற்றிலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் புதிய மூலப்பொருள் (discovery)
2. ஏற்கனவே உள்ள மூலப்பொருள்களால் புதிய மூலப்பொருள் உருவாக்கப்படல் (invention)

முதல்வகைக்குச் சான்றாகக் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததைக் கூறலாம். இரண்டாவது வகைக்குச் சான்றாகக் கணினியைக் கண்டுபிடித்ததைக் கூறலாம். ஆனால், இந்த இரண்டு மாற்றங்களும் உருவமாகவோ அல்லது அருவமாகவோ அமையலாம்.

புதிய மாறுதல்கள் சமுதாயத்தின் உணர்வுமயமான தேவையின் (perceived needs) காரணமாகவும், மெய்ப்பிக்கத் தக்கவை (demonstrability) என்பதன் அடிப்படையிலும் ஏற்கப்படும். புதிய மாறுதல்களால் சமுதாயத்தின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லையெனில் தேவை ஏற்படும் வரையிலும் இப்புதிய மாறுதல்கள் மறுக்கப்படும்.

மனிதச் சமுதாயம் பண்பாட்டுக் கூறுகளைக் கடன் வாங்கும் இயல்புடையது. அதாவது, மனிதச் சமுதாயம் வளர்ச்சியின் பல்வேறு கூறுகளை ஏற்றுக்கொள்கிறது. இவ்வகையில் ஒரு குழுவினர் அல்லது ஒருவர் பிற குழுவினர் அல்லது மற்றொருவரிடமிருந்து சமுதாய மதிப்புகள், சமுதாய நியமங்கள் (social norms) போன்ற பண்பாட்டுக் கூறுகளைக் கடன் வாங்குகின்றனர். அப்போது பரவுதல் அல்லது சிதறுதல் (diffusion) வழியாக மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வகையில் பரவுதல் என்பது சமுதாய மாற்றத்தின் ஆதாரமாகத் திகழ்கின்றது. பண்பாட்டுக் கூறுகளில் உருவப் பண்பாட்டுக் கூறுகளும் அருவப் பண்பாட்டுக் கூறுகளும் எளிதில் கலந்துவிடுகின்றன என்பர்.

நெருக்கடியும் முரண்களும் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. சமுதாய அமைப்பையும் சமுதாய உறவுகளையும்கூட இவை மாற்றியமைக்கின்றன. சான்றாகக் காரல் மார்க்சின் கருத்தைக் கூறலாம். பொருளாதாரச் சலுகைகளை அனுபவிக்கும் குழுக்கள் என்ற நிலையில் முதலாளிகள் தம் சொந்த நலன்களுக்காக உழைக்கும் பிரிவினரைச் சுரண்டுகின்றனர். இதனால் தொழிலாளி - முதலாளிப் போராட்டங்கள் நிகழ்கின்றன. இப்போராட்டம் வகுப்புகளற்ற சமுதாயம் (classless society) அமைவதற்கு வழி வகுக்கின்றது. இதனால், சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன.

சமுதாய மாற்றம் பற்றிய கொள்கைகள் (Theories of Social Change)

பல்வேறு காலங்களில் பல்வேறு சமூகவியலாளர்களால் சமுதாய மாற்றம் பற்றிய கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை இவண் சுருக்கமாகக் காட்டலாம். காரல் மார்க்சு பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கை உடையவர். உற்பத்தி நோக்கம் (mode of production) சமுதாய மாற்றத்தின் காரணமாகிறது என்பது இவர் கருத்து ஆகும்.

திரஸ்டின் வெப்லன் (Throstein Veblan) என்பார் பழக்கப்படுத்துதல் (habituation), மன ஒழுங்கு (mental discipline) ஆகிய இரண்டும் சமுதாய மாற்றத்தின் மூலங்கள் என்கிறார்.

இவர் கொள்கைப்படி பழக்கத்தின் வழி என்பது சிந்தனையின் வழி ஆகும். பழக்கப்படுத்துதல் என்பது பொருளாதார முறைமைகளை அல்லது அமைப்புகளை உருவாக்கும் பொருள் முதல் சூழல்களுடன் (material environment) தொடர்பு உடையது ஆகும். இது பண்பாட்டுச் சூழலை அடிப்படையாகக் கொண்டது என்கிறார். மேலும் அவர், சூழ்நிலைகளுக்கு ஏற்ப மனத்தை அமைத்துக் கொள்ளும் செயல் முறையே அடிப்படையில் சமுதாயப் பரிணாம வளர்ச்சி என்கிறார்.

மாற்றங்களுக்கு உள்ளாகும் தொழில் நுட்பங்களால் ஒவ்வொரு காலத்திலும் சிறப்பான பழக்கங்கள் உருவாகின்றன. தொழில் நுட்பங்கள் சமுதாயத் தேவை, பழக்கப்படுத்தல் முதலியனவற்றால் உருவாகும் நிறுவன நடைமுறைகளால் இணைக்கப்படுகின்றன. வெப்லன் கருத்துப்படி பண்பாட்டு வளர்ச்சி என்பது பழக்கப்படுத்துதலுடன் தொடர்புடைய கூட்டு இணைவு (Cumulative sequence of habituation) என்பது ஆகும்.

கோம்டி என்ற சமூகவியல் அறிஞர் சமுதாய மாற்றத்திற்கு மனத்தின் வளர்ச்சி காரணம் என்கிறார்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் வேறுபாடுகளின் ஒழுங்குமுறையான நடவடிக்கைகளே (Cosmic process of differentiations) சமுதாய மாற்றத்தை உருவாக்குகின்றன என்கிறார்.

இவர்களுக்குப் பின்னர் வந்த ஹோப்ஹவுஸ், டாயன்பி, கொரோவ்கின் போன்றோர் சமுதாயக் காரணிகளின் கலவையே சமுதாய மாற்றத்தின் காரணம் என்றனர்.[26]

ரிச்சர்டு ஆப்லிபாம் (Richard Applebaum) என்பார் சமுதாய மாற்றக் கோட்பாடுகளை நான்கு நிலைகளில் வகைப்படுத்துகிறார்.[27] அவை,

1. செயல்பாட்டுக் கொள்கை (Functional Theory)
2. போராட்டக் கொள்கை (Conflict Theory)
3. பரிணாம வளர்ச்சிக் கொள்கை (Evolutionary Theory)
4. சுழற்சிக் கொள்கை (Cyclical Theory)

என்பன ஆகும். இனி, இவை பற்றிச் சிறிது காண்போம்.

செயல்பாட்டுக் கொள்கை

செயல்பாட்டுக் கொள்கை என்பது சமூகத் தோரணி (social pattern) அதன் கடந்த வரலாற்று முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், சமுதாயத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அதன் தற்கால இணைவை (Sequence) அடிப்படையாகக் கொண்டு புரிந்து கொள்ளப்படும் என்ற நம்பிக்கையில் உருவாக்கப்பட்டது என்று கருதுவர்.

இக்கொள்கை சமுதாயத்தை உருவாக்கும் ஒவ்வொரு பகுதியின் பங்களிப்பையும், செயல்பாடுகளையும் தழுவியதாக அமைகிறது. இது சமுதாய ஒருமைப்பாடு (social integrations), சமுதாய நிலைப்புத் தன்மை (social stability), சமுதாய ஒழுங்கு (social order), கூட்டுறவு (Co-operation) முதலியவற்றை வெளிப்படுத்தும். இக்கொள்கையை முதலில் வெளியிட்டவர் ஸ்பென்ஸர் ஆவார். இவர் வாழ்கின்ற உயிர்ப் பொருள்களைச் (living organisms) சமுதாயத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். இவர் காலத்தவராகிய டர்க்கியாம் இப்பார்வைக்குக் கூடுதலான பங்களிப்பு அளித்துள்ளார்.

போராட்டக் கொள்கை

இக்கொள்கை சமுதாயத்தில் காணப்படும் போட்டி (Competition), மாற்றம் (Change), வலுக்கட்டாய நிலை ஆகியவற்றைத் தழுவியது ஆகும். கார்ல் மார்க்சு போன்றோரின் சிந்தனைகள் இக்கொள்கையின் அடிப்படையில் அமைந்தன என்று கருதுவர். சமுதாயத்தின் இயல்பானது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமையும். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் வகுப்பு முரண்கள் (class conflicts) தவிர்க்க இயலாதன ஆகும் என்று மார்க்சு கருதினார். இவ்வடிப்படையில் ரைட் மில்ஸ் (Wright Mills), ரால்ப் டார்ம்டார்ப் (Ralph Dahrmdorf), லீவிஸ் கோசர் (Lewis Coser) போன்றோர் பொருளாதாரக் காரணிகள் என்ற நிலையில் மட்டும் நின்றுவிடாது, மார்க்சின் பார்வையைச் சமுதாயத்தின் பிற கூறுகளுக்கும் விரிவுபடுத்தினர்.

பரிணாம வளர்ச்சிக் கொள்கை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இக்கொள்கை உருவானது. சமுதாயம் பல வரிசைகளைக் கடந்து செல்கின்றது என்பது இக்கொள்கையாளர்களின் கருத்து ஆகும். இக்கொள்கையாளர்கள் உட்சிக்கல்கள் (Complexity) அதிகமாகும் நிலைகளின் வழியான முழுவளர்ச்சியை நோக்கி ஒவ்வொரு சமுதாயமும் முன்னேறுகின்றது எனக் கருதினர். கோம்டி, ஸ்பென்ஸர் போன்றோர் சமுதாயங்கள் முன்னேறிச் செல்லும் பல்வேறு நிலைகளை இனங்காண முயன்றனர். மனித வரலாற்றில் ஒரு கரு (theme) புதைந்து கிடக்கின்றது. அது எளிமை என்ற நிலையிலிருந்து சிக்கல் என்ற நிலைக்கு (simple to complex) நகர்கின்றது. எனவே முதலில் ஏற்படும் வளர்ச்சி பின்னர் நிகழும் வளர்ச்சிகளுக்கு எளிமையானதாக இருக்கும் என்பது இவர்கள் கருத்து ஆகும்.

சுழற்சிக் கொள்கை

ஆஸ்வால்டு ஸ்பெலங்கர் (Oswald Splenger), ஆர்னால்டு டாயன்பி, பிளேட்டோ, கொரோவ்கின் முதலியோர் சுழற்சிக் கொள்கையை வெளியிட்டவர்கள் ஆவர்.

ஆஸ்வால்டு ஸ்பெலங்கர் நாகரிகம் பிறக்கின்றது; முதிர்கின்றது ; வீழ்ச்சி அடைகின்றது ; இறக்கின்றது என்றார். நாகரிகத்தின் வாழ்க்கைச் சக்கரம் மக்களின் வாழ்க்கைச் சக்கரத்தைப் போன்று சுழன்று கொண்டிருக்கும். அதுபோலச் சமுதாயமும் சுழன்று கொண்டிருக்கும் என்றார்.

டாயன்பி நாகரிகம் மக்களுடைய சூழலில் சவால்கள் ஏற்படும்போது பிறக்கின்றது என்கிறார்.சூழல்களில் சவால்கள் ஏற்கப்படவில்லை என்றால் அல்லது ஒரு சமுதாயம் சவால்களை ஏற்கவில்லை என்றால் அச்சமுதாயம் முதல் இடத்தை அடையத் தவறுகிறது அல்லது பிறழ்கிறது என்பது இவர் கருத்து ஆகும்.

மிதிவண்டியின் சக்கரம் மேலும் கீழும் சுழன்று கொண்டு வருகின்றது. இது போன்றே வாழ்க்கையிலும் பிறப்பு, இறப்பு என்பன நிகழ்கின்றன. இந்நிலை சமுதாய மாற்றங்களுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. சமுதாயத்திலும் முன்னோக்கிய அல்லது பின்னோக்கிய இயக்கம் உள்ளது.

பிளேட்டோ போன்றோர் ஒவ்வோர் இயற்கை நிகழ்ச்சிகளும் முடிவற்ற நிலையில் நடைபெறுகின்றன. திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன என்று கருதினர்.

சக்கரம் போன்று சமுதாயங்களில் மாற்றம் என்பது சுழன்று கொண்டிருக்கும் என்பது இக்கொள்கையாளர்களின் கருத்து ஆகும்.

இவை தவிர நேர்கோட்டுக்கொள்கை (Linear theory) என்பதும் சமுதாய மாற்றக் கொள்கைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. Linear என்பதற்கு கோடு அல்லது வரி அல்லது திசை என்று பொருள். இது பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் நடைபெறும் சமுதாய மாற்றத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றனர்.

சமுதாய மாற்றம் நடைபெறும் முறைகள் (Pattern of Social Change)

மேக் ஈவர் (Mac Iver) என்ற சமூகவியல் அறிஞர் எல்லா மாற்றங்களையும் அளவைகளைக் கொண்டு அளவிடமுடியும் என்றும் பண்பாட்டு மாற்றங்களை மட்டும் அளவிடமுடியாது என்றும் கருதுகின்றார். ஏனெனில் பண்பாட்டு மாற்றம் என்பது பண்பு (Quantative) அடிப்படையானது ஆகும். இதற்குச் சான்றுகளாக மேக் ஈவர் கலை, இலக்கியத் துறைகளைக் கூறுகின்றார். இத்துறைகளில் நிகழும் மாற்றங்கள் ஆழ்ந்த

உணர்ச்சியின் அடிப்படையானவை ஆகும். இம்மாற்றங்களைக் கண்களால் கண்டு உணரலாம். ஆனால், அளவை அடிப்படையில் அல்லது எண்ணிக்கையின் அடிப்படையில் கலை, இலக்கியத் துறைகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடமுடியாது என்கிறார்.[28]

மேக் ஈவர் சமுதாய மாற்றம் நடைபெறும் முறைகளை மூன்று நிலைகளில் காட்டுகின்றார். அவை,

1. படிப்படியாகத் திரண்டுவரும் மாற்றம் (Cumulative change)
2. சில கூறுகளில் ஏற்படும் மாற்றம்
3. குறிப்பிட்ட காலம் வரையிலும் கூடத் தொடர்ச்சியாக இல்லாத மாற்றம்.

என்பன ஆகும.

படிப்படியாகத் திரண்டுவரும் மாற்றம் என்ற முறையில் மாற்றத்தில் ஒரு தொடர்ச்சி, போக்கு, திசை என்பனவற்றைக் காணமுடியும். பின்னர் நிகழும் முன்னேற்றங்கள் முன்னர் உள்ள முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு அமையும். எனவே, இதனை மேல்நோக்கி வளரும் ஒரு வளைவாகக் கொள்ளலாம் என்று மேக் ஈவர் கருதுகின்றார்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் தம் பரிணாம வளர்ச்சிக் கொள்கையிலும் ஹோம்ஹவுஸ் தம் சமுதாய முன்னேற்றக் கொள்கையிலும் சமுதாய வளர்ச்சி, சமுதாய மாற்றம் என்பன இம்முறையிலேயே நிகழ்கின்றன என்கின்றனர்.

அடுத்தமுறை சில கூறுகளில் ஏற்படும் மாற்றம் ஆகும். இம்முறையில் சமுதாய மாற்றத்தில் ஒரு மேல்நோக்கிய வளர்ச்சி ஏற்பட்டவுடன் பின்னோக்கிய போக்கும் இடம்பெறும். இம்முறையைப் பொருளாதார வளர்ச்சி, மக்கள்தொகை வளர்ச்சி ஆகியவற்றிலும் காணமுடியும். நகரங்கள், பண்பாடு முதலியன வளரும். பின்னர், இவை வீழ்ச்சியுறும் என்கின்றார்.

முன்னர்க் கூறிய இவ்விரண்டு முறைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளையும் மேக் ஈவர் சுட்டுவதைக் காண லாம். முந்தைய முறையில் நடைமுறை நிரந்தரம் (Practical

Certernity) உள்ளது. இரண்டாம் முறையில் இது உறுதி இல்லை. கீழ் நோக்கியும் வர வாய்ப்பு உள்ளது என்கின்றார்.

மேக் ஈவர் கூறும் மூன்றாவது முறை இரண்டாவது முறையைப் போன்றது என்கிறார். ஆனால், இம்முறையில் சிறிது காலம்கூடத் தொடர்ச்சியான வளர்ச்சி காணப்படாது. இது மேலும் கீழும் செல்லும் கடல் அலைபோன்றது என்று வருணிக்கின்றார். ஸ்பெங்லர், டாயன்பி போன்றோர் சமுதாயங்களும் நாகரிகங்களும் இம்முறையிலேயே அமைகின்றன என்கின்றனர். இதற்குச் சான்றுகளாக ஆடைகள் (dresses), பாணி (fashion) போன்றவற்றைச் சுட்டுகின்றனர்.

முற்சுட்டிய மூன்று முறைகளையும் பின்வருமாறு காட்டலாம்.



சமுதாய மாற்றங்கள் நிகழும் முறையினை மேலும் சில நிலைகளில் சமூகவியலாளர்கள் விளக்குவர். அவை பற்றிச் சிறிது காண்போம்.

இயற்கை மாற்றம் (Natural change)

இயற்கை மாற்றம் மெதுவாக நிகழும். பூமியின் உருவாக்கம், பௌதிகச் சூழல்களில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றை இயற்கை மாற்றத்திற்குச் சான்றுகளாகக் காட்டுவர். இம்மாற்றம் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளாக நீண்ட காலமாக நடைபெறும்.

உடற்கூறு மாற்றம் (Biological change)

உடற்கூறு மாற்றம் என்பது புரோட்டோபிளாசம் மற்றும் அமீபியாவிலிருந்து மனிதன் வரையிலும் உள்ள வாழ்க்கை முறைகளின் உறுப்புக்களின் வளர்ச்சியைக் குறிப்பதாகக் கூறுவர். இம்மாற்றமும் மெதுவாகவே நிகழும். ஆனால், இயற்கை மாற்றத்துடன் ஒப்பிடும்போது இதன் வேகம் சற்று அதிகம் எனலாம்.

தொழில்நுட்ப மாற்றம் (Technological change)

இது புதிய கண்டுபிடிப்புகளையும் அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்வதையும் குறிப்பதாகக் கூறுவர். பழங்காலம் முதல் இக்காலம் வரையிலும் தொழில் நுட்பத்தில் ஒரு தொடர்ச்சி உள்ளது. ஒரு சமுதாயத்தில் பல தொழில் நுட்பச் சக்திகளின் இணைவைக் காணமுடியும். தொழில் நுட்பத்தில் ஏற்படும் மாற்றம் சமுதாய மாற்றத்திற்குப் பெரும் பங்காற்றுகின்றது.

சமுதாய மாற்றத்திற்கான காரணிகள் (Factors of Social Change)

சமூகவியல் அறிஞர்கள் சமுதாய மாற்றம் நிகழ்வதற்குரிய காரணிகளை ஆராய்ந்து கண்டுள்ளனர். பின்வரும் காரணிகள் சமுதாய மாற்றத்திற்குத் துணை நிற்கின்றன என்று கருதுகின்றனர். அவையாவன :

1. தொழில் நுட்பக் காரணிகள் (Technological Factors)
2. பொருளாதாரக் காரணிகள் (Economic Factors)
3. மக்கள் தொகைக் காரணிகள் (Demographic Factors)
4. நிலவியல் காரணிகள் (Physical Factors)
5. உயிரியல் காரணிகள் (Biological Factors)
6. சட்டம் (Legislation)
7. பண்பாட்டுக் காரணிகள் (Cultural Factors)
8. அறிவியல் வளர்ச்சி (Scientific Development)

என்பன ஆகும். இனி, அவை பற்றிக் காண்போம்.

தொழில் நுட்பக் காரணிகள்

பெரும்பாலான சமூகவியல் அறிஞர்கள் தொழில்நுட்பம் சமுதாய மாற்றத்தின் இன்றியமையாத காரணி என்று கருதுகின்றனர். தொழில் நுட்ப வளர்ச்சி பல கோணங்களில் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. மேலும், அது புதிய வாழ்க்கைச் சூழலையும் உருவாக்குகின்றது.

மக்களால் உருவாக்கப்படும் பண்பாட்டு மதிப்புகள் (Cultural values) பல பெரும்பாலும் தொழில்நுட்ப வழிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே, தொழில்நுட்ப வளர்ச்சி ஒரு

சமுதாயத்தின் இயல் நிகழ்ச்சி (Phinomenon) என்றும் கருதப்படுகிறது.

மனிதன் கருவிகளை உருவாக்கும் விலங்கு (tool making animal) என்று கருதப்படுகின்றான். உணவுக்காகவும், கலை நோக்கத்திற்காகவும், பாதுகாப்புக்காகவும், வாழ்க்கைத் தேவைகளுக்காகவும் பல கருவிகளை உருவாக்குகின்றான். பழங்காலம் முதல் இக்காலம் வரையிலும் சமுதாயத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியைக் காணமுடிகின்றது. மனிதன் கருவிகளுக்கு எஜமானனாக விளங்கும் அதே நேரத்தில் கருவிகளுக்கு அடிமையாகவும் விளங்குகிறான். புதிய தொழில் நுட்பக் கருவிகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் எஜமானன் ஆகின்றான். அவற்றைப் பயன்படுத்துவதன்மூலம், அவை இன்றி இயங்கமுடியாது என்ற சூழலுக்கு உள்ளாவதன்மூலம் அடிமையாகவும் ஆகிவிடுகிறான்.

சமூகவியலாளர்கள் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளைச் சமுதாய, பண்பாட்டு மாற்றங்களை விரைவுபடுத்தும் காரணியாகக் கருதுகின்றனர். சான்றாகச் சக்கரம், பானை, துப்பாக்கித் தூள் (gun powder), அச்சு இயந்திரம், நீராவி இயந்திரம், தொலைபேசி, மோட்டார் வாகனங்கள், ஆகாயவிமானம், வானொலி, அணுக்குண்டு முதலியன கண்டுபிடித்தமையால் சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையைக் காட்டுகின்றனர். வானொலி கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக மக்களிடையே பொதுவான பேச்சுத் தரம் (Common Standard of Speech) ஏற்பட்டுள்ளது. இதனால், சமுதாயத் தரப்பிரிவுகளின் கீழ் வாழும் மக்களிடையே பொதுப் பேச்சுமுறை உருவாகியுள்ளமை சுட்டத்தக்கதாகும். இதைப்போன்று போக்குவரத்துச் சாதனங்களின் கண்டுபிடிப்பால் சமுதாய மக்களிடையேயுள்ள உறவுகளின் அளவு பரவலாகியுள்ளமையையும் அறியமுடிகின்றது.

ஆக்பர்ன் (Ogburn) என்ற சமூகவியல் அறிஞர் தானியங்கி மோட்டார் வாகனம் (self start motor car) கண்டுபிடிக்கப் பட்டமையால் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா முதலிய நாடுகளில் பெண்கள் விடுதலை பெறும் வாய்ப்பு ஏற்பட்டது என்று கருதுகிறார். மேலும் அவர், மின்சாரம், சமையல் எரிவாயு

ஆகியவற்றின் கண்டுபிடிப்பால் பெண்களின் அடுக்களை வேலைகள் குறைந்துவிட்டன என்றும் கருதுகிறார்.[29]

தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாகச் சமுதாய மக்களின் கருத்துக்கள் (ideas), நம்பிக்கைகள், மரபுகள் போன்றனவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றும் சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். தொழிற்சாலைகள், இரயில் பெட்டிகள், மோட்டார் வாகனங்கள் முதலியன மூலம் சமுதாயத்தில் காணப்படும் சாதிவேறுபாடுகள், வகுப்புப் பிரிவுகள் ஆகியவற்றின் இறுக்கம் குறைந்து, நெகிழ்ச்சி ஏற்பட்டுள்ளன.

தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக மக்களின் செயலெதிர் செயல்களிலும் (interactions) பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் கருதுகின்றனர்.

கார்ல் மார்க்சு தொழில் நுட்ப வளர்ச்சியில் நான்கு படிநிலைகள் ஏற்பட்டுள்ளமையைச் சுட்டுகிறார். அவையாவன:

1. நாடோடி
2. விவசாயம்
3. நிலப்பிரபுத்துவம்
4. தொழில் மயம்

என்பன ஆகும்.

தொழில் நுட்பம் மனித இனங்களுடன் தொடர்பு உடைய எல்லா உறவுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றமு. தொழிற்புரட்சிகளால் பழைய முறைகளும் பழைய மரபுகளும் மாற்றம் அடைகின்றன. தொழில் நுட்ப வளர்ச்சியால் சாதகமான மற்றும் பாதகமான மாற்றங்களும் ஏற்படுகின்றன.

இக்காலச் சமுதாயத்திலுள்ள தொழில் நுட்பம் இயந்திரமயமாக்கம் (mechanisation) ஆகும். இது இக்காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய புதுமையும் எங்கும் ஊடுருவும் தன்மையும் உடையது என்று மம்போர்டு (Mumford) கருதுகின்றார். மரபுவழியில் வந்த கருத்துக்கள், நம்பிக்கைகள், மதிப்புகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பதிலும், சமுதாய ஒழுங்கில் நேர்முகமான மற்றும் மறைமுகமான மாற்றங்களை

உருவாக்குவதிலும் இயந்திரமயமாக்கம் பெரும் பங்காற்றுவதாகவும் கருதுகின்றனர்.

தொழில் நுட்பத்திலும் நிறுவன அமைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படும்பொழுது பொருளாதார நிலையிலும் மாற்றங்கள் நிகழும். அதன் விளைவாக மக்களுடைய விருப்பங்களில் மாற்றங்கள் ஏறபடும். தொழில் முறைகள் மரபு ரீதியான தொழில் நுட்பங்களை மாற்றுகின்றன. இதனால், பெரும்பாலான சமுதாய நிறுவனங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்வாறு தொழில் நுட்பம் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் இன்றியமையாக் காரணிகளில் ஒன்றாகத் திகழ்கின்றமை புலனாகின்றது.

பொருளாதாரக் காரணிகள்

மக்கள் தம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுக்காக உழைத்தாலும், உற்பத்தி (production), பகிர்வு (distribution) முதலியனவும் மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. மனித வாழ்க்கையின் அடிப்படையாகப் பொருளாதார வாழ்க்கை திகழ்கின்றது. ஒரு சமுதாயத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அச்சமுதாயத்தின் பண்பு தீர்மானிக்கப்படும் என்பர்.

கார்ல்மார்க்சு சமுதாய மாற்றத்தின் பொருள் முதல் வாதத்தை ஆராய்கின்றார். தொழில் நுட்பத்தில் ஏற்படும் வளர்ச்சி நிலைகள் பொருளாதார முறையை உருவாக்குகின்ற உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள், நிறுவனங்கள் ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றன என்பது அவர் கருத்து ஆகும். எல்லாச் சமுதாய உறவுகளுக்கும் அடிப்படையாக உற்பத்தி உறவு அமைகின்றது. சமுதாய வாழ்க்கையில் உண்மைப் பொருளே (real content) பொருளாதார வரிசைதான் (economic order) என்கிறார்.

மேலும் அவர், பண்டமாற்று, வாணிபம், பரிமாற்றம், சொத்துரிமை என்பன மூலம் சமுதாய நியமங்கள் உருவாக்கப்படுகின்றன என்றும் கூறுகிறார். இந்த நியமங்களில் ஏற்படும் மாற்றங்கள் சமுதாயக் கட்டுமானங்கள் (fabrics of the

society) முழுவதிலும் மாற்றங்களை உருவாக்குகின்றன. உற்பத்தி நோக்கம் சமுதாய, அரசியல் மற்றும் பிற கூறுகளை உள்ளடக்கிய வாழ்க்கையின் பொதுப்பண்புகளைத் தீர்மானிக்கின்றது என்பதும் அவர் கருத்து ஆகும்.

ஒரு சமுதாயத்தில் காணப்படும் உற்பத்தி உறவு அல்லது சொத்து உறவுக்கும் புதிய உற்பத்தி உறவுக்கும் இடையே முரண்பாடுகள் எழும்போது சமுதாயத்தில் புரட்சி தோன்றும். இச்சமயத்தில் பழைய சமுதாயங்களை ஆதரிக்கும் குழுக்கள், புதிய நோக்கங்களுக்காகப் போராடும் குழுக்கள் என வேறுபாடுகள் எழுகின்றன. இதனால் வகுப்புப் போராட்டம் தவிர்க்க இயலாததாகிவிடுகிறது என்றும் கூறுகிறார்.[30]

எனவே, பொருளாதார நிறுவனங்கள் சமுதாய மாற்றத்தின் அறுதி செய்யும் கூறுகள் என்பர். மேலும், எல்லாப் பண்பாட்டு மதிப்புகளும் பொருளாதார நிலைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் கருதுவர். எனவே, சமுதாய மாற்றத்திற்குரிய இன்றியமையாக் காரணிகளில் ஒன்றாகப் பொருளாதாரமும் கருதப்படுகிறது எனலாம்.

மக்கள் தொகை

சமுதாய மாற்றத்திற்குரிய மற்றொரு காரணியாக மக்கள் தொகையும் கொள்ளப்படுகிறது. மக்கள் தொகையின் அளவிலும் கலவையிலும் (Composition) ஏற்படும் மாற்றம் சமுதாயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்று கருதப்படுகின்றது.

மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு நாட்டின் பொருளாதார நிலையைப் பாதிக்கும். மக்கள் தொகைப் பெருக்கம் அதிக உற்பத்தி, அதிக நுகர்வு, வெளிநாட்டு வாணிபம் அதிகரிப்பு ஆகிய விளைவுகளை உண்டாக்குகின்றது.[31]

மேலும், மக்கள் தொகைப் பெருக்கமானது சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் பாதிக்கின்றது. அதிக மக்கள் தொகை மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் (standard of living) குறைத்துவிடும். இதைப் போன்று பிறப்பு, இறப்பு விகிதங்களும் சமுதாயத்தில் பல பாதிப்புகளை

ஏற்படுத்துகின்றன. இவ்வகையில் சமுதாய மாற்றத்தின் விகிதமானது ஒரு நாட்டின் பிறப்பு விகிதத்துடனும் இறப்பு விகிதத்துடனும் தொடர்புடையதாய் அமைகின்றது. இவ்வகையில் மக்கள் தொகையும் சமுதாய மாற்றத்திற்குரிய காரணிகளில் ஒன்றாக அமைவதை அறியலாம்.

நிலவியல் காரணிகள்

பருவநிலை (climate), பூமியின் பரப்பு, நீர், காலநிலை (season), புயல், நிலநடுக்கம் என்பன போன்ற மனித வாழ்க்கையில் நிரந்தரமாகவும் சுதந்திரமாகவும் காணப்படும் அனைத்து இயற்கைச் சூழல்களையும் உள்ளடக்கியதாக நிலவியல் காரணி திகழ்கின்றது.

நிலவியல் காரணிகள் சமுதாய மாற்றங்களை நேரடியாகத் தீர்மானிக்கும் காரணிகள் அல்ல. எனினும், அவை சமுதாய மாற்றத்தின் நிரந்தரச் சூழல்கள் (permanent conditions) என்று கருதப்படுகின்றன.

நிலவியல் காரணிகள் மக்களின் வாழ்க்கை நோக்கங்களை மறைமுகமாகத் தீர்மானிக்கும் சக்திகளாக உள்ளன. பக்கிள் (Buckle) மற்றும் ஹட்டிங்க்டன் (Huutington) என்பார் இயற்கை வளங்களும் காலநிலைகளும் மக்களுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன என்று கருதுகின்றனர்.

இயற்கை என்பது மனிதனின் முழுக்கட்டுப்பாட்டினுள் அடங்காதது. அது பரந்த சூழலைக் கொண்டது. மனிதன் இயற்கைமீது கொள்ளும் ஆளுமை ஒருபோதும் முழுமை அடையாது. வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம், பஞ்சம், புயல் போன்றவை என்றும் மனிதக்கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. இவை பல நிலைகளில் சமுதாயத்தைப் பாதிப்பதுடன், மக்களின் வாழ்க்கை நோக்கங்களை மாற்றியமைக்கவும் செய்கின்றன. நிலவியல் சூழல்களுக்கேற்ப மக்களின் உணவுப் பழக்கங்களும் மக்கள் மேற்கொள்ளும் தொழில்களும் அமைகின்றன. இயற்கை எங்கும் ஊடுருவும் தன்மையுடையதாகலின் அது சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது என்பர்.

உயிரியல் காரணிகள்

உயிரியல் காரணிகள் சமுதாய மாற்றத்திற்கு வழி வகுக்கின்றன என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். சமூகவியலாளர்கள் சிலர் உயிரியல் காரணிகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்துச் சமுதாய மாற்றத்தை ஆராய்கின்றனர். உயிரியல் காரணிகளுள் மரபு (heridity), இயற்கைத் தேர்வு (natural selection), மக்கள் தொகை என்பனவும் அடங்கும் என்பர்.

இயற்கைத் தேர்வு சமுதாயத் தேர்வின் பதிலியாகத் திகழ்கின்றது. சமுதாயத்தேர்வு, இயற்கைத் தேர்வைக் கட்டுப்படுத்தும் ஒரு முறை என்றும் கருதப்படுகிறது. இயற்கைத் தேர்வு இறப்புச் செயல்பாடுகளை மெதுவாக இயக்க, சமுதாயத் தேர்வோ பிறப்பு, இறப்பு விகிதங்களை, உடலியல் சூழல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இயக்குவதாகக் கருதுவர்.

ஆனால், சமூகவியலாளர்களுள் சிலர் இயற்கைத் தேர்வுக் கொள்கை மனித இனங்களுக்கு மிகக் குறைந்த அளவே பொருந்தும் என்கின்றனர். லாய்ட் மார்கன் (Loyd Morgan) என்பார் இயற்கைத் தேர்வு மனித இனப் பரிணாம வளர்ச்சியின் மிகக் குறைந்த அளவு காரணியாகவே உள்ளது என்கிறார்.

மரபு என்பது உடற்கூறு தொடர்பானது மட்டுமன்று. பழைய தலைமுறையினர் புதிய தலைமுறைக்கு மாறும்போது சமுதாய மரபு வளர்ச்சியடைகின்றது. சமுதாயமரபு என்பது உடற்கூறு மரபின் வெளிப்பாடு என்றும் கருதப்படுகிறது.

மரபு என்பது சமூகமயமாதல் (Socialization) செயல்முறையின் மிக இன்றியமையாத காரணி என்றும் கருதப்படுகின்றது. மேலும், இது தனிமனிதனின் சமுதாய வாழ்க்கையின் பண்புகளையும் மாற்றங்களையும் தீர்மானிக்கின்றது. இவ்வகையில் உடற்கூறு காரணிகளும் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன எனலாம்.

சட்டம்

சட்டத்தின் செயல்பாடு சமுதாயத்திலுள்ள துணைக் குழுக்களையும் (subgroups), மக்களையும் குழுக்களின்

எதிர்பார்ப்பிற்கேற்ப நடக்கச் செய்கின்றது. எனவே, சட்டம் சிறந்த சமுதாயக் கட்டுப்பாட்டுச் செயலி (Agent of Social Control) எனக் கருதப்படுகின்றது.

பழங்காலத்தில் வழக்கம், சமுதாய நியமங்கள், மக்கள் வழக்காறுகள் (folkways), சமுதாய மதிப்புகள் போன்றவை சமுதாயக் கட்டுப்பாட்டுச் செயலிகளாகச் செயல்பட்டன. இவற்றை மீறினால் சட்டத் தண்டனைகள் எவையும் கிடையா. ஆனால், சமுதாயத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. இவற்றை மீறுவோர்கள் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர் (excommunicated from society). எனவே, மக்கள் ஏன் இவற்றிற்குக் கட்டுப்படுகிறோம் என்று சிந்திக்காமலே கட்டுப்பட்டனர்.

சட்டங்கள் (laws) வந்த பின்னர், அவற்றை மீறுவோர்க்குத் தண்டனைகள் வழங்கப்பட்டன. இதனால் மக்கள் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. இதனால் பல சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்தன. அடிமைநிலை ஒழிப்பு, குழந்தை மண ஒழிப்பு, சதி ஒழிப்பு, விதவை மறுமணம் போன்ற மாற்றங்கள் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளமைக்குச் சட்டங்கள் இன்றியமையாத பங்காற்றியுள்ளன என்பது சுட்டுவதற்குரியது ஆகும்.

பண்பாட்டுக் காரணிகள்

பண்பாடும் (culture) ஒரு சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சமுதாயமும் பண்பாடும் நெருங்கிய தொடர்பு உடையன. இரண்டும் தனித்து இயங்கமுடியாது. சமுதாயச் செயலெதிர் செயல் இல்லாமல் பண்பாடு இல்லை.

சமூகவியலாளர்களில் சிலர் எல்லாச் சமுதாய மாற்றங்களையும் சமுதாயப் பண்பாடு என்று கருதுகின்றனர். மதிப்புகளின் முறை என்ற நிலையில் பண்பாடு பல தொழில் நுட்ப மாற்றங்களுக்கு வழியமைத்துக் கொடுக்கிறது. பண்பாட்டின் ஏற்பு அல்லது இசைவு இல்லாமல் எந்தச் சமுதாய மாற்றமும் நிகழமுடியாது. ஏனெனில் பண்பாடு சமுதாயத்தின்

சாரமாகத் (essence) திகழ்கின்றது. பண்பாடு சமுதாய அமைப்பையும், செயல்பாட்டையும் மாற்றும் வல்லமை உடையது. எனவே, சமுதாய மாற்றத்திற்குரிய ஒரு காரணியாகப் பண்பாடும் திகழ்கின்றது எனலாம்.

பிற காரணிகள்

அறிவியல் முன்னேற்றங்களும், செயல்பாடுகளும் புதிய வாழ்க்கை நோக்கங்களை உருவாக்குகின்றன. அறிவியல் முன்னேற்றம் மூலம் பழைய நம்பிக்கைகள் தம் செல்வாக்கை இழக்கின்றன. இவ்வகையில் அறிவியல் முன்னேற்றம் சமுதாய மாற்றத்திற்குரிய ஒரு காரணியாகவும் திகழக் காணலாம்.

அச்சுக்கூடம், வானொலி, தொலைக்காட்சி முதலிய தொடர்பு வசதிகள் கருத்துக்களிலும் மதிப்புகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

சமூகவியலாளர்களில் சிலர் குறைந்த அளவு ஒழுங்கின்மை (disorder), நிலைப்பற்ற தன்மை ஆகிய சூழல்களிலும் சமுதாய மாற்றம் நிகழ வாய்ப்பு உள்ளது என்று கருதுகின்றனர். குறிப்பிடத்தக்க அளவு ஒழுங்கின்மைக்குப் பின் அல்லது நிலைப்பற்ற தன்மைக்குப் பின் சமுதாய மாற்றம் ஏற்படும் என்றும் கருதுவர்.[32]

சிலர் சிறுபான்மை இனங்கள் (minority community) பெருகும்போது சமுதாய மாற்றம் நிகழும் என்கின்றனர்.

வேறுசிலர், சமுதாயத் தொடர்பின் மற்றும் சமுதாய முரண்களின் அறிவு வளர்ச்சியாலும் (growth of knowledge) சமுதாய மாற்றம் நிகழும் என்று கருதுகின்றனர்.

சமூகவியலாளர்கள் பிறருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள சமுதாயம் மாற்றத்தைப் பெருமளவு விரும்பும் என்றும், மலைகள், நீர்நிலைகள், நதிகள், பாலைவனங்கள், மக்கள் தொகை குறைந்த இடங்கள் முதலியவற்றால் துண்டிக்கப்படும் சமுதாயம் சமுதாய மாற்றத்தைத் தடுக்கின்றது என்றும் கருதுகின்றனர்.

சமுதாய மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள், மனோபாவங்கள் (attitudes), மதிப்புகள், மரபுகள் (traditions), பழக்கங்கள் (habits) என்பனவும் சமுதாய மாற்றத்தைத் தாமதப்படுத்தும்.

இதுகாறும் சமுதாய மாற்றம் பற்றிய செய்திகளைக் கண்டோம். இனி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலையும் சமுதாய மாற்றங்களையும் குறித்துக் காண்போம்.

மேற்கோள் சான்றுகள்

1. P.C. Deb, **Rural Sociology**, P.10
2. R.N. Sharma, **Principles of Sociology**, P.50
3. **Casel's New English Dictionary,** P.1084.
4. **English - Tamil Dictionary,** Madras University, P.961
5. **The Universal Dictionary of English Language,** P.1145
6. B. Kuppuswamy, **Social Change in India,** P.3
7. B. Kuppuswamy, op.cit., p.4
8. Jon M. Shepard, **Sociology,** P.92
9. B. Kuppuswamy, **Social change in India,** P.19
10. B.Kuppuswamy, op.cit., p.93
11. B. Kuppuswamy, op.cit., p.43
12. Annamalai University Distance Education Notes, M.A., Sociology, Ist year, paper I, Advanced Sociology, P.104
13. B. Kuppuswamy, op.cit., pp. 4-5.
14. B. Kuppuswamy, op. cit., p.20
15. B. Kuppuswamy, op.cit., p.47
16. Annamalai University, Distance Education Notes, Advanced Sociology, Principles, p.96
17. *ந. பிச்சமுத்து*, **மு.வ. வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம்,** *ப.8.*
18. E.M.Tanner, **The Reniassance and Reformation,** pp. 24-25.
19. **Encyclopaedia Britanica,** vol. 19, p.122

20. **The pocket Oxford Dictionary,** p. 686
21. E.M.W. Thillyard, "The Reniassance", **The English Reniassance,** Fact or Factor, p.4
22. Annamalai University, Distance Education Notes, Advanced Sociology - Principles, p.15
23. Satyendra Thiripathi, **Anomic and social changes in India,** .p.100
24. B. Kuppuswamy, op. cit., p.55
25. B. Kuppuswamy, op. cit., p. 55
26. B. Kuppuswamy, op. cit., p. 95
27. Jon. M. Shepard, **Sociology,** p.11
28. B. Kuppuswamy, **Social Change in India,** p.44
29. B. Kuppuswamy, op. cit., p. 106
30. B. Kuppuswamy, op. cit., p. 115
31. B. Kuppuswamy, op. cit., p. 97
32. B. Kuppuswamy, op. cit., p. 19

இயல் - 2

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலும் சமுதாய மாற்றங்களும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய சமுதாயச் சூழலையும், அதனால் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களையும் சுருக்கமாகக் கூறும் நிலையில் இவ்வியல் அமைகின்றது.

அரசியல் சூழல்

பதினெட்டாம் நூற்றாண்டில் அரசியல் சூழல் அமைதியற்ற நிலையில் காணப்பட்டது எனலாம். தமிழகத்தில் அரசியல் கொந்தளிப்புகளும் கொலையும் கொள்ளைகளும் மலிந்து காணப்பட்டன. பாளையக்காரர்களும் இசுலாமிய நவாப்புகளும் ஆட்சிபுரிந்தனர். மக்கள் வாழ்க்கை நரகமாகக் காணப்பட்டது. மராத்தியக் குதிரைக்காரர்கள் ஆங்காங்குத் திடீரெனத் தோன்றி மக்களைப் படுகொலை செய்தனர். மக்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். அடுத்த நிமிடம் என்ன நேரிடுமோ என்ற அச்சத்தில் மக்கள் உழன்று கொண்டிருந்தனர் என்று பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தியச் சமுதாயச் சூழலை விளக்குவர்.[1]

ஆனால் 1801 ஆம் ஆண்டில் தமிழகம் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வந்துவிட்டது. சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாகத் தமிழகம் திகழ்ந்தது. அடிப்படையான மாறுதல்களை ஆக்கக்கூடிய வாய்ப்புப் பெற்றிருந்த ஆங்கிலேயர் ஆட்சி அமைந்த ஆண்டு ஆதலின் 1801 ஆம் ஆண்டு தமிழக வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு என்று ந.சுப்பிரமணியன் கூறுகிறார்.[2]

1801 ஆம் ஆண்டிற்குப்பின் தமிழகத்தில் எந்தவித உள்நாட்டுப் போர்களும் நடைபெறவில்லை. மராட்டியப் போர்கள், பர்மியப் போர்கள், *1857*-ல் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் போன்றவை தொலை நிகழ்வுகளாகவே அமைந்தன. எனவே, இவை தமிழகத்தைப் பெருமளவில் பாதிக்கவில்லை என்று வரலாற்றறிஞர்கள் கருதுவர்.

1807 முதல் *1947* வரை பெரிய அளவிலான குழப்பங்கள் ஒன்றும் தமிழகத்தில் நிகழவில்லை. ஆகையால் அரசியல், சமுதாய மாறுதல்கள் தமிழகத்தில் தோன்றி வளர வாய்ப்பு ஏற்பட்டது என்று ந.சுப்பிரமணியன் கருதுகிறார்.[3]

ஆங்கிலேயரின் ஆட்சித் திறமையின் காரணமாக நாட்டில் அமைதி நிலவியது. குழப்பங்களும் கலகங்களும் ஓய்ந்தன. எவ்வித இடையூறுகளும் இன்றி மக்கள் தத்தம் தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர் உள்ள மூன்று நூற்றாண்டுகளாக நாட்டில் நிலவிய அரசியல் புயல் ஓய்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமைதி ஏற்பட்டுவிட்டது. எனவே, மக்கள் ஆறுதல் அடைந்தனர். நாட்டில் நிரந்தரமான ஆட்சி ஏற்பட்டது. அந்த ஆட்சியில் அமைதியும் ஒழுங்கும் வாழ்க்கையில் நம்பிக்கையும் ஏற்பட்டன.[4]

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக்கு உட்படாத சுற்றுப்புறங்களை ஆண்ட அரசர்களும் ஆங்கிலேயர்களின் கீழ் வந்தனர். சின்னாபின்னமாகச் சிதறுண்டு கிடந்த நாடு ஒரே ஆட்சியின்கீழ் வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழக அரசியல் சூழலைக் குறிப்பிடும் மயிலை சீனி. வேங்கடசாமி பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டின் அரசியல் நிலை அதற்கு முன்பு மூன்று நூற்றாண்டுகளில் இருந்த அரசியல் நிலையைவிட நன்கு அமைந்திருந்தது என்கிறார்.[5]

இத்தகைய வலுவான, குழப்பமற்ற, அமைதியான அரசியல் சூழல் தமிழகச் சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழ ஏற்புடையதாய் அமைந்திருந்தது எனலாம்.

தென்னிந்தியாவில் ஆங்கிலேயரின் நேர்முக ஆட்சியின் கீழ்க் காணப்பட்ட பகுதிகள் அனைத்தையும் இணைத்துச் சென்னை மாகாணத்தை அமைத்தனர்.

இந்தியாவின் ஒரு பகுதியாகத் தமிழகத்தை ஆங்கிலேயர் ஆண்டது 157 ஆண்டுகள். இக்காலப் பகுதியை ந.சுப்பிரமணியன் இரு பகுதிகளாகப் பிரிப்பார்.[6]

1. 1801 - 1857 வரையுள்ள காலப்பகுதி - இக்காலம் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக்காலம் ஆகும்.

2. 1958 - 1947 வரையுள்ள காலப்பகுதி. இக்காலப்பகுதியில் ஆங்கிலேய மன்னர் ஆங்கிலப் பாராளுமன்றம் மூலம் ஆண்ட காலம் ஆகும்.

ஆங்கிலேயர்கள் தொலைவிலுள்ள ஒரு நாட்டிலிருந்து மிகவும் வேறுபட்ட அரசியல் கோட்பாடுகளுடனும் வழிமுறைகளுடனும் இந்தியாவுக்கு வந்தவர்கள் ஆவர். இத்தகைய ஆங்கிலேயர் ஆட்சியால் இந்தியா ஒரே நாடாக மாறியது. ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தபால் தந்தி, இரயில்வே, மோட்டார் போக்குவரத்து, வங்கிகள், பல்கலைக்கழகங்கள், புதிய முறையிலான கல்வித் திட்டங்கள் முதலியன இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பெரிதும் பாதித்தன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியன் சிவில் சர்வீஸ் என்ற உயர்பணித் துறையில் இந்தியர்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டது. சமுதாய அந்தஸ்த்தில் அலுவலக நிலை இன்றியமையாத பங்காற்றுகிறது. இவ்வகையில் இந்தியன் சிவில் சர்வீஸ் பதவிகள் இந்தியர்களுக்கும் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டைப் பேரரசாக ஆண்டனர். என்றாலும், நாளடைவில் ஆட்சித்துறைகளில் மக்களையும் உளப்படுத்திக்கொண்டனர். சான்றாக, ரிப்பன் பிரபுவின் காலத்திற்குப் பின் சில்லாபோர்டுகள், தாலுகா போர்டுகள், நகராட்சிகள் முதலியன அமைக்கப்பட்டன.

இவற்றில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தல சுய ஆட்சி நடத்தும் வாய்ப்புப் பெற்றனர் என்பதைக் கூறலாம்.

ஆங்கிலேய ஆட்சியாளர்களின் ஆட்சிக்கொள்கை எதுவாக இருந்தாலும் நிருவாகத் தன்மையில் பெரியமாற்றம் ஏற்பட்டது. ஆட்சித்துறைகளின் செயல்பாடுகள் மாறின. தனி நபர் விருப்பத்தின்படி ஆட்சி செலுத்துதல் என்ற மரபு மாறியது. எவ்வகைச் செயல்பாடுகளுக்கும் அவற்றிற்கேற்பச் சட்டங்களை உருவாக்கி அவற்றிற்கேற்ப ஆட்சிபுரிதல் என்ற மரபு ஏற்பட்டது. இது ஆங்கிலேயர் ஆட்சியின் தனித்தன்மைகளில் ஒன்று எனலாம். தனிநபர் ஆட்சி (Personal Government) என்பதற்குப் பதில் சட்டத்தின் ஆட்சி (rule of law) ஏற்பட்டது. ரிப்பன் பிரபு வைசிராயாகப் பணியாற்றியபோது 1883 - 1884-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். இத்தீர்மானத்தின்படி உள்நாட்டு மக்களும் நாட்டு அரசாங்கத்தில் பங்குகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறு ஆங்கில அரசு இந்தியக்குடிமக்களுடன் நேர்முகத் தொடர்பு மேற்கொண்ட பின்னர் நாடு பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டது என்பர்.[7]

ஆங்கில ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகக் கொள்கைகளில் இன்றியமையாதனவாகச் சட்டத்தை ஒருபடித்தாக்கல், நிர்வாகத்தை மையப்படுத்தல் என்பனவற்றைச் சுட்டுவர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றாகத் தமிழகத்திற்கும் பிற உலகத்திற்கும் முன்பைவிட அதிகமான தொடர்புகள் ஏற்பட்டுள்ளமையையும் கூறுவர்.

நாட்டில் பல இடங்களில் குடிமக்கள்தாம் பயிரிட்டு வந்த நிலங்களின்மேல் சொத்துரிமை பெற்றிருந்தனர். இவர்கள் அரசுக்கு நேரடியாக வரிசெலுத்தி வந்தனர். இம்முறை இரயத்துவாரி முறை என்று அழைக்கப்பட்டது. இது தவிர, மிராசுதாரி முறை என்றொரு முறையும் தமிழகத்தின் சில பகுதிகளில் வழக்கத்தில் இருந்தது.

ஆங்கிலேயர் வருகையின்போது தமிழகத்திற்கு இடத்திற்கு இடம் வரிகளும் வரிவிதிப்புமுறைகளும்

வேறுபட்டுக் காணப்பட்டன. ஆங்கிலேயர் வந்ததும் சோழர்கள், பாண்டியர்கள், விசயநகர மன்னர்கள் ஆகியோர்களின் வரிகள் பல கைவிடப்பட்டன. பல வரிகளின் பெயர்கள் மாற்றப்பட்டுப் புதிய வரிகளாக வழங்கின. ஆங்கில அரசு அனைத்து வரிகளையும் தொகுத்து வரி விதிப்பில் ஓர் ஒழுங்குமுறையைக் கொண்டு வந்தது. எண்ணற்ற வரிகளின் சுமை, வரி வசூலிப்பவர்கள் செய்த கொடுமைகள், ஊருக்கு ஒரு வரி, குலத்துக்கு ஒரு வரி என்ற சிக்கலான, முறைகேடான சட்டங்கள் ஆகியவற்றை அகற்றித் தமிழகம் முழுவதற்கும் ஒரே அரசியல், ஒரே நீதி என்ற ஒருமைப்பாடு கொண்டுவரப்பட்டது.[8] ஆங்கிலேயர்களின் நிலவரிக்குறைப்பால் 1855 இல் பண்படுத்தப்பட்ட நிலத்தின் அளவு அதிகரித்தது.

ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றுள் பல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். முதன்முதலாக நாட்டிலுள்ள நிலங்களை அளந்து வரி விதித்தனர். நிலங்கள் தனி உடைமைகள் ஆக்கப்பட்டன. ஆங்கில அரசின் வரிக்கொடுமையால் நிலங்கள் துண்டுபட்டன.[9]

ஆங்கில அரசு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை நிலை நிறுத்தியது. இதனால் சமுதாயத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டது என்று கூறலாம். ஆங்கில ஆட்சியால் இந்தியாவில் புதிய நிர்வாக முறை, பகுத்தறிவு, சமத்துவம், பொதுவுடைமை முதலிய பண்பாட்டு மதிப்புகள் ஆகியன அறிமுகமாயின.[10]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய அரசு நிறுவப்பட்ட பின்னர், முன்பிருந்த மரபுகளில் சில தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன. சில புதிய மரபுகள் புகுத்தப்பட்டன. இதனால், பொது வாழ்க்கையின் தன்மையே மாறிவிட்டது. நிர்வாகம், அரசியல் தத்துவம், நீதிமுறைகள், சமூக அமைப்பு என்று எல்லா இன்றியமையாத் துறைகளிலும் அடையாளம் காண முடியாத அளவுக்குப் புதுமைகள் புகுந்துவிட்டன என்பது மறுக்கமுடியாது என்பர்.[11]

இவ்வாறு ஆங்கிலேயர்கள் அரசியல் தத்துவ ரீதியிலும் மேனாட்டுக் கல்வி வாயிலாகவும் புகுத்திய சில கருத்துக்கள் விரைந்த சமுதாய மாறுதல்களை உண்டுபண்ணின. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் ஒரு பகுதியாக அமைந்த தமிழகத்தில் அரசியல், சமுதாய முன்னேற்றங்கள் பல்வேறு புதிய துறைகளில் இயங்குவதாயிற்று எனலாம்.

கல்வி

சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு நிறுவனங்களில் கல்வியும் ஒன்று ஆகும். ஆங்கிலேயர் ஆட்சியின் காரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் கல்வி என்ற நிறுவனத்திலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையை அறியலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இரு வகையான கல்வி முறைகள் காணப்பட்டன.

1. பழைய முறைக்கல்வி
2. புதிய முறைக்கல்வி

பழைய முறைக் கல்வியைக் கற்பித்தவர்கள் கணக்காயர், வித்துவான், மகாவித்துவான், கவிராயர், நாவலர் என்று பெயர் பெற்றவர்களாவர். புதிய முறைக் கல்வியைக் கற்பித்தவர்கள் மேனாட்டுக் கல்விமுறையைப் பின்பற்றியவர்கள் ஆவர்.

பழைய முறைக் கல்வியில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் காணப்பெற்றன. எழுத்துக்களை மண் தரையில் எழுதுதல், நெட்டுருச் செய்தல், ஓலையில் எழுதுதல் முதலிய முறைகள் பின்பற்றப்பட்டன. ஆசிரியர்களுக்கு உதவும் தலை மாணாக்கர்கள் சட்டாம்பிள்ளை என்று அழைக்கப்பெற்றனர். கல்வி கற்கும் மாணவர்களுக்கு வார விடுமுறை கிடையாது. உவா நாட்களில் மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டது. பள்ளியில் மாணவர்கள் மனப்பாடம் செய்வர். பின் இவற்றுக்கு வேறு ஆசிரியரிடம் சென்று விளக்கம் கேட்பர். அதன் பின்னர், கவிபாடும் ஆற்றல் பெறுவர். உரைநடையில் எழுதும் வழக்கம் இல்லை. மடாலயங்களிலும் இத்தகைய கல்வி கற்பிக்கப்பட்டது.

ஓலைகளில் எழுத்தாணியால் எழுதுவர். முதன்முதலில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதைச் சுவடி தூக்குதல் என்பர்.

திண்ணைப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு சமுதாயத்தில் ஒரு சில உயர்குலத்தினர்க்கே கிடைத்தது. தொழிலாளர்கள் தம் குழந்தைகளை இளமையிலேயே தம் குலத் தொழிலில் ஈடுபடுத்திப் பயிற்சி அளித்துவந்தனர். கிராமங்களில் சிறு சிறு பள்ளிகளே காணப்பட்டன. எனவே, பொது மக்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு குறைவாகவே காணப்பட்டது. தனித்தனி ஆசிரியர்கள் திண்ணைப் பள்ளிகளிலும் தெரு நடைகளிலும் பாடம் நடத்தி வந்தனர். மாணவர்களின் பெற்றோர்கள் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சிறு ஊதியம் அளிப்பர். அரசு அளிக்கும் மானியத்தொகை, குடிமக்கள் அளிக்கும் மேரைகள் ஆகியவற்றைக் கொண்டு ஆசிரியர்கள் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூன்று வகையான பள்ளிகள் காணப்பட்டன என்று குப்புசாமி குறிப்பிடுகின்றார்.[12]

1. இந்தியக் குடிமக்கள் அல்லது இந்திய ஆட்சியாளர் களால் உருவாக்கப்பட்ட பள்ளிகள். இப்பள்ளிகளில் வடமொழி, பாரசீகம், அரபிக், தற்கால இந்திய மொழிகள் ஆகியவற்றின் வழியாகக் கல்வி கற்பிக்கப்பட்டது.

2. ஆங்கில மொழியையும் கிறித்தவக் கொள்கை களையும் இந்திய மாணவர்களுக்குக் கற்பிக்கக் கிறித்தவ அமைப்புகளால் உருவாக்கப்பட்ட பள்ளிகள்.

3. சமயச் சார்பற்ற கல்வியை ஆங்கிலம் அல்லது இந்திய மொழிகளின் வழியாக இந்தியக் குழந்தைகளுக்குக் கற்பிக்க ஏற்படுத்தப்பட்ட அரசின் பள்ளிகள்.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது தமிழகத்தில் கல்வித்துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கில அரசு

பள்ளிகளையும் பல்கலைக்கழகங்களையும் தொடங்கியது. பள்ளிகளில் ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழியும் மேல் வகுப்புகளில் ஆங்கிலமும் பயிற்சி மொழிகளாக விளங்கின.

சென்னை அரசாங்கத்தில் கல்வித்துறை தொடங்கப் பட்டது. அதற்கு ஓர் இயக்குநரும் அமர்த்தப்பட்டார்.

மன்றோ என்பவர் இந்திய மக்கள் மீது மிகுந்த அக்கறை உடையவராய்த் திகழ்ந்தார். இவர் சென்னை மாகாணத்தில் கவர்னர் ஆனதும் கல்வித்துறையில் பெரிய அத்தியாயம் தொடங்கியது எனக் கருதுகின்றனர்.[13] இவர் *1822*-இல் ஆட்சியாளர்களை அழைத்துப் பின்வரும் விவரங்களைக் கேட்டறிந்தார்.

1. ஒவ்வோர் ஆட்சியாளரின் மாவட்டங்களிலும் எழுத, படிக்கக் கற்பிக்கும் பள்ளிகள் எத்தனை உள்ளன?

2. சாதி அடிப்படையில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

3. பொதுவாகப் படிக்கும் நூல்கள் யாவை?

4. மாணவர்கள் செலுத்தும் மாத, வருடக் கல்விக் கட்டணம் எவ்வளவு?

5. பொதுமக்களால் நடத்தப்படும் பள்ளிகள் யாவை?

6. இப்பள்ளிகளுக்கு வருவாய் வரும் வழிகள் யாவை?

போன்ற விவரங்களைக் கேட்டறிந்தார். இவற்றிலிருந்து மன்றோ இந்திய நாட்டுக் கல்வி வளர்ச்சியில் காட்டிய ஆர்வம் வெளிப்படுகின்றது.

மாவட்ட ஆட்சியாளர்கள் அனுப்பிய தகவல்களை மன்றோ ஆழ்ந்து நோக்கி, அவற்றை *1883*, ஆம் ஆண்டு மார்ச்சு மாதம், பத்தாம் நாள் நிகழ்ச்சிக்குறிப்பில் பதிவு செய்தார்.

1826-இல் ஆட்சியாளர்கள் ஓர் அறிக்கையை மன்றோவுக்கு அனுப்பினர். அவ்வறிக்கையில் நாட்டில் *12498* பள்ளிகளும் கல்லூரிகள் உள்ளன என்றும், *188650* மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்றும், அவர்களுள் *184110* பேர் ஆண்கள் என்றும், *4540* பேர் பெண்கள் என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வறிக்கையின்படி 1000 மக்களுக்கு 1 பள்ளி உள்ளது என்றும், 67 பேரில் ஒருவர் கல்லூரியில் பயில்கிறார் என்றும் அறிந்த மன்றோ இந்நிலையைக் கண்டு மனம் வருந்தினார். இந்த நிலைக்கு வறுமையே காரணம் என்று உணர்ந்தார்.

இந்நிலையில் சென்னைப் பள்ளிப்பாட நூல் குழு (Madras School Book Society) பள்ளிகளின் தரத்தில் கவனம் செலுத்திப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க அனுமதி கேட்டது. மன்றோ இதற்கு உடனடியாக அனுமதி அளித்தார். இதற்காக மாதம் 700 ரூபாய் ஒதுக்கீடும் செய்தார். மேலும், இப்பயிற்சிப் பள்ளிகளை மாவட்டம், தாலுக்கா வாரியாகத் திறக்கவும் எண்ணினார்.

ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு இந்துப் பள்ளியையும் ஒரு இசுலாமியப் பள்ளியையும் திறக்கப் பரிந்துரைத்தார். இவர் பரிந்துரைக்கேற்ப 300 பள்ளிகள் திறக்கப்பட்டன.

உயர் கல்வி பெறுவதற்காக மாவட்டத்திற்கு 2 பள்ளிகள் வீதம் திறக்கப்பட்டன. இதனால் 40 பள்ளிகள் உருவாயின. இப்பள்ளிகளுக்குக் கலக்டரேட் பள்ளிகள் (Collectorate Schools) என்று பெயர் ஏற்பட்டது. இப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஊதியமாக மாதம் 15 ரூபாய் வழங்கப்பட்டது. தாலுக்கா ஆசிரியர்களுக்கு ரூபாய் 9 வழங்கப்பட்டது. தாலுக்காப் பள்ளிகள் நார்மல் பள்ளிகள் (Normal Schools) எனப்பட்டன.

மன்றோவின் பரிந்துரையின்படி 1826-ல் சென்னையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறக்கப்பட்டது. 1826-ல் இப்பள்ளியில் 8 பேர் சேர்ந்து பயிற்சி பெற்றனர். 1827-இல் 7 பேர் சேர்ந்தனர்.

மன்றோவின் பரிந்துரையின்படி தாசிர்தாரிப் பள்ளிகளும் கலெக்டரேட் பள்ளிகளும் 1826-இல் திறக்கப்பட்டன. இப்பள்ளிகளில் எதிர்பார்த்த அளவு மாணவர்கள் சேர்ந்து பயிலவில்லை. 1829-ஆம் ஆண்டு வரையிலும் சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் சில தாசில்தாரி, கலெக்டரேட் பள்ளிகள் திறக்கப்பட்டன. 1832-இல் 14 கலெக்டரேட் பள்ளிகளும் 81 தாசில்தாரிப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்கள் எண்ணிக்கை முப்பத்துமூன்றுக்கும்

குறைவாகவே காணப்பட்டது. இதைக்கண்ட மன்றோ மனம் சோர்ந்தார். பல்வேறு முயற்சிகள் எடுத்த பின்பும் இத்திட்டம் தோல்வியுற்றது. எனவே, சென்னை அரசாங்கம் இக்கல்வி முறையைக் கைவிட்டுவிட்டு ஆங்கிலக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியது.[14]

1823-ல் ஆங்கில அரசு பொதுக்கல்விக்குழு (Committee on Public Instruction) ஒன்றை நிலவியது. இக்குழு அரசால் நடத்தப்படும் தொடக்கநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆண்டுத்தொகை அளிப்பதற்காக நிறுவப்பட்டது. பள்ளிகளில் ஆங்கிலமொழி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் பள்ளிகளுக்கு மாணவர் வருகை அதிகமாகியது. இதனால், பாராளுமன்றம் கல்வி வசதிகளைப் பல மடங்கு அதிகரித்தது.

1834-இல் மெக்காலே இதன் தலைவர் ஆனார். மாணவர்கள் சிறந்த அறிவைப் பெற ஆங்கிலம் எளிதாக அமையும் என்று இவர் கருதினார்.

1835-இல் வில்லியம் பெண்டிங் ஆங்கிலக் கல்விக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு இந்தியக் கல்வி வரலாற்றின் ஒரு திருப்புமுனை என்று கருதப்படுகிறது.[15] மெக்காலேவின் கல்வித்திட்டம் பற்றிக் கூறும்போது, வெள்ளையர் ஆட்சி வேரூன்றிவிட்ட நிலையில் ஆட்சியாளர்க்கு மொழிபெயர்ப்பாளராகவும் எழுத்தர்களாயும் குறைந்த செலவில் தயார் செய்யும் மெக்காலே கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் இந்தியர்களை விருப்புவெறுப்புகளாலும் உணர்வாலும் செயல்களாலும் ஆங்கிலேயர்களாக மாற்றி, என்றும் வெள்ளையர் ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்படியும் குற்றேவலர்களாக ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்கியது என்பர். மெக்காலே கல்வித்திட்டத்தின்படி தங்கள் குற்றேவலைவிட்டு, நேரடி உழைப்பில் ஈடுபடாமல் மொழிபெயர்ப்பாளர், எழுத்தர், ஆசிரியர் போன்ற காசாக்கப் பணிபுரிவோராகவும் மக்கள் மாறினர். ஆங்கிலக் கல்விமுறை வந்த பின்னர் மக்களில் பலர் நகரங்களில் குடியேறினர். மேல்நாட்டு முறையிலமைந்த மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் முதலியவற்றைப்

பயன்படுத்தல், செய்தித்தாள்களைப் படித்தல் போன்ற பழக்கங்களில் மக்கள் ஈடுபட்டனர்.[16]

1844-இல் ஹார்டங் பிரபு (Lord Hardung) அரசு வேலைகளில் ஆங்கிலக் கல்வி கற்றவர்களுக்கு முதலிடம் என்றார். எனவே ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள் பலர் வேலைகள் செய்தனர். 1845-இல் கல்விக்குழு (Education Board) அழிக்கப்பட்டுக் கல்விக் கவுன்சில் (Council of Education) கொண்டுவரப்பட்டது. இதற்கு நீண்ட கால நோக்கம் இல்லை. இது விவிலியத்தில் இடம்பெறும் அறிவுரையை உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. இயக்குநர் குழு (Court of Directors) இதனை உணர்ந்து மக்களின் சமய உணர்வில் தலையிடும் உரிமை இல்லை என்பதை அரசுக்குக் கூறி எச்சரித்தது.

எனவே, பானர்மேன் (Bannarman), சுலிவன் (S.Sullivan), தாமஸ் (J.F.Thomas) போன்ற அரசு அலுவலர்கள் பொதுக்கல்வித் திட்டத்தைப் (Policy of Mass Education) பரிந்துரைத்தனர்.

1854-இல் பொதுக் கல்வித்துறை (Department of Public Instructions) நிறுவப்பட்டது. இதன் சார்பில் அச்சு இயந்திரம் நிறுவப்பட்டது. இதில் பள்ளிகளுக்குத் தேவையான பாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. செய்தித்தாளும் வெளியிடப்பட்டது.

1854-இல் ஆங்கில அரசால் கல்வி வளர்ச்சிக்காக ஆங்கிலக் கல்வித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. மாவட்டங்களில் தமிழ்மொழிப் பயிற்சிப் பள்ளிகள் திறக்கவும், கல்வி வாய்ப்பைப் பெருக்கவும், மாகாண அரசாங்கத்தில் கல்வித்துறை அமைக்கவும், சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் பல்கலைக்கழகங்கள் தொடங்கவும், சாதி, மத வேறுபாடுகளின்றி எல்லாப் பள்ளிகளுக்கும் பொருளுதவி வழங்கவும் இத்திட்டத்தில் வழிவகுக்கப்பட்டது.[17]

இவ்வகையில் 1857-ஆம் ஆண்டின் 27-ஆம் சட்டப்படி சென்னையில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

1882-ஆம் ஆண்டு ஹண்டர் கமிசன் அறிக்கையில் சுகாதாரக் கல்வியின் தேவை வலியுறுத்தப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சியில் 1834-ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரியும், 1835-ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியும், 1850-ஆம் ஆண்டில் கிறித்தவக் கல்லூரியும், 1841 ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியும் தொடங்கப்பட்டன. இவ்வாறு ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இந்தியாவிலும், இந்தியாவின் ஒரு பகுதியாகிய தமிழகத்திலும் கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ளமையை அறியலாம்.

ஆங்கிலக் கல்வியின் விளைவால் இந்திய எல்லைக்குள் வாழ்ந்த மக்கள் புற உலகை எட்டிப் பார்க்கலாயினர். ஐரோப்பாவில் கி.பி.18ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சி, அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் போன்றவற்றைப் பற்றி அறிந்தனர். இந்த அறிவு இந்திய மக்களின் சிந்தனையைத் தூண்டியது. பிரஞ்சுப் புரட்சியாளர்கள் எழுப்பிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற குரல்கள் இந்திய மக்களிடையே சுதந்திர வேட்கையை எழுப்பின. ஆங்கிலேயர்கள் தம்மை அடிமைப்படுத்துவதை உணர்ந்தனர். இந்தியநாடு ஒரே நாடு என்ற ஒற்றுமை உணர்வு ஓங்கியது. எதையும் பகுத்தறியும் எண்ணம் எழுந்தது.

அரசு, கிறித்தவக் கழகங்கள் நடத்திய பள்ளிகளில் பலர் சேர்ந்து மேற்கத்திய முறைக்கல்வியைப் பயின்றனர். இவர்கள் தம் கல்வி நிறுவனம்மூலம் சமயச் சார்பற்ற கல்வி பெற்றனர். இதனால் மக்கள் தம் காலத்தில் காணப்பட்ட காரணமற்ற, மூட நம்பிக்கைகள் நிறைந்த இந்துமதச் சடங்குகளை வெறுத்தனர். எனவே, கிருஷ்ணமோகன்பானர்ஜி, லால் பிகாரி தேவ், கோவிந்தப்பப், மதுசூதனன் போன்ற கல்வியாளர்கள் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தனர்.

ஆங்கில வழிக் கல்வி மூலம் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களில் ஒன்றாக எல்லாப் பிரிவு, சாதி மாணவர்களும் ஒன்று சேர்ந்து கல்வி கற்றதைக் கூறலாம். இதனால் மக்களிடையே வேறுபாடு பாராட்டும் எண்ணம் குறைந்தது.

ஆங்கிலக் கல்வியால் மேற்கத்தியமாதல் ஏற்பட்டது. மக்களிடையே ஆடை, உணவு உண்ணும்முறை, நடத்தைகள்

ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. மக்ககளிடையே ஆங்கிலக் கல்வி மூலம் மதச் சார்பின்மையும் சமத்துவ எண்ணமும் ஏற்பட்டன. ஒரு நிகழ்ச்சிக்கும் அது தொடர்பான சிக்கல்களுக்கும் உரிய பகுத்தறிவு சார்ந்த விமர்சனப் பார்வை ஏற்பட்டது. மேற்கத்திய மயமாதல் மூலம் மக்கள் ஆங்கிலமொழியைக் கற்றதுடன் மட்டும் நில்லாது ஆங்கிலேயர்களின் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றினர். மது அருந்துதல், ஊன் உண்ணல் போன்றவை மீதுள்ள தடைகளையும் கைவிட்டனர். மேற்கத்திய மயமாகிய உயர்ந்தோர் குழாத்தினரிடையே (Elite)காணப்பட்ட மனிதாபிமான நோக்கால் சமுதாயச் சீர்திருத்த எண்ணமும் சுதந்திரப் போராட்ட எண்ணமும் எழுந்தன. குழந்தை மண மறுப்பு, விதவை மணம் ஆகியவற்றுக்கு எதிரான தடைகள், பெண்களை ஒதுக்கி வைத்தல், பெண்கல்வி எதிர்ப்பு, தீண்டாமை, அகமணமுறை, சாதிகளிடையே காணப்பட்ட உணவுத்தடை முதலிய சமுதாயக் கொடுமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. முன்னர், மரபு வழிப்பள்ளிகள் மேல்தட்டு வகுப்புக் குழந்தைகளுக்கு மட்டும் உரியனவாய்க் காணப்பட்டன. ஆங்கிலக் கல்வி அனைத்துப் பிரிவினர்க்கும் பயன்பட்டது. ஆங்கிலக் கல்விமுறை வங்கிகள், வணிக நிறுவனங்கள் முதலியவற்றில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தந்தது.[18]

மேலும், மேற்கத்தியக் கல்வி மூலம் ஆசிரியர்கள் மேனாட்டுமுறைக் கல்வியைக் கற்பிக்கப் பயிற்சிகள் பெற்றனர். ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் கல்வி பயின்றர். விருப்பத்திற்கு ஏற்றபடி பாட நூல்கள் எழுதப்பட்டன. பிழையின்றி எழுதவும் படிக்கவும் ஒப்ப எழுதக் கூறுதல் முறை (Dictation) ஏற்படுத்தப்பட்டது. பூகோளம், சரித்திரம், வானநூல், இயற்கை அறிவியல், உடல் நலம் போன்ற பல்துறைக் கல்வி ஏற்பட்டது.

கிறித்தவச் சபையினர் நடத்திய பள்ளிகளில் பயின்ற நகர்ப்புற மக்களின் வாழ்வியலில் இதழ்களின் பங்கு மெல்லமெல்ல அதிகரித்தது. இதழியில் துறை புதிய பரிணாமம் பெற்றது.[19]

இவ்வாறு ஆங்கிலக் கல்விமுறை சமுதாயத்தின் பலதுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையை

அறியலாம். இதுபற்றிக் கைலாசபதி, பழைய நிலமானியச் சமுதாயத்தின் தேய்வு, புதிய வர்க்கங்களின் எழுச்சி, அச்சு இயந்திரத்தின் வருகை, குறிப்பிடத்தக்க அளவில் பரவலான கல்வி, மரபு, சம்பிரதாயம் என்பனவற்றில் நம்பிக்கைக் குறைவு, பிறப்பாலன்றிச் செய்தொழிலால் ஒருவருக்கு மதிப்பு, உழைப்பின் மகத்துவம் முதலியன நவீனச் சமுதாயத்தின்சில பண்புகளாகும். இவை அடிப்படையான சமுதாயவியல் மாற்றங்கள் என்பதை நாம் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.புதிய கல்விமுறைகளும் மாற்றங்களை உறுதிப்படுத்தி வந்திருக்கின்றன. இம்மாற்றங்களின் தவிர்க்க இயலாத எதிரொலியும் பிரதிபலிப்பும் கலை இலக்கியத்தில் மாத்திரமின்றி மனிதன் சிந்தனைத்துறைகள் அனைத்திலும் தோன்றும் என்பதில் தடையே இல்லை என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும்[20] என்கிறார்.

சாதிமுறை

சமுதாயத்தில் காணப்படும் குறிப்பிடத்தக்க நிறுவனங்களில் ஒன்று சாதிமுறை ஆகும். சாதிமுறை என்ற நிறுவனத்தின் நிலை பத்தென்பதாம் நூற்றாண்டில் எவ்வாறு காணப்பட்டது என்பதைச்சுருக்கமாகக் காணலாம்.

பதினேழாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிறகு உள்ள நூற்றாண்டுகளிலும் தமிழநாடு பல மண்டல, சமய, இனக் காரணிகளால் பல கிடைநிலை (horizontal), நெடுநிலைக் (vertical) குழுக்களாகக் காணப்பட்டன.[21]

இந்தியாவில் கலாச்சார வேறுபாட்டு மிகுதியால் தமிழ்ச் சமுதாயத்தைப் பிராமணர் - பிராமணரல்லாதோர் என்று பிரித்துக் காணும் மரபு ஒன்று ஏற்பட்டது. தமிழகத்தில் மூன்று வகையான பிராமணர் அல்லாத பிரிவினர் காணப்பட்டனர் என்று ந. சுப்பிரமணியன் கூறுகிறார்.[22]

1. பார்ப்பனர் அல்லாத இந்துக்கள்
2. முஸ்லீம்கள்
3. இந்தியக் கிறித்தவர்கள்

இவர்களைத் தவிர தலித்துகள் என்ற பிரிவினரும் காணப்பட்டனர்.

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களைப் பல்வேறு பிரிவினராகப் பிரித்தல் சாதிமுறைகளின் தன்மைகளில் ஒன்று ஆகும். மேலும், ஒரு சாதிப் பிரிவினருள்ளேயும் பல பிரிவுகள் காணப்படும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பல்வேறு சாதிப் பிரிவினர்களும் அவர்களுக்குள்ளே பல பிரிவினரும் காணப்பட்டுள்ளனர்.

சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பின்பற்றும் வெள்ளாளர்கள் தம் தூய்மையைக் காப்பாற்றத் தனியாக வாழ்ந்தனர். இந்த வெள்ளாளர்கள் பிரிவினருள்ளும் தொண்டை மண்டல வெள்ளாளர், கார்காத்த வெள்ளாளர்கள் , கோட்டைப் பிள்ளைமார், நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்கள் எனப்பல உட்பிரிவினர்கள் காணப்பட்டனர்.

மேலும், கொங்கு வெள்ளாளர்களுள் செந்தலை, படைத்தலை, வெள்ளிக்கை, பவளம்கட்டி, மலையாளி, தலைக்காடு எனப் பல பிரிவினர் காணப்பட்டனர். இவர்கள் 64 குலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர் என்பர். ஒவ்வொரு குலத்தினருக்கும் இடையே புறமணத்தடை காணப்பட்டது.

கலைஞர் குழுக்களுள் (articians) தட்டார், கன்னார், தச்சர், கல்தச்சர், கொல்லர் என்ற பிரிவுகள் காணப்பட்டன. இவர்கள் கருவிகள் செய்தல், கருவியைப் பழுது பார்த்தல் முதலிய பணிகள் செய்தனர். இவர்கள் செய்துவந்த கிராமப் பணிகளுக்காக வரியற்ற நிலங்களைப் பெற்றிருந்தனர்.

மறவர்கள் எனப்படுவோர் கோயில் காவல் பணி, காவல்தொழில் முதலிய பணிகளை மேற்கொண்டனர். வீட்டு உரிமையாளர்கள் இவர்களுக்கு ½ பணம் கொடுத்தனர். இவர்களுள்ளும் கள்ளர் முதலான பிரிவுகள் காணப்பட்டன.

மேலும் பறையர், பள்ளர், சக்கிலியர், குறவர்,ஒட்டர், இருளர், படகர், காடர் முதலான பல்வேறு பிரிவினர்களும்

சமுதாயத்தில் வாழ்ந்துள்ளனர். குறவர்களில் தொழில் அடிப்படையில் தப்பைக்குறவர், உப்புக்குறவர், கருவேப்பிலைக் குறவர் என்ற பிரிவினர்களும் வாழ்ந்துள்ளனர்.

கல்வெட்டுக்கள் 18 வகையான சாதிகளைக் குறிப்பிடுவனவாகவும், இந்தப் பதினெட்டின் உட்பிரிவுகளாகத் தொண்ணூற்றாறு இருக்கலாம் என்றும் டி.வி.மகாலிங்கம் கருதுகிறார்.

இசுலாமியர்களிடையேயும் பல பிரிவுகள் காணப்பட்டன. அவர்களுக்கிடையே புறமணத் தடையும் நிலவியது. மரைக்காயர் என்ற பிரிவுக்குள் பல பிரிவுகள் காணப்பட்டன. வாணிபம், இரும்புத்தொழில், நெசவுத்தொழில் என்று அவர்கள் மேற்கொள்ளும் தொழில்களுக்கு ஏற்பப் பல பிரிவுகள் காணப்பட்டன. ராவுத்தர்களிடையே புளியங்குடியான், இளையாங்குடியான், முசிறியார் என்று இன அடிப்படையில் பல பிரிவுகள் உள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இடங்கையினர், வலங்கையினர் என்ற சாதிப் பிரிவுகளும் காணப்பட்டன. கல்வெட்டுக்கள் ஒவ்வொரு பிரிவினுள்ளும் 98 பிரிவுகள் காணப்பட்டன என்கின்றன. இவர்களுள் இடங்கையினர் விவசாயம் செய்யும் குழுக்களாகவும், வலங்கையினர் வாணிபம், உற்பத்திக் குழுக்களாகவும் திகழ்ந்துள்ளனர். இவர்கள் மேற்கொள்ளும் தொழில்களின் அடிப்படையில் இவர்களுக்குள் போராட்டங்கள் நிகழ்ந்தன என்று கருதுவர். பல பொருளாதாரக் காரணங்களும், தங்கள் அந்தஸ்த்தை உயர்த்தும் நோக்கமும் வலங்கை - இடங்கைப் பிரிவினர்களின் போராட்டங்களுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தன. பத்தொன்பதின் நடுப்பகுதியில் இவர்களுக்கிடையே சிறுசிறு காரணங்களுக்காகவும் சண்டைகள் நிகழ்ந்துள்ளன என்று ஆபி துபேஸ் (Abbey Dubios) கருதுகிறார். சான்றாகத் திருமண நிகழ்ச்சியின்போது செருப்பு அணிவதற்காகச் சண்டைகள் நிகழ்ந்ததைக் கூறுவர்.

தமிழகத்தின் வடபகுதியில் கிராமக் கணக்குத் தொழில் செய்துவரும் கருணீகர் என்பவர்களுக்குள் நான்கு வகைப் பிரிவுகள் காண்பட்டன. சீர்கருணீகர், சரட்டுக் கருணீகர்,

கைகாட்டிக் கருணீகர், மற்றவழிக் கருணீகர் என்ற நான்கு பிரிவினர் சுட்டப்பெறுகின்றனர். இவர்கள் ஒருவருக்கொருவர் திருமணம் மூலம்கலப்பது இல்லை. செட்டிகளில் பேரிச் செட்டிகள் என்று ஒரு பிரிவினர் காணப்பட்டனர். இவர்களிடையே ஆயிரத்தான் செட்டி, ஐந்நூற்றான் செட்டி என்ற பிரிவினர் உள்ளனர்.

இந்து சமுதாய அமைப்பில் அந்தணர்கள் - சூத்திரர்கள் ஆகிய இருபிரிவினர்களும் இரு துருவங்களாகக் காணப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய சாதி முறையைப் பற்றிக்கூறும் கே.கே.பிள்ளை மக்களிடையே நூற்றுக்கணக்கான குலங்கள் பெருகிவிட்டிருந்தன என்கிறார்.[23]

தமிழகத்தில் சாதிமுறையின் அடிப்படையில் அமைந்த சமுதாயத் தரப்பிரிவில் அந்தணர்கள் உயர்நிலையில் காணப்பட்டனர் என்பதை அறியமுடிகின்றது.

ஆங்கிலேய மேல்நாட்டுமுறைப் பள்ளிகள் தொடங்கப் பட்டபோது அந்தணர்கள் அவற்றில் சேர்ந்து கல்வி பயின்றனர். ஆகவே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அரசு அலுவலகங்களில் பெரும்பாலும் அந்தணர்களே காணப்பட்டனர். அரசு வேலைகளில் ஈடுபட்டமையால் அந்தணர்கள் சமுதாய நிலையிலும் பொருளாதார நிலையிலும் மேம்பட்டுக் காணப்பட்டனர். நாளடைவில் ஆங்கிலேயர்களின் அரசியல் அலுவல்களைப் பார்க்க அந்தணர்கள் பெருமளவில் பணியமர்த்தப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் அந்தணர்கள் நிலை தமிழ்ச் சமுதாயத்தில் உயர்ந்ததாகவே இருந்தது. தஞ்சை மராட்டியர் அரண்மனை, ஆர்க்காடு முஸ்லீம் சபை ஆகியவற்றில் அந்தணர்கள் பலர் வேலையில் அமர்ந்தனர். அவர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் ஏராளமான அந்தணர்களை அரசு அலுவலகங்களில் பணியமர்த்திக் கொண்டனர். கணக்கர் தொழிலிலும் குறிப்புகள்

வைக்கும் தொழிலிலும் பெரும்பாலும் அந்தணர்களே காணப்பட்டனர். இதனால் சமுதாயத்தில் அந்தணர்களின் நிலை மேம்பட்டுக் காணப்பட்டது.

தூய்மை இன்மை (impurity) என்பதன் அடிப்படையில் சில குறிப்பிட்ட தொழில்களைச் செய்தவர்களைத் தாழ்வானவர் களாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் ஒதுக்கி வைத்தல் சாதிமுறையின் தன்மைகளில் ஒன்று ஆகும். இதற்கேற்பப் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழகத்திலும் மாட்டிறைச்சி உண்ணல், மது அருந்துதல், விலங்குகளைப் பலியிடல், தொண்டு செய்யும் வேலைகள், தூய்மையற்ற பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிலர் தாழ்த்தப்பட்ட சாதியினராகக் கருதப்பட்டதுடன், தீண்டத்தகாதவர்களாகவும் கருதப்பட்டனர். சாதிகளின் அடிப்படையில் மக்களிடையே வேறுபாடுகள் பெருகின. வீடுகள் கட்டுவதில்கூடச் சாதிமுறை ஆதிக்கம் செலுத்தியது. மக்களுக்குப் பலவிதமான தடைகள் விதிக்கப்பட்டன. சான்றாகச் சாணார் எனப்படுவோர் ஒரு மாடிக்கு மேல் வீடுகட்டக்கூடாது. அவர்களுடைய வீடுகள் சாணக்குவியல்கள் (dung heaps) என்று அழைக்கப்பட்டன. இவர்கள் வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் ஆன அணிகலன்களை அணியக்கூடாது. குடைகளையும் செருப்புகளையும் பயன்படுத்தக்கூடாது என்பன போன்ற தடைகள் விதிக்கப் பட்டமையைக் கூறலாம்.

1828-இல் விளவங்கோடு, கல்குளம், இரணியல், அகஸ்தீஸ்வரம் போன்ற இடங்களில் வாழ்ந்த நாடார் எனப்படுவோர் மேலாடை அணியத்தடை காணப்பட்டது. *1829*-இல் திருவாங்கூர் அரசி சாணார்குளம் நாடார்களும் மேலாடை அணியலாம் என்று அறிக்கை வெளியிட்டுள்ளார். *1872*-இல் திருச்செந்தூர் கோயிலினுள் நுழைய முயன்றபோது இவர்கள் தடுக்கப்பட்டுள்ளனர். இதைப்போன்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலினுள் நுழைவதும் தடை செய்யப் பட்டிருந்தது. இவர்கள் திருமண வரி, வீட்டு வரி, சொத்துவரி முதலிய வரிக்கொடுமைகளுக்குள்ளாயினர். பொதுக் கிணறுகள், சாலைகள், குளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டனர்.

சாணார் எனப்படுவோர் கிறித்தவ மதத்திற்கு மாறினர். இவர்கள் கிறித்தவ சமயப்பரப்பு அமைப்புகளால் ஆதரிக்கப்பட்டனர். குப்பாயம் அணிய உரிமை பெற்றனர். ஆனால், இவர்களின் குப்பாயம் கிழிக்கப்பட்டது. வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இத்தகைய சாதிக் கொடுமைகளால் சமுதாய ஒழுங்கில் பெரியமாற்றம் ஏற்பட்டதாகக் கருதுவர்.[24]

அந்தணர்கள் அல்லாதார்க்குப் புரோகிதம் செய்யத் தனியாக அந்தணர்கள் காணப்பட்டனர். கோமுட்டிகள் என்ற பிரிவினர்க்குப் புரோகிதம் செய்யத் தனியாக அந்தணர்கள் காணப்பட்டனர். இவர்கள் வேறு எக்குலத்தினர்க்கும் புரோகிதம் செய்வது இல்லை.

ஆதிசைவ அந்தணர்கள் அல்லது குருக்களுடன் பிற அந்தணர்கள் உணவுக் கலப்பும் இரத்தக்கலப்பும் கொள்வதில்லை. உணவுத்தடை, அகமணமுறை என்பன சாதியின் தன்மைகள் ஆகும். இதைப் போன்று தீட்சிதர்களும் வேறு எந்த அந்தணர்களுடனும் திருமணம் செய்துகொள்வது இல்லை. 'தில்லைப் பெண் எல்லைதாண்டக் கூடாது' என்று ஒரு பழமொழி வழக்கில் உள்ளது.

சாதிமுறை என்ற அமைப்பில் சாதிச்சபை (Caste Council) என்பது சிறப்பிடம் வகிக்கும். சாதிக்கட்டுப்பாடுகளை மீறுவோர்கள் இதன்மூலம் தண்டிக்கப்படுவர். சாதியைவிட்டு விலக்கி வைக்கப்படுவர். அவர்களுடன் எந்த உறவும் கொள்வதில்லை. இவ்வாறு, சாதிமுறை தன் உறுப்பினர்களைச் சாதிச்சபை மூலம் கட்டுப்படுத்தியது. ஒவ்வொரு சாதியும் தனக்கென ஒரு சாதிச் சபையைக் கொண்டிருந்தது. இதன் தலைவர் ஊர்க்கவந்தன், பெரிய தனக்காரர், நாட்டாண்மைக் காரர், காரியஸ்தர் என அழைக்கப்பட்டார். இவர்களால் தீர்க்க முடியாத வழக்குகள் பெரிய நாட்டான் அல்லது எசமான் என்பவரைத் தலைவராகக் கொண்ட சபைமூலம் தீர்க்கப்பட்டன. இவர்களின் எல்லைக்கு உட்பட்ட இடம் நாடு எனப்பட்டது. இவர்களுடைய தலைமை மரபு வழியாக வரும். சில நேரங்களில் தேர்தல் மூலமும் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவதுண்டு. சாதிச்சபையின் பணிகள் திருமணம் செய்வித்தல்,

ஒழுக்கம், சமயக்குற்றங்கள், உணவு, தடைசெய்யப்பட்ட தொழில்கள், சிறப்புச்சடங்கு, திருமணச்சடங்கு, புனித விலங்குகளையும், பறவைகளையும் கொல்லுதல், சொத்துப் பங்கீடு, ஓடிப்போன மனைவி, மணவிலக்கான பெண்களுக்கு வாழ்க்கைத் தொகை அளித்தல் என்பன பற்றியனவாக அமையும்.

வலங்கை - இடங்கைப் பிரிவினர்களிடையே உரிமைக்காக அடிக்கடி போராட்டங்கள் நிகழ்ந்தன. இப்பூசல் கொலைகளிலும் கொள்கைகளிலும் முடிந்துள்ளன. எக்ஸ்பிளனேட் மைதானத்தில் குறுக்கிட்டுச் சென்றமை, திருவொற்றியூர் கோயில் தொடர்பான நிகழ்ச்சி, திருவிழாக்களின்போது தெருக்களில் கொடிகள் கட்டல் போன்ற காரணங்களுக்காகவும் இவர்களுக்கிடையே பூசல்கள் நிகழ்ந்துள்ளன.[25]

இதைப்போன்ற விசுவ பிராமணர் என்ற பிரிவினர்க்கும் அந்தணர்களுக்கும் இடையே பூசல்கள் ஏற்பட்டு நீதிமன்றம் வரை சென்றுள்ளனர்.

இவ்வாறு, சாதிமுறை என்ற சமுதாய நிறுவனம் காரணமாக மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் பெருகின. தாழ்த்தப்பட்ட பிரிவினர் பல இன்னல்களுக்கு ஆளாயிருந்தனர். பல இழிநிலைகளுக்குள்ளாயினர். சாதியின் அடிப்படையில் போராட்டங்களும் பூசல்களும் நிகழ்ந்தன. இவற்றால் சமுதாய அமைதி குறைந்தது. சமுதாய முன்னேற்றம் குன்றியது.

இந்நிலையில் தாழ்த்தப்பெற்ற பிரிவினர்களுக்கு அமைப்புகள் காணப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்று முக்கிய கூறுகள் தாழ்த்தப்பெற்ற சாதியினரின் சலுகைகளுக்காக முயன்றன என்பர்.

1. 1860-இல் ஆங்கில அரசு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அறிவித்தல்.

2. 1833-ல் சமயம், நிறம், பிறப்பு ஆகியவை காரணமாக ஒருவன் அரசு வேலை பெறத்தடை இல்லை என்று அறிவித்தல்.

இவை இரண்டும் விக்டோரியா மகாராணியின் பிரகடனத்தின் (1858) இன்றியமையாப் பகுதிகளாயின.

3. புதிய, பெரிய அளவிலான தொழிற்சாலைகள் நிறுவுதல். இவற்றில் சாதிவேறுபாடின்றி அனைவரும் வேலை செய்ய அனுமதி அளித்தல்.

இவை தாழ்ந்த சாதியினர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தங்களுக்கென ஓர் அமைப்பை உருவாக்கத் தூண்டின

1850-இல் சாதிமுறையின் இயலாமையை அகற்றும் சட்டம் கொண்டுவரப்பட்டது. (The Caste Disabilities Removal of Act - 1850). இது சமய மாற்றத்தை எளிமைப்படுத்தியது. இதனால் சாதியின் ஆதிக்கம் குறைந்தது. இச்சட்டம் சாதி மாற்றம் அல்லது சமய மாற்றம் காரணமாகச் சொத்துரிமையைத் தடைசெய்வதை அகற்றியது. இதனால் பலர் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தனர்.

சிறப்புத் திருமணச் சட்டம் (Special Marriage Act) 1872-ல் கொண்டு வரப்பட்டது. இது சாதிமுறையின் அகமண முறையைத் தகர்த்தது. எச்சாதியினரும் தங்கள் விருப்பம்போல் பிற சாதியினருடன் திருமண உறவு கொள்ள இச்சட்டம் வகை செய்தது.

ஆங்கிலக் கல்வியின் அறிமுகம், பெரிய, புதிய தொழிற் சாலைகள் பெருகுதல், பெரு நகரங்களின் வளர்ச்சி போன்றவை முழு இந்துச்சமுதாய அமைப்பை மாற்றின.

ஆங்கில நீதி மன்றம் உருவாகியதன் காரணமாக ஒரே மாதிரியான, பொதுவான சட்டம் ஏற்பட்டது. இது சாதிமுறையின் சாதிச் சபையை வலுவிழக்கச் செய்தது.

எனவே, ஆங்கிலேயர் வருகைக்குப்பின் பறையர் என்று ஒதுக்கிவைக்கப்பட்ட பிரிவினர்க்கு விடிவுகாலம் ஏற்பட்டது. சிலர் கிறித்தவர்களாகச் சமய மாற்றம் செய்து சமுதாயத்தில் உயர்நிலை அடைந்தனர். சிலர் ஆங்கிலேயர்களுக்குப் பணிகள்

செய்து குடிநலம் எய்தினர். ஆங்கிலேயர்களிடம் சமையல்காரர்களாகச் சிலர் பணிபுரிந்தனர். பெண்கள் தாதிப் பெண்களாகப் பணிபுரிந்தனர்.[26]

சிற்றுண்டிவிடுதிகள், தங்குமிடங்கள் முதலியன தோன்றின. இதனால் மக்களிடையே காணப்பட்ட தூய்மை, தீட்டு போன்ற எண்ணங்கள் குறைந்தன. சூழ்நிலையின் கட்டாயத்தால் சாதிச் சட்டங்கள் தகர்க்கப்பட்டன. உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் முதலான மேற்கத்திய மதிப்புகளின் கலப்பு, விரைந்த போக்குவரத்து வசதி, தொலைத்தொடர்பு சாதனங்களின் அறிமுகம், அச்சு இயந்திரம் முதலியவற்றால் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இதனால் சாதிமுறை நெகிழ்வடைந்தது.

இவ்வாறு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சாதிமுறை நெகிழ்வு என்ற சமுதாய மாற்றம் ஏற்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

பெண்கள் நிலை

வரலாற்றுப் போக்கில் பெண்கள் நிலைகுறித்துப் பார்த்தால் புராதனச் சமுதாய அமைப்பில் பெண்கள் ஆண்களுக்கு இணையான நிலையில் வாழ்ந்துள்ளனர் எனக் கருதமுடிகிறது. புராதனச் சமுதாய அமைப்பு சிதைவுற்று நாகரிகச் சமுதாய அமைப்பு தோற்றம் கொண்டதும் தாய்வழிச் சமுதாய அமைப்பு சிதைவுற்று ஆண் ஆதிக்கச் சமுதாய அமைப்பு தோன்ற ஆரம்பித்துவிட்டது. சங்க இலக்கியத்தைப் பார்க்கும்போது பெண்கள் நிலை பொதுவாக மேம்பட்டுக் காணப்பட்டது என்றே கருதலாம். பல பெண்பாற் புலவர்கள் காணப்பட்டனர். பெண்கள் கல்வி கற்கும் உரிமை பெற்றிருந்தனர். உடன்கட்டை ஏறும் நிலை பற்றி அறியமுடிகிறது. ஆனால் இந்நிலைக்குப் பெண்கள் வலியுறுத்தப்பட்டனர் என்று கருதமுடியாது. கைம்மை நிலை பெண்களுக்கு இழைக்கப்பட்ட சமுதாயக் கொடுமை என்று கருதலாம்.

ஆனால், சங்க காலத்திற்குப் பின் பெண்கள் நிலை தாழ்வடையத் தொடங்கிற்று எனலாம். சமண, பௌத்த சமயக் கருத்துக்கள், மருதநில வளர்ச்சி, ஆண் ஆதிக்கநிலை முதலான

பல்வேறு காரணங்களால் பெண்கள்நிலை தாழ்வடையத் தொடங்கிற்று. இந்நிலை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பெண்கள் நிலை தாழ்வுற்றே காணப்பட்டது என்று கருதலாம். பால் அடிப்படையில் அமைந்த சமுதாயத் தரப்பிரிவு நிலையில் பெண்கள் தாழ்வுற்றே காணப்பட்டனர்.

பெண்களின் நிலை பற்றிக் கூறும் நீரா தேசாய் பெண்கள் தாழ்வுற்ற பிறவிகள், ஆண்களைவிடத் தாழ்வானவர்கள். இன்றியமையாமை இல்லாதவர்கள், ஆளுமை அற்றவர்கள், சமுதாய நிலையில் முழு அடிமைநிலைக்குஆளானவர்கள், உரிமைகளற்றவர்கள், அமுக்கப்பட்டவர்கள் எனக் கருதப்பட்டனர் என்கிறார். ஆண்வழிக் கூட்டுக்குடும்பம், பலதாரமணம், புருடாமுறை, சொத்துரிமை அமைப்பு,, இளவயது மணம், சதி, கைம்மை முதலானவை பெண்களின் உயர்வைத் தடை செய்தன என்கிறார்.[27] அல்டெகர் (Altekar) உபநயனத்தின் தொடர்ச்சியின்மை, கல்வியில் கட்டாயமின்மை, திருமண வயதுக்குறைப்பு ஆகியவற்றால் பெண்கள் நிலையும், அந்தஸ்த்தும் குறைந்துவிட்டன என்கிறார்.[28]

பெண்களின் இயல்பான முன்னேற்றத்தைப் பாதித்த காரணிகளில் ஒன்றாகக் குழந்தை மணத்தைக் குறிப்பிடுகிறார் சுப்பிரமணியம்.[29]

சென்னை மாகாணத்தில் குழந்தைமணம் மற்ற இடங்களை ஒப்பிடும்போது குறைவாகவே காணப்பட்டது. 1921-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 24½% இந்துப்பெண்கள் 10 முதல் 15 வயது வரையுள்ள பெண்கள் - குழந்தை மணத்திற்கு இலக்காகியுள்ளனர் என்பது தெரியவருகிறது. 1921-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் 2½ மில்லியன் மக்கள் தொகையில் பெருமளவு பெண்கள் 5 வயதுக்குள் திருமணம் செய்விக்கப்பட்டுள்ளனர். ஒவ்வோர் ஆயிரம் பெண்களில் ஐம்பது பெண்கள் ஐந்து வயதிற்குள் திருமணம் செய்விக்கப்பட்டுள்ளனர்.

1000 பெண்களில் 15 தமிழ் அந்தணர் குலப் பெண்கள் 5 வயதில் திருமணம் செய்விக்கப்பட்டுள்ளனர்.1000 பெண்களில்

62 தமிழ் அந்தணர்குலப் பெண்கள் 5 வயது முதல் 12 வயது வரையுள்ளவர்கள் - குழந்தைமணம் காரணமாக மிக விரைவாகத் தாய்மை அடையும் கொடுமைக்கு உள்ளாகியுள்ளனர். பெண்களின் சமுதாயக் கொடுமைகளில் ஒன்றாகிய உடன்கட்டை ஏறுதல் என்பது சில மணித்துளிகளான துன்பம். ஆனால் குழந்தை மணம் என்ற சமுதாயக் கொடுமையானது வாழ்க்கை முழுதும் அனுபவிக்கும் துன்பமாக உள்ளது. ஒரு பெண் குழந்தை, குழந்தை மனைவியாகி, குழந்தை அம்மாவாகி, குழந்தையாகவே இறக்கிறது எனக் குழந்தை மணத்தின் கொடுமையைக் கூறுவர்.

1844 ஆம் ஆண்டு அறிக்கை பெண் குழந்தைகள் பத்து வயதை எட்டும் முன்பே திருமணம் செய்விக்கப்படுகின்றனர். அவர்கள் கணவனால் அடிமைகள் போல நடத்தப்படுகின்றனர் என்று கூறுகிறது.

சாரதாச் சட்டம் நிறைவேற்றப்படும் வரையில் தமிழகத்தில் தேவாங்கச் செட்டிகளிடத்தில் சிறுகுழந்தைகளுக்குத் திருமணம் செய்துவைக்கும் வழக்கம் காணப்பட்டதாகக் கருதுவர். இவ்வழக்கம் கோமுட்டிகள் என்ற பிரிவினரிடமும் காணப்பட்டது. பெண்கள் பூப்படையும் முன்பு அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதில் அந்தணர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர் என்பர்.[31]

1891-ஆம் ஆண்டுச் சென்னை மாகாணக் கணக்கெடுப்பின்படி 10000 பெண்களில் 1916 பேர் விதவைகள் நிலையில் காணப்பட்டனர் என்றும் இது மொத்த மக்கள் தொகையில் 19.6% அதாவது 1/5 பங்கு என்றும் கூறுவர்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி குழந்தை மணம் குழந்தைகளின் ஒளிமயமான வாழ்க்கையை இருள்மிக்க தாக்குகிறது எனக் குழந்தை மணத்தின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பெண்குழந்தைகள் குழந்தைப் பருவத்திலேயே தாய்மை அடைவதால் உடல் நிலையிலும் உள்ள நிலையிலும் பாதிப்புக்குள்ளாகின்றனர். குழந்தை மணத்தால் குழந்தை விதவை நிலை ஏற்படுகிறது.

தோபியாஸ் (Dobios) என்பவர் குழந்தை மணத்தால் விதவை நிலைக்கு உள்ளாகும் பெண்கள் மதிப்பிழக்கின்றனர் என்றும், குழந்தை இன்மைக்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்றும், விதவை நிலையிலுள்ளவர்கள் சமுதாயத்தால் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர் என்றும், தலைமுடியை மழித்தல், அணிகலன் அணியத்தடை, வண்ண உடை அணியத் தடை, குடும்ப விழாக்களில் கலந்து கொள்ளத்தடை, தீய சகுனங்களாகக் கருதப்படல், மறுமணத் தடை போன்ற கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் குறிப்பிடுகிறார். எனவே, குழந்தை மணம் என்பது சமுதாயத்தில் பெண்களுக்கு இழிநிலையை உண்டாக்கும் காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளமை புலனாகின்றது.

குழந்தை மணத்தைப் போன்ற கொடுமைகளில் ஒன்று தேவதாசிமுறை ஆகும். தமிழகத்தில் இவர்கள் குறிப்பிடத்தக்க இடம் வகித்துள்ளனர். இடைக்கால இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் தேவதாசிகள் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. கி.பி.9, 10 ஆம் நூற்றாண்டுகளில் இவர்கள் தனியொரு சாதியினராகக் கருதப்பெற்றிருந்தனர். விசயநகரப் பேரரசின் ஆட்சிக்குப் பின் தேவதாசிகள் எனப்படுவோர் நிலை இழிவடையத் தொடங்கியது. எனினும், சமுதாய, பொருளாதாரச் சூழ்நிலைகளால் அவர்கள் தொடர்ந்து தேவதாசிகளாகக் காணப்பட்டனர்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற இடங்களில் இவர்கள் அரசு மானியம் பெற்றுள்ளனர்.

குடும்பத்தில் மூத்த பெண்ணைக் கோயில்களுக்கு அளிக்கும் வழக்கம், கருவுற்ற பெண்கள் எளிய பிரசவத்திற்காகக் குழந்தையைக் கோயிலுக்கு அளிக்கும் வழக்கம், பெண்களின் அழகு முதலான காரணங்களால் தேவதாசிகள் என்போர் கோயில்களில் காணப்பட்டனர். கோயில்களிலிருந்து இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. எவ்வாறேயினும் தேவதாசிமுறை என்பது பெண்களின் இழிநிலையையே காட்டுகின்றது எனலாம்.

கல்வியை எடுத்துக்கொண்டால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை பெண்களின் கல்வி வலியுறுத்தப்படவில்லை எனலாம்.[32]

பெண்களுக்கு இழைக்கப்பட்ட சமுதாயக் கொடுமைகளில் ஒன்று சதி என்பதாகும். சதி தமிழநாடு முழுதும் பரவிய தன்மையாகக் காணப்படவில்லை. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் சிறிதளவு காணப்பட்டது. ஏனைய மாவட்டங்களில் சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன என்பர்.

சதி என்பது ஓர் அருவருக்கத்தக்க சடங்கு (Labominable rite) என்று கருதப்பட்டது.[33]

சதி அல்லது உடன்கட்டை ஏறும் வழக்கம் தமிழகத்தில் பெரும்பாலும் மன்னர் குடும்பங்களிலேயும் பிரபுக்கள் மரபினரிடையேயும் காணப்பட்டது. 1659-இல் புரோன்ஸா என்பவர் ஒரு கடிதத்தில் திருமலை நாயக்கர் மன்னரின் 200 மனைவியர்களுள் சிறந்தவர்கள் அனைவரும் உடன்கட்டை ஏற்றிக் கொல்லப்பட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார்.[34]

நீதிபதி லூஷிங்டன் (G.M. Lushington) என்பார் சதியை ஒழிக்கும்படி பரிந்துரை செய்தார். தம் பரிந்துரையில் அவர் கணவனை இழந்த பெண் எவ்வாறு எரிக்கப்படுகிறாள் என்பதை விவரித்து அரசர்க்கு எழுதியுள்ளார்.

கவர்னர் - இன் - கவுன்சில் (Governor - in - Council) இதைப் பெரிய அளவில் எதிர்த்தார். தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்ட பிறகு சதி என்ற கொடுமைக்கு இலக்கான பெண்கள் பற்றிய அறிக்கை கொடுக்க வேண்டினார். இதற்கு வாஷிங்டன் 1813 முதல் 1819 வரை தான் நீதிபதியாகப் பணியாற்றிய காலகட்டத்தில் நூற்றுக்குக் குறையாத பெண்கள் சதிக்கு உள்ளாகியுள்ளனர் என்று பதில் அளித்தார். எனவே, அரசு இதைத் தடுக்க லூஷிங்டனுக்கு அனுமதி அளித்தது. ஆனால், மக்களின் சமய நம்பிக்கைக்கும் மதிப்பு அளிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியது.

இங்கிலாந்திலுள்ள சமயப் பரப்பு அமைப்புகள் (Missionaries) இம்முறையை ஒழிக்கப்பெரிதும் விரும்பின. இதனால் சென்னையில் சதி விசாரணை (Enquiries on Sati) அமைக்கப்பட்டது. தஞ்சை நீதிபதி 1821-ஆம் ஆண்டில் கடந்த பதினெட்டு மாதங்களில் 21 நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன என்றார். தமிழகத் தெற்கு மண்டலத்தில் திருச்சியில் 1816 முதல் 1819 வரை 2 நிகழ்ச்சிகளும், கும்பகோணத்தில் 1813 முதல் 1816 வரை 20 நிகழ்ச்சிகளும், 1816 முதல் 1819 வரை 18 நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன.[35]

பெண்டிங் பிரவு கவர்னர் ஜெனரல் ஆனதும் 1829 ஆம் ஆண்டில் தம் குறிப்பில் சதி சட்டத்திற்கு முரணானது என்றார். சதித் தடை ஒழுங்குமுறைச் சட்டம் 17 என்பது 1829ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. எனவே லூஷிங்டன் தம் குறிப்பில் சதி குற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக்கத்தக்கது என்றார். 1830ஆம் ஆண்டிற்குப் பின் சதி அரிதாகியது. சதித்தடைச் சட்டம் வந்த பின்னரும் சதி தமிழகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்பட்டது என்று சுப்பிரமணியன் கூறுகிறார்.[36]

இவ்வாறு குழந்தை மணம், கல்வி இன்மை, சதி, விதவை நிலை போன்ற காரணங்களினால் சமுதாயத்தில் பெண்கள்நிலை தாழ்வடைந்திருந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்கள் நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியமையையும் அறியமுடிகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற சமுதாய மாற்றங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகப் பெண்கள் வெளிப்படல் (emergence of women) என்பதைச் சுட்டுவர். மனைவி, அம்மா என்ற நிலையிலிருந்து பெண்கள் சமுகத்தின் தனிநபர் (individual of society) என்ற நிலைக்கு மாறினர். இதனால் பெண்கள் வலிமை பெற்றதுடன் பெண்களின் கருத்துக்களில் தனித்துவமும் ஏற்பட்டது என்று மார்க்ரெட் எல்.கார்மாக் (Margaret L.Cormack) கருதுகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செல்வ வளம் மிக்க மேட்டுக்குடியினர் வீடுகளிலுள்ள ஒருசில பெண்கள்

கல்வி கற்றனர். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பல பெண்கள் கல்வி கற்றனர். பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்றுப் பல பெண்கள் வேலையில் சேர்ந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராசாராம் மோகன்ராய் ஏற்படுத்திய பெண்கள் பற்றிய புதிய நோக்கு பெண்கள் நிலையில் வியக்கத்தக்க மாறுதல்களை உண்டாக்கியது என்று கருதுகின்றனர்.

ஆயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கில் அமெரிக்கன் மிசன் பாம்பேயில் முதல் பெண்கள் பள்ளியை நிறுவியது. 1822-ல் சென்னையில் 200000 மாணவர்களுக்கு 5000 மாணவிகள் கல்வி கற்றுள்ளனர் என்று மன்றோ குறிப்பிடுகின்றார். 1854-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி சென்னை மாகாணத்தில் 256 பெண் பள்ளிகள் காணப்பட்டன என்பதும் இவற்றில் 8000 பெண்கள் கல்வி கற்றனர் என்பதும் தெரியவருகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிறித்தவ மிசினரிகளின் முயற்சிகளாலும் தன்னார்வ நிறுவனங்களின் முயற்சிகளாலும் பெண்கள் தொடக்கப் பள்ளிகளில் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலும் அதிகரித்தது.

1866-ல் சென்னை அரசாங்கம் முதன் முதலில் பெண்கள் பள்ளியைத் திறந்தது. 1870-ல் முதன்முதலில் பெண்களுக்கான பயிற்சிக் கல்லூரிகள் உருவாயின. இக்கல்லூரிகள் மூலம் பெண்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்குரிய பயிற்சிகளைப் பெற்றனர்.

பெண்களுக்குக் கிடைத்த ஆங்கிலக் கல்வியின் காரணமாகத் திருமண வயதைத் தள்ளிப்போடுதல், பெண்களுக்குச் சுதந்திர எண்ணம் தோன்றுதல், தேவையற்ற சமுதாயக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக எண்ணல் போன்ற முன்னேற்றங்கள் ஏற்பட்டன. 2000 ஆண்டுகளாகப் பெண்களிடம் காணப்பட்ட இயலாமை நிலை நீங்கியது. பல ஆயிரக்கணக்கில் பெண்களுக்கான நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. புதியனவாக உருவாக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் பெண்கள் மருத்துவர்களாகவும், தாதியர்களாகவும் கல்வி பயின்றனர்.

பெண்களுக்கு இழைக்கப்பட்ட சமுதாயக் கொடுமைகளில் ஒன்றாகிய சதியை ஒழிக்க இராசாராம்மோகன்ராய் குரல் கொடுத்தார். தர்மசாஸ்திரங்கள், மனு போன்றவை சதியை வலியுறுத்தவில்லை என்பதை அவர் விளக்கிக் காட்டினார். இராசாராம் மோகன்ராயின் சிந்தனையின் விளைவாகச் சதியின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. வில்லியம் பெண்டிங் பிரபு சதியைப் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு 1829-இல் சதித்தடைச்சட்டம் கொண்டுவந்தார். சதியை ஒரு குற்றம் ஆக்கினார். இவ்வாறு சமுதாய நல எண்ணம் கொண்ட தலைவர்களின் முயற்சிகளாலும் மனிதாபிமான எண்ணம் கொண்ட ஆங்கில ஆட்சியாளர்களாலும் சமுதாயத்தில் பெண்களின் நிலை உயர ஆரம்பித்தது.

பெண்களின் நிலை உயர்வுக்காகச் சமுதாய நலச் சிந்தனையாளர்களும் சமுதாயநல இயக்கங்களும் இந்திய அளவில் அருந்தொண்டாற்றியுள்ளன. சான்றுகளாகச் சிலவற்றைச் சுட்டலாம்.

பெண்களின் முன்னேற்றத்திற்கான ஓர் உந்துதலை (inspiration) உருவாக்கியவர் சான்சி ராணி லட்சுமிபாய் (1835 - 1858) ஆவார். இவர் பெண்களிடம் மறைந்துகிடக்கும் திறமைகளை வெளிக்கொண்டுவந்தார் எனலாம். கர்நாடகத்தில் அந்தணர் குலத்தில் தோன்றிய பண்டிட் ராமாபாய் (1858 - 1922) சமுதாயத்தில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய சமூக நீதிகளுக்காகக் குரல் கொடுத்தார். 1880-இல் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்த வழக்கறிஞர் ஒருவரை மணந்து சாதிமுறையின் அகமணமுறையை முறியடித்தார். கலப்பு மணத்திற்கு வழிகாட்டினார். கணவர் இறந்த பின்னர் ‘ஆரிய மகளிர் சபா’ என்பதை ஆரம்பித்தார். இந்நிறுவனத்தில் 1882-இல் 300 பெண்கள் கல்வி கற்றனர். 1889-இல் பம்பாயில் ஆதரவற்ற விதவைப் பெண்களுக்காக இல்லம் நிறுவினார். மேடம் காமா (Madam Cama) (1861 - 1936) என்பவர் சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார். சுவன்ன குமாரி தேவி (Swanna Kumari Devi) (1855-1932) என்பவரும் பெண்கள் நலத்திற்காகப் பாடுபட்டார். இராமாபாய் ரானடே (1862-1922) என்பவர் 1884-இல் இந்துப் பெண்கள் அமைப்பை (Hindu Ladies Club) ஆரம்பித்தார். கல்வியற்ற பெண்களுக்கும் விதவைப்

பெண்களுக்கும் இதன்மூலம் கல்வி அளித்தார். தாதியர் மருத்துவ நிறுவனம் (Nursing Medical Association) அமைத்துப் பல பெண்களுக்குத் தாதியர் பயிற்சி அளித்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் *(1863 - 1902)* விவேகானந்தர் பெண்களின் முன்னேற்றத்திற்காக வியக்கத்தக்க தொண்டாற்றினார். எந்த நாடு பெண்களுக்கு மதிப்பு அளிக்கவில்லையோ அந்த நாடு சிறந்த நாடாக இருக்காது என்றார். பெண்களை நீண்ட நாட்கள் அடிமைகள் போல் அடக்கி வைக்கமுடியாது என்றும் ஒருநிலையில் அவள் சிங்கமாக மாறுவாள் என்றும் எச்சரித்தார்.

1882-இல் கல்வி ஆணைக்குழு (Education Commission) பெண்கல்வியைத் தொலைதூர நோக்குடன் விவாதித்தது. பெரும்பாலான பெண் பள்ளிகளைத் துவக்கியது. பன்னிரண்டு வயது பெண்களைப் பள்ளிக்கு ஈர்த்தல் முதலான திட்டங்களைத் தீட்டியது. பெண்களைப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியமர்த்தியது. ஆசிரியர்பயிற்சி பெற வரும் பெண்களுக்கு ஊக்கத்தொகை அளித்தது.

இந்தியச் சமுதாய மாநாட்டின் (Indian Social Conference) தோற்றம் பெண்களின் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கியது என்று கருதுவர். இதன் பிறப்பிடம் சென்னை. இம்மாநாடு முதன்முதலில் *1887* ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இராசா சர்.டி.மகாதேவராவ் தலைமையில் நடைபெற்றது. *1887*-ஆம் ஆண்டு முதல் இம்மாநாடு காங்கிரசார் கூடுமிடங்களில் எல்லாம் நடைபெற்றது.[37]

தென்னாட்டு வித்தியாசாகர் என்று அனைவராலும் போற்றப்படும் விரேசலிங்கம் பந்து பந்துலுகாரு என்பவர் வித்தியாசாகரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டுப் பெண்கள் நலன்களுக்காகப் பாடுபட்டார். இவர் விதவைப் பெண்களின் துன்ப நிலையை உள்ளார்ந்த உணர்வுடன் அணுகினார்.[38] இவர் முயற்சியால் சென்னை எழும்பூரில் *1891*-இல் விதவை மறுவாழ்வு இல்லம் தொடங்கப்பட்டது. இவர் குழந்தை மணத்தைத் தீவிரமாக எதிர்த்தார்.

கார்வே (Karve) என்பவர் 1896-இல் பூனாவில் பெண்களுக்காகக் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார். மகாராட்டிரத்தில் இதன் கிளைகள் பல செயல்பட்டன. இவற்றில் பெண்களுக்குக் கல்வி மட்டுமன்றி வீட்டுப் பொருளாதாரமும் கற்றுக் கொடுக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் திருமணமான, திருமணமாகாத, விதவை, ஒதுக்கப்பட்ட பெண்களுக்காகச் செயல்பட்டன.

இராசாராம் மோகன்ராயின் பிரம்மசமாஜம் பெண் சுதந்திரம், பால் சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டது. சதி, விதவை மணம் என்பன கண்டிக்கப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்கள் நிலையில் ஏற்பட்ட மாற்றம் என்பது பெண்கள் தம் நிலையைத் திரும்பப் பிடித்தல் (recaptury) என்பது ஆகும். ஏனெனில், வேத காலத்தில் பெண்கள் நன்கு மதிக்கப்பெற்றனர். பல்வேறு சமுதாய, அரசியல், பொருளாதார, சமய உரிமைகளைப் பெற்றிருந்தனர். பின்பு அவர்கள் நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர்கள் உயர்நிலைக்கு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன எனலாம்.

பெண்கள் பற்றிய பார்வையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கான காரணங்களாக,

1. மேற்கிலிருந்து வந்த தாராளவாதத் தத்துவத்தின் தனி மனிதக் கொள்கையை ஏற்றல் (acceptance of tenets of liberal philosophy)

2. வாழ்க்கை, அதன் சிக்கல்கள் ஆகியவை பற்றிய பகுத்தறியும் பார்வை

3. பேச்சுரிமை

4. அதிகாரக்குழுவின் விமர்சனம் (Criticism of Authority)

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட, அதிகாரபூர்வமாக நிலை நாட்டப்பட்ட சமயக் கோட்பாட்டை வினாவுதல் (Question of accepted dogmas)

6. தனிமனித இன்றியமையாமையை ஏற்றல்

7. இராசாராம் மோகன்ராய் போன்றவர்களால் உபநிடதங்கள், தரும நூல்கள் முதலியன படிக்கப்பட்டமை.

8. பழங்கால வேதகாலச் சமுதாயத்தைத் தயானந்த சரஸ்வதி, ஆரிய சமாஜத்தைச் சார்ந்தவர்கள் முதலியோர் ஆராய்ந்தமை.

9. தாதாபாய் நௌரோஜி, கோபாலகிருஷ்ண கோகலே, டாயன்பி போன்றோர் பெண்கல்வி இன்றி நாட்டிற்கு முன்னேற்றம் இல்லை என்பதை உணர்த்தல் முதலான பல காரணங்களைக் கூறுவர். இவற்றிற்கும் மேலாகச் சட்டங்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பெரும் பங்காற்றியுள்ளன. சான்றுகளாகச் சிலவற்றைக் கூறலாம்.

1860-இல் இயற்றப்பட்ட சட்டம் பெண்களின் திருமண வயதைப் பத்து என்பதிலிருந்து உயர்த்தியது. 1865 ஆம் ஆண்டுச் சட்டம் 12 வயது ஆக்கியது. 1925 ஆம் ஆண்டுச் சட்டம் 14 வயது ஆக்கியது. 1856 இல் விதவை மறுமணச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1870இல் பெண்குழந்தை கொலைத் தடைச் சட்டம் (Female Infanticide Prevention Act, 1870) கொண்டு வரப்பட்டது. இதன்படி பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டம் இயற்றப்பட்டது. 1872- ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமணச் சட்டம் மூலம் பதிவுத் திருமணம் வலியுறுத்தப்பட்டது. விதவை மணம் ஆதரிக்கப்பட்டது. பெண்ணின் திருமண வயது 14 ஆனது. புறமணமுறை ஆதரிக்கப்பட்டது. ஒருதாரமணம் வலியுறுத்தப்பட்டது.

1891 ஆம் ஆண்டு ஒப்புதல் வயதுச் சட்டம் (Age of Consent Bill 1891) 12 வயதுக்குக் குறைந்த பெண்ணை மனைவியாகக் கொண்டு வாழத் தடை விதித்தது. சாரதாச் சட்டம் ஆணுக்கு 18 வயது என்றும் பெண்ணுக்கு 14 வயது என்றும் திருமண வயதை நிர்ணயித்தது. 1860-இல் குழந்தை மணச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

பழங்கால இந்துச் சட்டத்தை உருவாக்கியவர்களின் இன்றியமையா நோக்கங்களில் ஒன்று கூட்டுக்குடும்பத்தைப் பாதுகாத்தல் என்பது ஆகும். எனவே, பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டது. சொத்துரிமை அளிக்கப்பட்டால் பெண்கள் தம் கணவன் வீட்டிற்குச் சொத்துக்களைக் கொண்டு சென்றுவிடுவர் எனக் கருதப்பட்டது. இதனால் பெண்களின் சொத்துரிமை மறுக்கப்பட்டது. இதை அகற்றத் திருமணமான

பெண்களின் சொத்துரிமைச் சட்டம் (Married Women's Property Act - 1874) கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு ஆங்கிலக் கல்வி அறிமுகம், பெண்களுக்குக் கல்வி அளித்தல், பெண்கள் நலன்களுக்கான சட்டங்கள், சமுதாயத் தலைவர்களின் முற்போக்குச் சிந்தனை, சமுதாய நல இயக்கங்களின் தொண்டு போன்ற பல்வேறு காரணங்களால் பெண்களின் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ள மையையும் இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையையும் அறியமுடிகிறது.

சட்டங்கள்

சமுதாயத்தில் மாற்றங்களை உருவாக்கும் காரணிகளில் சட்டங்கள் இன்றியமையாத பங்காற்றுகின்றன. சட்டத்தை மீறுவோர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்படுவதால் சட்டங்கள் விரைந்த சமுதாய மாற்றங்களை உருவாக்குகின்றன எனலாம். இவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சட்டங்களும் தமிழ்ச் சமுதாயத்தில் மாற்றங்களை உருவாக்கின என்று எண்ணலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிருவாகத்தின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தனிநபர் ஆட்சி (Personal Rule) என்பதற்குப் பதில் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) ஏற்பட்டது. போலீஸ், நீதி, கல்வி, போக்குவரத்து முதலியவற்றில் மாறுதல்கள் ஏற்பட்டன.

சட்டத்தின் செயல்பாடுகள் பற்றி இரு கருத்துக்கள் உள்ளன.

1. சட்டம் சமுதாயக்கட்டுப்பாட்டுக் கருவியாகச் செயல்படல்.

2. சட்டம் இயங்காற்றல் (dynamic) உடையதாக இருக்கவேண்டும். அது சமுதாயக் கட்டுப்பாட்டுக் கருவியாகத் திகழ்வதுடன் மட்டுமன்றி, சமுதாய நடவடிக்கைகள், நம்பிக்கைகள், மதிப்புகள் ஆகியவற்றில் தாக்கத்தை உருவாக்கச் சமதாய மாற்றத்தைக் கொண்டுவரவும் செய்ய வேண்டும்.

இவ்வகையில் சட்டங்கள் பல சமுதாய மாற்றங்களை உருவாக்கியுள்ளன.

இந்தியாவில் பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் அரசு சட்டங்களை உருவாக்கவில்லை. அரசர்கள் தரும நூல்களில் கூறியுள்ள கருத்துக்களுக்கேற்ப நீதியை நிருவகித்தனர். தர்மா என்பது அரசரைவிட மேலாகவும் அரசர்க்கு அரசராகவும் கருதப்பட்டது.

இந்தியாவில் ஆங்கில அரசு ஏற்பட்ட பிறகும் இறுதிச் சான்றாகத் தரும சாத்திரக் கருத்துக்களே எடுத்துக் கொள்ளப்பட்டன. இராசாராம் மோகன்ராய், ஈஸ்வரச் சந்திர வித்தியாசாகர் போன்ற சமுதாய நலச் சிந்தனையாளர்கள் ஆங்கில அரசைப் புதிய சமுதாய மதிப்பிற்கும் புதிய சமுதாயப் பார்வைக்கும் ஏற்றவகையில் சட்டங்களில் மாற்றம் கொண்டுவர வேண்டினர். அதன்படி சட்டங்கள் இயற்றியதன்மூலம் பல சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்தன.

ஆங்கில அரசு 1801-இல் சென்னையில் தலைமை நீதி மன்றத்தை அமைத்தது. 1833-இல் ஆங்கில நாடாளுமன்றத்தின் ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி இந்திய மண்ணில் எந்த இந்தியருக்கும் இக்குலத்தினன், இவ்விடத்தினன், இச்சமயத்தினன், இந்நிறத்தினன் என்ற காரணத்தைக் காட்டி அரசாங்கத்தின்கீழ்ப் பணிபுரியும் உரிமை மறுக்கப்படலாகாது என்று விதிகள் வகுக்கப்பட்டு அவை நடைமுறைக்கு வந்தன. இதனால் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை ஏற்பட்டது.

மராத்தியரின் சூறையாடலும், சௌத் வரிக்கொடுமையும், பாளையக்காரர்களின் 'சுரண்டலும், ஊருக்கு ஒரு நீதி, குலத்துக்கு ஒரு நீதி என்ற முறையும் ஒழிக்கப்பட்டன. இதன் விளைவாக மக்கள் வாழ்க்கையில் அமைதி நிலவிற்று. நீதியும் நேர்மையும் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் வேலியிட்டன என்பர்.[39]

1883-இல் மதம், நிறம், பிறப்பிடம் முதலிய காரணங்களின் அடிப்படையில் ஒருவர்க்கு விதிக்கப்பட்ட

தடைகளை நீக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டது. (Disabilities Removal Act - The Government of India Act - 1833) இதனால் சமுதாயத்தில் சமத்துவநிலை மலர ஆரம்பித்தது.

1861-இல் இங்கிலாந்து நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின்படி சென்னையில் உயர்நீதிமன்றம் நிறுவப்பட்டது. ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய சட்டம் (1861) ஒன்றின்கீழ்ச் சட்டங்களையும் விதிகளையும் இயற்றிக் கொள்ளும் அதிகாரம் சென்னை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டது. 1862, 1865 ஆண்டுப் பட்டயங்களின்படி சென்னை மாகாணத்திற்குத் தனி உயர்நீதிமன்றம் அமைக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் குற்ற விசாரணை ஒழுங்குமுறைச் சட்டம் (Indian Criminal Proceedure Code), இந்தியச் சாட்சியச் சட்டம் (Indian Evidance Act) ஆகியன இயற்றப்பட்டன. இவற்றால் சமுதாயத்தில் சாதிமுறையின் அடிப்படையில் காணப்பட்ட தீர்ப்புகள் நிலைகுலைந்தன. மேலும், இச்சட்டங்கள் அனைத்தும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் தேசிய உணர்ச்சிக்கும் வழிவகுத்துக்கொடுத்தன.[41] இவ்வாறு ஆங்கில அரசு உருவாக்கிய நீதிமன்றங்கள், இயற்றிய சட்டங்கள் போன்றவற்றால் தமிழகத்தின் அரசியல், சமுதாயத்தன்மைகள் பாதிக்கப்பட்டு மாற்றங்கள் நிகழ்ந்தன எனலாம்.

கூட்டுக்குடும்பச் சிதைவு

சமுதாயத்தில் காணப்படும் இன்றியமையா நிறுவனங்களில் ஒன்று குடும்பம் ஆகும். சமுதாயத்தின் தொடர்ச்சியைக் காத்தல், எதிர்காலச் சமுதாய உறுப்பினர்களை உருவாக்கல், குழந்தைகளுக்குக் கல்வி அளித்தல், குழந்தைகளைச் சமூகமயமாக்கல் முதலான பல பணிகளைக் குடும்பங்கள் மேற்கொள்கின்றன. குடும்பங்களை அவற்றுடன் இடம்பெறும் உறுப்பினர்களின் அடிப்படையில் தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என்றும் பிரிப்பர். கணவன், மனைவி, குழந்தைகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குடும்பம் தனிக்குடும்பம் எனப்படும். பல தனிக்குடும்பங்கள் இணைந்து காணப்படுவது கூட்டுக்குடும்பம் ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாகக் கூட்டுக்குடும்பச் சிதைவைக் குறிப்பிடலாம்.

கி.பி.18, 19ஆம் நூற்றாண்டுகளில் பல தனிக் குடும்பங்களை உள்ளடக்கிய கூட்டுக்குடும்பங்கள் சமுதாயத்தில் இடம்பெற்றிருந்தன. புதிய தொழில் நுட்பங்களின் அறிமுகம், ஆங்கில முறைக்கல்வி, பெண்கல்வி, நகரியமாதல், தொடர்பு வசதிகள், பொருளாதாரச் சுதந்திரம் போன்ற பல்வேறு காரணங்களால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கூட்டுக் குடும்பங்கள் சிதைவுற்றுத் தனிக்குடும்பங்களாகி விட்டன. தொடர்பு வசதிகள் மூலம் நகரியமாதல் ஏற்பட்டது. ஆங்கில முறைக்கல்வி, பெண்கல்வி மூலம் வேலைவாய்ப்புகள் ஏறபட்டன. வேலையின் பொருட்டுக் கூட்டுக்குடும்பத்தை விட்டுப் பிரிந்துசெல்லும் நிலை ஏற்பட்டது. கூட்டுக் குடும்பத்தில் பொருளாதார நிலையில் அதன் உறுப்பினர்கள் குடும்ப நிறுவனத்தைச் சார்ந்தே காணப்பட்டனர். வேலை வாய்ப்பு, தொழில் மயமாதல் முதலியன மூலம் பொருளாதாரச் சார்புநிலை நீங்கிப் பொருளாதாரத் தற்சார்புநிலை ஏற்பட்டுவிட்டது. முன்னர், பொழுதுபோக்கு, உணவு, தங்குமிடம் முதலியவற்றிற்கு மக்கள் குடும்பத்தையே சார்ந்து வாழும் நிலை காணப்பட்டது. ஆனால் திரைப்படங்கள், சிற்றுண்டி விடுதிகள், தங்குமிடங்கள் ஆகியவை தோன்றியதன் காரணமாக இந்நிலை நீங்கிவிட்டது. இவற்றால் கூட்டுக் குடும்பங்கள் பல உடைந்துவிட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட தொழில் நுட்பத்துடன் நகரியமாதலில் ஏற்பட்ட வளர்ச்சி ஆகிய இரண்டும் இந்தியாவின் பழைமையான, எளிமையான கிராமிய வாழ்க்கையைக் குலைத்தன. இதனால் தனித்து வாழும் நிலையும் (individuality), இடப்பெயர்ச்சியும் நிகழ்ந்தன. இதன் காரணமாக மரபு வழிக் குடும்ப அமைப்பு சிதைவுற்றது. ஆங்கில வழிக் கல்வியின் அறிமுகத்தால் சிலர் தமக்கெனப் புதிய மதிப்பு முறைகளையும் (Prestige), புதிய வாழ்க்கை வழியையும் அமைத்துக் கொண்டனர். ஆங்கிலக் கல்வி அறிமுகம் கூட்டுக் குடும்பத்தை உடைக்கும் கருவியானது. ஆங்கிலக் கல்வியால் அரசு வேலை பெறல், காலமுறை இடமாற்றம் முதலியன நிகழ்ந்தன. நகரியமாதல் மூலம் மேட்டுக்குடியினரின் தொடர்பு ஏற்பட்டது என்று கூட்டுக்குடும்பச் சிதைவு பற்றிக் கூறுவர்.[41]

1891 ஆம் ஆண்டுச் சட்டப்படி (Gains of Earning Act) தொழில் அடிப்படையில் கிடைக்கும் வருமானத்தை ஒருவன்

தானே வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டது. இதனால், குடும்ப உறுப்பினர்கள் தம் பொருளாதாரத் தேவைகளுக்குக் கூட்டுக்குடும்பத்தைச் சார்ந்து நிற்கும் நிலை அகன்றது. இதனாலும் கூட்டுக் குடும்பம் சிதைவுற்றது. இவ்வாறு சமுதாயத்தில் ஒரு பொருளாதார அமைப்பு மாறும்போது மக்களின் வாழ்க்கையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் குடும்ப வாழ்க்கையிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

பொருளாதார நிலை

ஒரு நாட்டின் பொருளாதாரநிலை அந்நாட்டில் சமுதாய மாற்றங்களைக் கொண்டுவருவதில் பெரும்பங்காற்றுகின்றது. சமுதாய மாற்றத்திற்குரிய காரணிகளில் பொருளாதாரக் காரணியும் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றது.

கி.பி. 1800க்கும் 1860க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையைத் தங்கள் வாணிபக் கொள்கையாலும் நடைமுறையாலும் ஏறத்தாழத் தகர்த்தேவிட்டனர் எனலாம் என்று கருதுவர்.[42] ஆங்கில அரசு தம் நாட்டுப் பொருள்களை வேண்டிய அளவுக்குக் கூடுதலான விலையில் விற்றது. இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்றது. இந்தியாவைத் தம் நாட்டுப் பொருள்களின் விற்பனைச் சந்தையாக்கியது. இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களுக்குக் கடுமையான வரி விதித்தது. இதனால் இந்தியப் பொருட்கள் நலிவுற்றன. இந்திய விவசாயிகள் நலிவுற்றனர். 1813-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி இந்தியா வாசல் (Indian Gate) திறந்துவிடப்பட்டமையால் இந்திய நெசவாளர்களால் போட்டியிட இயலவில்லை. மக்களின் சுவை மாற்றம், வெளிநாட்டுப் பொருள்களின் மீதுள்ள மோகம், இந்தியப் பொருள்களை விரும்பாமை ஆகிய காரணங்களால் இந்தியப் பொருள்கள் தேங்கின.

ஆலைகளில் உருவாக்கப்பட்ட பொருள்களின் விற்பனையைப் பெருக்க ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட முதலாளித்துவப் பொருளாதார நடவடிக்கைகளால் இந்திய நாட்டு விவசாயம், தச்சு, நெசவு, கொல்லுத் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவந்த இந்தியக் கிராமியப்

பொருளாதாரம் தகர்ந்துவிட்டது என்பர். இவ்வாறு இந்தியாவின் செல்வ வ:ளங்களை ஆங்கிலேயர் வெளியேற்றுவதைப் பொருளாதார வடிகால்முறை (economic drain) என்பர்.[43]

1850 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் காலத்தை இந்தியப் பொருளாதார வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலம் என்று கருதுவர். விவசாய மக்களின் முன்னேற்றத்திற்குரிய பல காரணிகள் காணப்பட்டன. கலிபோர்னியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தங்கச் சுரங்கங்கள், 1855-இல் நடைபெற்ற கிரீமன் போர் (Creman war), அமெரிக்க சிவில் போர் முதலியன இந்தியப் பொருள்களின் தேவையை அதிகரித்தன. எனவே, 1840-ல் ஏற்றுமதி 13½ பில்லியன் ஸ்டெர்லிங்காக இருந்தது. 1864-ல் 68 பில்லியன் ஸ்டெர்லிங் ஆனது என்று ஸ்ரீநிவாச இராகவையங்கார் கூறுகிறார்.

மொத்தத்தில் இந்தியாவில் காலனி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை இருவகையான தன்மைகளைக் கொண்டிருந்ததாகக் கருதுவர்.[44]

ஒருபுறம் புதிய பொருளாதாரப் பிரதேசங்கள், புதிய போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக ஊக்கம் அளிக்கப்பட்டது. இதனால் கிராமச் சமுதாயம் சிதறிக் குலைந்தது.

மறுபுறம் விவசாயிகளை நடப்பில் நிலப்பிரபுத்துவ வரி விதிப்பின் மூலம் சுரண்டும் வழக்கம் வலுத்தது.

இதுபோன்ற ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளால் அவர்கள் இங்கு ஒரு புதிய அதிகார வர்க்கத்தை உண்டுபண்ணி விட்டனர் என்று ஸ்ரீநிவாசன் கருதுகிறார்.[45]

வாணிபம்

ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் உலக வாணிபம் அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டுக் காணப்பட்டது. விரைந்த போக்குவரத்து வசதிகளாலும், தொடர்பு

வசதிகளாலும் சில வகையான வாணிபங்கள் ஆங்கிலேயர்களின் வசமாயின. இதனால் குதிரைமீதேறி மீக நீண்டதூரம் சென்று வாணிபம் செய்துவந்த லம்பாடியர்கள் போன்றோரின் வாணிபம் நலிவுற்றதாகக் கருதுவர்.

ஆங்கிலேயர்கள் வாணிபம் தொடர்பாகச் சில விதிமுறைகளை வகுத்தனர். இதன் காரணமாக வாணிப இலாபம் இந்தியக் குடிமக்களின் கைகளின் தங்காமல் கடல்கடந்து சென்று ஆங்கிலேயர்களின் பேழைகளை நிரப்பி வந்தன. இந்தியருடன் கிழக்கிந்தியக் கம்பெனியார் மட்டும்தான் வாணிபத்தில் ஈடுபடலாம் என்றும், பிற இந்தியர் வாணிபத்தில் ஈடுபடக்கூடாது என்றும் ஆங்கிலேயர்கள் தடை விதித்தனர். எனவே, இந்தியக் குடிமக்களின் தொழில்களும் குடிமக்களின் பொருளாதாரமும் ஆங்கிலேயர்களின் விருப்பங்களிலும் தேவைகளிலும் ஏற்படும் மாற்றங்களுக்கும் அரசின் ஆணைகளுக்கும் உட்பட்டுக் காணப்பட்டன என்பர்.[46] .ந.சுப்பிரமணியன் தமிழகத்தில் ஆங்கிலேய வணிகர்கள் வாணிபம் செய்தமையால் இரு விளைவுகள் நிகழ்ந்தன என்கிறார்.[47]

1. ஆங்கிலேய வணிகர்கள் தம் சொந்த இலாபத்தையும் தம் நாட்டு நலன்களையும் கருதி வாணிபம் செய்தமையால் தமிழகப் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளானது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மேனாட்டு எந்திரத்தொழில் உற்பத்திப் பொருட்கள் இந்தியாவிற்கு வரத்தொடங்கியதும் இந்நாட்டுப் பாரம்பரீயக் கைத்தொழில்கள் பாதிப்புகளுக் குள்ளாயின.

2. கைத்தறித் துணிகளுக்குப் பெருத்த ஐரோப்பியச் சந்தை இருந்தமையால் தமிழகக் கைத்தொழிலாளர்களுக்கு ஆங்கிலேய வணிகர்கள் முதல் கொடுத்து ஊக்கப்படுத்தினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகக் கலை, கைத்தொழில் பொருட்களுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டது. 1813 இல் மன்றோ தேர்வுக்குழு (Selection committee) இந்தியாவில் பெரும்பாலும் எல்லாப் பொருள்களுக்கும் விலை ஐரோப்பாவைவிடக் குறைவு என்றும் பொருட்களின் தரம் சிறப்பு உடையதாய் உள்ளது என்றும் அறிவித்தது.

பரிசீலனைக்குழு அறிக்கை (Report of the Board of Review) இரும்பு, தோல், சாயம், கண்ணாடி ஆகிய பொருள்கள் பொருளாதாரத்தின் அடிப்படையாய்த் திகழ்ந்தமையைக் குறிப்பிடுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் வெளிநாட்டுப் பொருட்கள் உள்நாட்டுச் சந்தையை அகற்றியது. 1836-ல் ரைட் என்பவர் தம் அறிக்கையில் உற்பத்தி நாடு உற்பத்தி இல்லாத நாடாக மாறியதுடன், கச்சாப் பொருட்களை விநியோகம் செய்யும் நாடாகவும் மாறிவிட்டதாகக் கூறுகிறார்.[48]

எரிபொருள் விலை உயர்வு, வரி உயர்வு முதலிய காரணங்களால் இந்திய உற்பத்தியாளர்கள் வெளிநாட்டுப் பொருட்களுடன் போட்டியிட இயலாதவர்களாயினர்.

சென்னை மாகாணத்தில் உலோகங்களின் இறக்குமதியானது 1850 -இல் 1709818 ரூபாயிலிருந்து 30299989 ரூபாயாக அதிகமானது. 1856 ஆம் ஆண்டில் நடைபெற்ற கிரீமின் போருக்குப் பிறகு இங்கிலாந்து மிக அதிக வருவாய் தரும் வெளி வாணிபத்தின் காரணமாகச் செல்வத்தைக் குவித்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியப் பொருள்களில் உபரி உற்பத்தி (over flow) காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்து வந்து இறங்கிய இயந்திர உற்பத்திப் பொருள்களால் கிராமத் தொழிலாளர்கள் நலிவுற்றனர். இரும்புக் கலப்பை, மின்மோட்டார் முதலியவற்றாலும் கிராமத் தொழிலாளர்கள் நசுக்கப்பட்டனர். இதனால், பிழைப்பிற்காக வேலைதேடி நகரங்களை நோக்கிச் சென்றனர். ஏற்றுமதி நாடான இந்தியா இறக்குமதி நாடாகியது. இயற்கைக் கொடுமையாகிய பஞ்சங்களாலும் மக்கள் வாடினர். இதனால் பல நெசவாளர்கள் தம் தொழிலைக் கைவிட்டுவிட்டனர்.

தொழிலாளர் நிலை

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குரிய முதுகெலும்புகள் உழைப்பும் உழைப்பைச் செய்யும் தொழிலாளர்களும் எனலாம். ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக்

காலத்தில் தொழிலாளர்களுடைய நிலை மேம்பட்டுக் காணப்படவில்லை எனலாம்.

விவசாயத் தொழிலை எடுத்துக்கொண்டால் விவசாய வகுப்பினர்கள் சிறு விவசாயிகள், நிலப்பிரபுக்கள், பண்ணை அடிமைகள் என்ற நிலைகளில் காணப்பட்டனர்.

தமிழக நிலவுரிமையாளர்கள் காணியாட்சிக்காரன், மிராசுதார், சமீந்தார், இனாம்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தமக்கு உரிமையான நிலங்களை வேலையாட்கள் வைத்துப் பயிரிட்டனர். சில வேளைகளில் நிலங்களைக் குத்தகைக்கும் விட்டனர். இவர்கள் மிகப்பெரிய நிலப்பரப்புகளை உடைமையாகக் கொண்டிருந்தனர்.

தமிழக உழைப்பாளர்களின் தாழ்நிலைக்குப் பஞ்சங்களும் காரணங்களாக அமைந்தன. தமிழகத்தில் *1876 - 78* ஆம் ஆண்டுகளில் மாபெரும் பஞ்சம் ஏற்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் உயிர்விட்டனர். இதனைத் தாது - ஈசுவர ஆண்டுக் கருப்பு என்பர். இப்பஞ்சத்தால் பெருமளவில் சமுதாய, பொருளாதார விளைவுகள் ஏற்பட்டன. பஞ்சத்தாலும், பஞ்சத்தின் காரணமாக ஏற்பட்ட வறுமை நிலையாலும் வாடிய மக்கள் பலர் தென் ஆப்பிரிக்க நாடுகளுக்கும் இலங்கைக்கும் பிஜி முதலிய கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் சென்று தொழில்களைச் செய்து பிழைத்தனர்.[49]

நிலமற்ற விவசாய உழைப்பாளர்கள் பொருளாதார நிலையில் நலிவுற்றுக் காணப்பட்டனர். சென்னை மாகாணத்தின் பொருளாதார நிலையைப் பற்றிய ஆய்வு மேற்கொண்ட பிரான்சிஸ் பச்சனன் *(*Francis Buchnan*)*என்பவர் ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகளின் வறுமை நிலையைக் குறிப்பிடுகிறார். மேலும் சிலர் விவசாயிகளின் நிலை பரிதாபத்திற் குரியதாக உள்ளது என்றும் ஒரு சோடிக் காளைகள் வாங்குவதற்குக்கூட வசதி இல்லாத நிலையில் உள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றார்.

தத்து (Dutt*)* என்பவர் ஆங்கில அரசால் கொண்டு வரப்பட்ட நில வருவாய் முறை *(*Land Revenue System*)*

விவசாய மக்களின் வறுமைக்கும் கடனுக்கும் காரணம் என்கிறார். 1853-இல் போர்டிலன் (Bourdillon) என்பார் உழவர்களின் நிலை மிகவும் வருந்ததக்க நிலையில் உள்ளது என்றும், இதை மேம்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைத் துள்ளார். 1819-இல் தாக்கர்சே (W.Thackersay) என்பார் ஆங்கிலேயர்களின் முயற்சியால் விவசாயம் பெருகியது என்றும், நாட்டின் நிலை 1801-இல் காணப்பட்டதைவிடப் பல மடங்கு மோசமாக உள்ளது என்றும் குறிப்பிடுவதாகக் கூறுவர்.[50]

அமெரிக்கப் போரின் காரணமாகப் பஞ்சு ஏற்றுமதியில் நிரந்தர வீழ்ச்சி ஏற்பட்டமையாலும், பஞ்சின் விலை வீழ்ச்சி அடைந்தமையாலும் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக் குள்ளாயினர்.

கோயம்புத்தூர், தென்ஆர்க்காடு போன்ற இடங்களிலுள்ள விவசாயிகள் பஞ்சம் காரணமாகத் தீமை செய்யும் கிழங்குகளையும் இலைகளையும் உண்ணும் பரிதாபநிலைக்கு உள்ளாயினமையைத் தல்யால் (Dalyal)என்பவர் குறிப்பிடுவதாகக் கூறுவர்.[51]

நிலமற்ற விவசாய உழைப்பாளிகளின் நிலை அடிமைகள் நிலைபோல் காணப்பட்டது. அவர்கள் பண்ணை அடிமைகளாக (Serfs) வாழ்ந்துள்ளனர். இவர்கள் நிலங்களுடன் சேர்ந்து இணைக்கப்பட்டிருந்தனர். நிலங்களை விற்கும்போது பண்ணை அடிமைகளும் நிலத்துடன் மாற்றப்பட்டனர். உடைமையாளர் களின் ஆணைக்கு உட்பட்டு வாழ்ந்தனர். அவர்களுக்கு உழைப்புக்குப் பதிலாக உணவும் இருப்பிடமும் வழங்கப்பட்டன. நில உடைமையாளர்கள் நிலங்களைப் பண்படுத்தக் கூட்டமான பண்ணையடிமைகளைப் பயன்படுத்தினர் என்று ஈலிஸ் (Ellis) கூறுகிறார். நிலங்களுடன் சேர்த்து ஒற்றி வைக்கப்பட்டனர். நில உரிமையாளர்களின் உடைமைப் பொருட்கள் போல் கருதப்பட்டனர். இவர்களுக்கு விலை நிர்ணயம் செய்துள்ளனர். பச்சனன் 1800-ல் சுற்றுப்பயணம் செய்தபோது பண்ணைஅடிமை, அவன் மனைவி ஆகியோருக்கு 200, 300 பணம் அல்லது 15 முதல் 23 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டமையைக் கண்டதாகக் கூறுகிறார். திருச்சியில் பள்ளர் என்ற பண்ணை அடிமையின் விலை 5 முதல்

10 பகோடாக்கள் (pagodas) என்றும் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் 10 முதல் 50 பகோடாக்கள் என்றும் நிர்ணயிக்கப் பட்டிருந்ததாகக் கூறுவர்.[52]

1819-இல் விவசாய அடிமைகளின் நிலை பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. பண்ணை அடிமைகள் திருநெல்வேலி, திருச்சி, கோவை, சேலம், தஞ்சை, தென்ஆர்க்காடு, செங்கல்பட்டு முதலான இடங்களில் காணப்பட்டனர் என்ற இக்குழு அறிக்கை அளித்தது. ஆங்கில அரசு அடிமை முறையைக் கண்டித்தது. ஆங்கில அரசு கொண்டு வந்த இரயத்துவாரி முறையால் அடிமைநிலை வீழ்ச்சியுறத் தொடங்கியது.

போக்குவரத்து வசதி, தொடர்பு வசதி ஆகியவற்றின் அதிகரிப்பாலும் மேற்கத்தியக் கல்வியாலும் தொழிலாளர் களிடையே பெயர்வாற்றல் (mobility) காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல தொழிற் சாலைகள் நிறுவப்பட்டமையால் நகரியமாதல் ஏற்பட்டது. பொதுப்பணித்துறை பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் அதிக ஊதியத்தையும் அளித்தது. இரயத்துவாரி முறையால் குடியானவர்கள், நிலவுடைமையாளர், அரசுக்கிடையே நேரடித்தொடர்பு ஏற்பட்டது. எல்லா நிலங்களுக்கும் பட்டாதாரர்களை அரசு நியமித்தது. எனவே அரசுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் இடையே பிறர் புகுந்து நிலவரியில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளும் மரபு ஒடுக்கப்பட்டது.

நெசவாளர்களுடைய நிலையை எடுத்துக்கொண்டால் 1815 முதல் 1844 வரை அவர்களுடைய நிகர வருமானத்தில் 75% குறைந்துவிட்டது. 1844-ல் 60% நெசவாளர்கள் வணிகர்களுக்குக் கடன்பட்டதாகக் கூறுவர்.[53] ஆங்கிலேயர்களுடைய துணியின் மீதான இந்தியாவின் இறக்குமதி வரி 2 முதல் 3.5 சதமானமாகவும் இந்தியர்களுடைய துணியின் மீதான இங்கிலாந்தின் வரி 20 முதல் 30 சதமானமாகவும் இருந்தன.

ஆங்கிலேயர்கள் 1881, 1891 ஆம் ஆண்டுகளில் தொழிற் சட்டங்களை இயற்றியதன் வாயிலாகத் தொழிலாளர் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சமுதாய மதிப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்கனவே சமுதாயத்தில் காணப்பட்ட பல சமுதாய மதிப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதே வேளையில் பல புதிய மதிப்புகளும் புகுத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் பொது வாழ்க்கையின் தன்மையே மாறிவிட்டதென்பர். நிருவாகம், அரசியல், தத்துவம், நீதி, சமூக அமைப்பு என அனைத்துத் துறைகளிலும் அடையாளம் காண முடியாத அளவுக்குப் புதுமைகள் புகுந்துவிட்டன. இதற்கேற்ப அரசும் அதன் செயல் பாடுகளும் அரசியல், நிருவாக அமைப்புகளும் மாறுதல் இயற்கையே என்பர்.[54]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இன்றியமையா, குறிப்பிடத்தக்க மதிப்புகளாக இந்தியச் சுதந்திரத்தைக் குறிப்பர். 1885-ஆம் ஆண்டில் இந்தியத் தேசியக் காங்கிரஸ் அமைக்கப்பட்டது. இதனால் தேசிய நோக்கு (Nationalism) மிகவும் சக்தி வாய்ந்த மதிப்பாகக் கருதப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தேசியப் பார்வை பரவலானது. பல்வேறு சாதிப் பிரிவுகள், இனங்கள், மொழிக் குழுக்கள், சமயப் பிரிவுகள் ஆகியவற்றுக்கிடையே தேசியப் பார்வையைக் (National outlook) கொண்டுவரத் தலைவர்கள் முயன்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேம்பட்டுக் காணப்பட்ட மற்றொரு சமுதாய மதிப்பாகச் சமயச் சார்பின்மையைக் கூறுவர் (secularism). ஒருவருடைய சமய உணர்வில் மற்றொருவரின் சமய உணர்வு தலையிடக்கூடாது என்பதே சமய வேறுபாடின்மை ஆகும். இது சமுதாய மாற்றத்திற்குத் தயாராக மக்களைத் தூண்டியது என்று பெக்கர் (Becker) கூறுவார்.

மற்றொரு குறிப்பிடத்தக்க சமுதாய மதிப்பாக அடிப்படைக் கல்வி என்பதைக் கூறுவர். அடிப்படைக் கல்வியைச் சமுதாயத்தில் விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் காணப்பட்ட மதிப்புகளாகச் சமத்துவம், பகுத்தறிவுப் பார்வை (Rational outlook), பொருளாதார முன்னேற்றம், தேசியச் சுதந்திரம், சமுதாய நீதி என்பனவற்றையும் சுட்டுவர். இத்தகைய மதிப்புகளால் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

தொடர்பு வசதிகள்

போக்குவரத்து வசதிகள் மூலம் கிராமங்களின் முழு வாழ்க்கை முறையும் மாற்றமடைகின்றது. பக்கத்திலுள்ள நகரங்களுக்கு வேலைக்காகச் செல்லுதல், சந்தைகளுக்குச் சென்று புதிய பொருள்களை வாங்குதல், அரசு ஊழியர் தம் பணியின் பொருட்டுக் கிராமத்திற்கு வருதல், மூலதனம் இட்டுத் தொழில் முனைவோர் கிராமங்களுக்கு வருதல், மருத்துவ வசதி ஏற்படுதல், புதினங்களும், பத்திரிகைகளும் கிராமங்களைத் தேடி வருதல், மரபு வழியான தொழில்களுக்குப் பதில் புதிய தொழில்களை நாடுதல் முதலான மாற்றங்கள் தொடர்பு வசதியின் அதிகரிப்பால் ஏற்படுகின்றன.

இரயில்வே போக்குவரத்து, தபால், தந்தி நிலையங்கள் முதலியன ஒரு நாட்டின் கலாச்சாரத்தையே மாற்றியமைக்கும் ஆற்றல் பெற்றனவாகத் திகழ்கின்றன. தொடர்பு வசதிகளின் அதிகரிப்பால் பெரும் பொருட்செலவும், காலச் செலவும் இல்லாமல் வேறு இடங்களிலுள்ள புலவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் நெருங்கிப் பழக வாய்ப்புகள் உள்ளமையால் கல்வி அறிவு பெருகும் நிலை ஏற்படுகிறது.

ஆங்கில அரசு 1856 ஆம் ஆண்டு, சூலை மாதம் சென்னை - வாலாஜாப்பேட்டை வழியிலும், 1871-ல் அரக்கோணம் - இராய்ச்சூர் வழியிலும் 1873-இல் சோலார்பேட்டை - மேட்டுப்பாளையம் வழியிலும் 1877-இல் சென்னை -அரக்கோணம் வழியிலும் இரட்டைப் பாதைகள் இட்டன.

தல்ஹவுசி காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இரயில்வேக் களும் தந்தி நிலையங்களும் சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த பழக்க வழக்கங்களில் மாறுதல்களை ஏற்படுத்தின. கிராமங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன.

அச்சகங்கள் நிறுவப்படுவதற்கு முன்னர் வாய்ப்பும் வசதியும் படைத்த ஒருசிலர் மட்டுமே பனைஓலைகளாலான ஏட்டுச் சுவடிகளில் நூல்களை எழுதியும் படித்தும் வந்தனர். பெரும்பாலான பொதுமக்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை. எனவே, அவர்களுக்கும் இலக்கியத்திற்கும் தொடர்பு இல்லாத நிலை காணப்பட்டது.[55] இது பற்றிக் கைலாசபதி, பழங்காலத்தில் கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்கள் இயற்றப்பட்ட பொழுது அவை ஏட்டில் காணப்பட்டன. தமிழ்கூறு நல்லுலகம் முழுவதிலுமே சிற்சில கணக்காயர் வீடுகளிலும் அரசவைகளிலும் ஆதினங்களிலும் இந்நூல்களின் ஏட்டுப் பிரதிகள் காணப்பட்டன. வெகு சிலரே இவற்றைக் கற்பவராய்க் காணப்பட்டனர். இந்நிலையில் தமிழ்ச் சமுதாயம் முழுவதற்கும் இத்தகைய நூல்கள் பொதுவாக இருந்தன என்று கூறமுடியாது என்கிறார்.[56]

இச்சமயத்தில் மேல்நாட்டுக் கிறித்தவப் பாதிரியார்கள் தம் சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி, மக்களின் ஆதரவைப் பெறும்பொருட்டு அச்சுக் கூடங்களை நிறுவ முற்பட்டனர். இதன் விளைவாகப் பல ஏட்டுச்சுவடிகள் நூல்களாக அச்சேறின. இதனால், மக்களுக்கும் இலக்கியத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

சமயம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துசமயம், கிறித்தவ சமயம், இசுலாமிய சமயம் என்ற சமயங்கள் காணப்பட்டன. இச்சமயங்கள் தத்தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகப் போட்டியிட்டன. நாயக்கர் காலப் பிற்பகுதியிலும் ஐரோப்பிய காலத்திலுமேயே தமிழ்நாட்டில் சமய மோதல்கள் ஏற்பட்டுவிட்டன என்று கருதுவர்.[57]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறித்தவம் தொய்வு நிலையில் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆபி டுபாயிஸ் (Abbe Dubois) என்பார் பயணம் மேற்கொண்டு, எட்டு ஆண்டுகளில் கிறித்தவம் 2/3 பங்கு தொண்டர்களை இழந்தது என்றும் மற்றவர்களும் பெயரளவிலேயே உள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றார். இதற்குப் பல சமுதாய, அரசியல் காரணங்கள் உள்ளன என்கிறார்.

இந்தியாவிலுள்ள ஐரோப்பியச் சமுதாயம் முற்காலச் சமயப் பரப்புக்குழுக்களை எதிர்த்தது. அவர்கள் இந்தியர்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்றனர் என்றது. மிண்டோ பிரவும் (Lord Minto) கிறித்தவக் கொள்கைப் பரப்புக் குழுவினரின் செயல்களை ஏற்கவில்லை.

ஆனால், 1819-இல் தமிழ்நாடு ஐரோப்பியக் குடியேற்றத்தின் இன்றியமையாத மையமாகத் திகழ்ந்தது என்பர். மக்கள் கிறித்தவ மதத்தில் மாறுவதற்கு வழிவகுக்கும் வகையில் சமயப் பரப்பு அமைப்பின் செயல்பாடுகள் அமைந்தன.

கம்பெனி அலுவலர்கள் கிறித்தவம் சமயப்படிப்பாளர் களுடன் ஒத்துழைத்தனர். 1843-ல் திருநெல்வேலி ஆட்சித் தலைவர் தாமஸ் சமயப் பரப்பாளர்களின் சமயக் கொள்கையைப் பரப்ப உதவினார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகத் திகழ்ந்த சர்.வில்லியம் பர்ட்டனும் (Sri William Burton) ஊக்கம் அளித்தார். சென்னை அரசின் தலைமைச் செயலர் தாமஸ் என்பவர் வேலை வாய்ப்பில் மதம்மாறிய இந்துக்களுக்கு வாய்ப்பளித்தார்.

சமயப் பரப்பாளர்களின் தியாகங்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. ஏழைகளுக்கு உதவுதல், கல்வி அளித்தல், பெண்கள் நிலை உயரப் பாடுபடல், விதவை இல்லங்கள் அமைத்தல், வேலை வாய்ப்பைப் பெருக்கப் பல தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைத்தல் முதலான பல சமுதாயப் பணிகளில் ஈடுபட்டன.

பெண்டிங் பிரபு, மெகாலே போன்றோர் இந்தியர்கள் கிறித்தவ சமயத்திற்கு மாறும் பொருட்டு உள்நாட்டுக் கல்வியில் கவனம் செலுத்தினர். கல்வி பெறவேண்டிப் பலர் சமயம் மாறினர். சமயப் பரப்பாளர்களும் தேவாலயங்களும் ஏழைகளுக்கு உதவும்பொருட்டு அடைக்கலாபுரம், ஆண்டேரிய புரம் போன்ற இடங்களில் விவசாயக் குடியேற்றப் பகுதிகளை அமைத்தனர். பல அனாதைக் குழந்தைகள் தேர்ந்தெடுக்கப் பட்டுக் கல்வி கற்பிக்கப்பட்டனர். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும்பொருட்டு மருத்துவமனைகள் நிறுவப்பட்டன.

பல கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்து இந்தியா வந்தனர். இவர்களுடைய மனித நேயச் செயல்பாடுகள் இந்தியப் பண்பாட்டைத் தொட்டன.

கிறித்தவ சமயத்தினரின் வாரஇதழ் அச்சு ஊடகத்தைத் தோற்றுவித்தது மட்டுமன்றி, இதழியலையும் ஐரோப்பிய அறிவியலைத் தமிழில் எழுதவும் கற்பிக்கவும் ஏற்ற முறையையும் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியது.[58]

கிறித்தவர்களின் சமத்துவ மற்றும் தோழமைச் சிந்தனைகள், தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படையைத் தகர்த்து விட்டன என்று கருதுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்தவ சமயம் தழைத்தது.

இவ்வாறு கிறித்தவ சமயப் பரவுதல், மேற்கத்தியக் கல்விமுறை போன்ற பல காரணங்களால் சைவசமயம் அதன் தூய்மையையும் மரபையும் காக்கக் கொள்கைப் பிடிப்புள்ள தாகவும் நெகிழாத் தன்மையுடையதாகவும் மாறியது.

ஆனால் இந்து சமயத்துள் சைவ, வைணவ வாதங்கள், எதிர்வாதங்கள், வேதாந்த, சித்தாந்தப் பூசல்கள் என்பன காணப் பட்டன. வைணவ சமயத்துள்ளும் வடகலை, தென்கலைப் பூசல்கள் இடம்பெற்றன.

கிறித்தவ சமயத்திற்கு மக்கள் சமயம் மாறுவதைத் கண்ட படித்த இந்துக்களிடையே ஓர் உணர்வு ஏற்பட்டது. இதனால் சமயப்புரட்சி நடத்தும் தலைவர்கள் பலர் தோன்றுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.[59]

கிறித்தவப் பாதிரிமார்கள் மேற்கொண்ட சமுதாயப் பணிகளைக் கண்டு, இதுவரையிலும் உறங்கிக் கிடந்த இந்துக்கள் விழித்தெழுந்தனர். இந்து சமயம் தொடர்பான நூல்களையும், புராண, இதிகாச நூல்களையும் எழுதி வெளியிடத் தொடங்கினர்.[60]

சென்னை இந்துச் சமூகச் சீர்திருத்தச்சங்கம் 9.11.1892-இல் தொடங்கப்பட்டது. இச்சங்கம் பெண்கல்வி, திருமணச்

சீர்திருத்தம், பழக்க வழக்கங்களில் சீர்திருத்தம், சாதி வேறுபாடகற்றல் என்பனவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு செயல்பட்டது.

இந்திய அறிவொளியாளர்கள் சமயத்தைத் தூய்மையாக்கி, அதை ஆரம்பநிலைக்கு எடுத்துச் சென்றனர் என்று கூறும் பூ.சோமசுந்தரம் அவர்கள் இந்து சமயக் கண்ணோட்டத்தில் விவேகத்தையும் ஒரு கடவுள் வழிபாட்டு அம்சங்களையும் கொண்டு வந்தனர் என்கிறார். அதேசமயம் குழந்தைத் திருமணம், விதவைகள் மறுமணத்தடை, பலதார மணம் போன்ற நிலப்பிரபுத்துவ இந்தியச் சமுதாயத்தின் உயர்ந்த இடத்திற்குப் பெண்களுக்குள்ள உரிமையை ஊர்சிதம் செய்தார்கள். கலப்பு மணத்திற்கு இருந்த தடைகளை அகற்ற வலியுறுத்தினர்.[61]

இவ்வாறு, சமய அடிப்படையில் ஏற்பட்ட போட்டிகளால் சமுதாயத்தில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன.

இயக்கங்கள்

சமுதாய மாற்றத்திற்கு இயக்கங்களும் பெரும்பங்காற்றி யுள்ளமையை அறிய முடிகிறது.

இந்தியாவின் தலைவர்கள் நாட்டு முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு மரபு வழியாக வந்த பல பழக்க வழக்கங்களை எதிர்த்தனர். ஐரோப்பிய முறைக்கல்வி பயின்றவர்கள் மனிதநேயம், பகுத்தறிவு ஆகியவற்றின் நோக்கில் நிலப்பிரபுத்துவ வழக்கங்களை விமர்சனம் செய்தனர். இந்து சமயத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக ஆங்கிலேயர்களுடன் ஒத்துழைத்தனர். ஆங்கிலேயர்கள் கற்றவர்கள் ஆகையால் உயர் கல்வியைப் பரப்புவதிலும் மூட நம்பிக்கைகளை ஒழிப்பதிலும் அவர்கள் தமக்குத் துணை நிற்பர் என நம்பினர்.

சமுதாயத்தில் தோன்றிய இயக்கங்கள் சமயத்தில் பழைமையான பொருளைத் திரும்ப நிறுவ (re instal) முனைந்தன. சமயம், ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைப் புத்துருக் கொடுக்க (remodel) எண்ணின. எனவே, இயக்கச்

சிந்தனையாளர்கள் சாத்திரங்களை விமர்சனப் பார்வையுடன் நோக்கினர். இந்து சமயத் தத்துவத்திற்குப் புதிய விளக்கங்களை அளித்தனர்.

இதனால், இயக்கங்கள் மக்களிடையே புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தின. கண்மூடித்தனமான நம்பிக்கைகளுக்குப் பதில் காரணங்களையும் தீர்வுகளையும் (reasons and judgements) கண்டறிந்தன. மூடநம்பிக்கைகளை ஒழிக்கப் பாடுபட்டன. இதனால் மக்களிடையே புதிய எண்ணங்கள் தோன்றின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் நாட்டுமக்களின் சுய உணர்வில் சமயக் கருத்துக்கள் ஊடுருவிக் காணப்பட்டன. சாதிப் பழக்க வழக்கங்கள் அன்றாட வாழ்வில் ஆதிக்கம் செலுத்தின. இச்சமயம் புதிய சமுதாய, அரசியல் கருத்துக்கள் சீர்திருத்தவாத மற்றும் குறுங்குழுவாதப் போதனைகளின் வடிவில் வந்தன என்று பூ சோமசுந்தரம் கூறுகிறார்.[61]

சீர்திருத்த இயக்கங்களின் சாதனைகளாகச் சமய இலக்கியங்களின், சாத்திரங்களின் கொடிய கைகளிலிருந்து (dead hands) சமுதாய வாழ்க்கையை விடுவித்தல், பெண் கல்வியைத் தேசியப் பொறுப்பாக்கல், எதிர்கால முன்னேற்றங்களுக்காக அமுக்கப்பட்ட மக்களை விழிப்படையச் செய்தல், சமுதாயத்தைவிட்டு விலக்கல் என்ற கொடிய பயங்கரவாதத்தைக் கொண்ட சாதிமுறையைச் சாடுதல் போன்றனவற்றை நடராசன் குறிப்பிடுகிறார்.[63]

மக்கள் கிறித்தவ சமயத்தைச் சார்வதைத் தடுக்கப் பல இயக்கங்கள் தேவைப்பட்டன. எனவே, பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணாமிசன், பிரம்மஞானசபை போன்ற இயக்கங்கள் தோன்றின. இவை இந்து சமயத்தைத் தூய்மைப் படுத்துவதன்மூலம் அதை மறுவலுவாக்கல் (re vitalize) பண்ண முடியும் என்று கருதின. மூடநம்பிக்கை, பொருளற்ற சடங்குகள், செலவுமிக்க விழாக்கள், நெகிழா மரபுகள், பழைய வழக்கங்கள் முதலியன இந்து சமயத்தைச் சிக்கலுக்குள்ளாக்குவதை உணர்ந்தனர். எனவே, இவற்றை அகற்றித் தூய்மைப்படுத்த

எண்ணினர். சமய இயக்கங்கள் ஓர் அளவுக் கோட்பாட்டு நோக்கை (Mono theistic outlook) இந்துக்களிடம் கொண்டுவரப் பாடுபட்டன.

இயக்கங்களின் சமுதாயப் பணிகளைப் பற்றிக்கூறும் வேலுப்பிள்ளை, இயக்கங்கள் மிசினரி என்ற முத்திரையுடன் சமுதாய மாற்றத்தை நோக்கி இயங்க ஆரம்பித்தன என்றும், இயக்கங்கள் சதி, கல்வியின்மை, குழந்தை மணம், சிசுக் கொலை (infanticide), விதவை நிலை, பெண்கள் இழிநிலை, பலதார மணம், தீண்டாமை, குறுகிய சாதிமுறை, சமுதாயத் தடைகள் முதலியனவற்றை எதிர்த்தமையால் சமய, சமுதாயத் தலைமுறை மாற்றம் (regeneration) ஏற்பட்டது என்றும் இயக்கங்கள் பரந்த சமுதாயப் பார்வையைப் பெருக்கியதுடன் விரைந்த சமுதாய மறுமலர்ச்சிக்குரிய முயற்சிகளையும் மேற்கொண்டன என்றும் குறிப்பிடுகிறார்.[64]

லூனியா (Lunia) என்பவர் இயக்கங்கள் காரணமாக இந்து சமயம் முன் எக்காலத்திலும் கண்டிராத அளவுக்கு வளமை, தீவிரம் உடையதாக மாறியது என்கிறார்.

இயக்கங்கள் காரணமாக ஏற்பட்ட புதிய விழிப்புணர்வு, பல நூற்றாண்டுகளாகச் சமயத்தில் காணப்பட்ட தூசிகளைச் சுத்தம் செய்தது. இதனால் சமயம் ஒளிமயமாகவும் வலுவானதாகவும் (bright and vigourous) மாறியது. இதன் காரணமாக மக்கள் சமயத்தின்மீது நம்பிக்கை வைத்தனர். இயக்கங்கள் மூலம் பெற்ற புத்துணர்ச்சியால் மக்கள் இலக்கியங்களைப் பயில ஆரம்பித்தனர். இது சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கியதன்மூலம் இலக்கிய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கல்வியாளர்கள் மூட நம்பிக்கைகளை மக்கள் மனத்திலிருந்து அகற்றாத வரையிலும் முன்னேற்றம் அடைய முடியாது என்று உறுதியாக நம்பினர். மூடநம்பிக்கை அனைத்துச் சமயத்தினரிடமும் காணப்பட்டது. எனவே, மக்களின் தினசரி வாழ்க்கையில் காணப்பட்ட மூடநம்பிக்கைகளை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில் பெண்கள் நிலையை மேம்படுத்தக் குழந்தை மணத்தடை, விதவை மறுமண ஆதரவு, பெண் கல்வியை ஊக்கப்படுத்தல், பொது வாழ்க்கையில் பெண்களின் பங்கை அதிகரித்தல் என்பனவும், அரிசனங்களின் நிலையை மேம்படுத்த அவர்கள் பிற சாதியினருடன் உணவு உண்ணலை ஊக்கப்படுததல் என்பதும் தீர்மானங்களாக நிறைவேற்றப் பட்டன. இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை தனிப்பட்ட பாதிரிமார்களின் முயற்சியாக இருந்துவந்த சீர்திருத்த நடவடிக்கைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சில இந்தியர்களின் தலைமையில் ஒரு மறுமலர்ச்சி இயக்கமாக உருப்பெறலாயிற்று என்பர்.[65]

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் விளைவாகத் தோன்றிய இயக்கங்களாகப் பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், இராமகிருஷ்ணா இயக்கம், பிரம்மஞான இயக்கம் (Theosophical Movement) முதலியனவற்றைக் குறிப்பிடலாம்.

பிரம்ம சமாஜம்

இந்துக்களிடையே காணப்பட்ட வாழ்க்கை வழிகளிலும், இந்து சமயத்தில் இடம்பெற்ற சமுதாய முறைகளிலும் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றக் கல்வியாளர்களால் நிறுவப்பட்ட ஓர் அமைப்பே பிரம்ம சமாஜம் என்று பி.பி.கஜேந்திர கட்கர் குறிப்பிடுகிறார். இவ்வியக்கம் இராஜாராம் மோகன்ராய் என்பவரால் தொடங்கப்பட்டது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் காணப்பட்ட வகுப்புப் பிரிவுகளாலும் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் நிலவின. வறியவர்கள் இன்பம் மிக்க, ஆதிக்கம் மிக்க வாழ்க்கை வாழ்ந்தனர். பொருளாதார நிலையில் நலிவுற்ற வறியவர்கள் துன்பம் நிறைந்த, பசி மிகுந்த, வறுமை மிக்க, இயலாமை மிகுந்த வாழ்க்கை வாழ்ந்தனர். செல்வர்களால் இகழப்படும் நிலைக்கு வறியவர்கள் உள்ளாகிக் காணப்பட்டனர்.

சமுதாயத் தரப்பிரிவுகளை உருவாக்கும் காரணிகளில் ஒன்றாகப் பால் வேறுபாடும் காணப்பட்டது. பால் அடிப்படையில் பெண்கள் உரிமைகளற்ற நிலையிலும், இழிவு

படுத்தப்படும் நிலையிலும், அடங்கி வாழும் நிலையிலும் காணப்பட்டனர். ஆடவர்கள் ஆதிக்கம் மிகுந்த நிலையில் வாழ்ந்தனர்.

சமய நிலையில் நோக்கும்போது மக்களிடையே சமயப் பூசல்கள் காணப்பட்டன. சமயக்காழ்ப்புணர்ச்சி நிலவியது.

இத்தகைய சூழல்களில் தமிழகத்தில் ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களினால் விழிப்புணர்வு ஏற்பட்டது. சாதி வேறுபாடுகளற்ற, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளற்ற, பால் வேறுபாடற்ற, சமயக் காழ்ப்புணர்வற்ற சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற உணர்வு இலக்கியப் படைப்பாளர்களிடையே ஏற்பட்டது. ஆங்கில அரசு கொண்டு வந்த விதவைகள் மறுமணச் சட்டம், குழந்தைமணத் தடைச் சட்டம், சொத்துரிமைச் சட்டம் என்பனவும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையும் இலக்கியப் படைப்புக் களின் பொருண்மையின் போக்கில் மாறுதல்களை நிகழ்த்தத் தொடங்கின.

மரபு வழியாக வந்த இலக்கியப் பொருண்மைகளுடன், சாதிய ஒழிப்புச் சிந்தனை, பொருளாதாரச் சமத்துவச் சிந்தனை, பெண்ணுரிமைச் சிந்தனை, சமயக் காழ்ப்பற்ற சிந்தனை என்பன பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் படைப்புக்களில் இடம் பெறலாயின. இதற்கு முந்தைய காலகட்ட இலக்கியங்களில் இத்தகைய சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியப் படைப்புக்களின் பொருண்மையில் இவை பெருமளவு இடம் பெறலாயின.

இவ்வாறு, சமுதாய மாற்றங்களால் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் படைப்புக்களின் பொருண்மையில் ஏற்பட்ட போக்கினை வித்துவான் சேஷையங்கார் இயற்றிய "ஆதியூர் அவதானி சரிதம்", இராமலிங்க அடிகளாரின் படைப்புக்கள், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் படைப்புக்கள் ஆகியவற்றின் துணையுடன் சிறிது விளக்கலாம்.

ஆதியூர் அவதானி சரிதம்

"ஆதியூர் அவதானி சரிதம்" என்ற நூலே முதல் தமிழ் நாவல் என்ற கருத்து உள்ளது. இந்நூலில் அமைந்துள்ள "முதல் தமிழ் நாவல்" என்ற பகுதியில் பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி), சோ.சிவபாதசுந்தரம் ஆகியோர் இந்நூல் முதல் தமிழ் நாவல் என்ற தகுதியைப் பெறுவதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர்.[1]

சாமுவேல் ரிச்சட்சன் என்ற ஆங்கில ஆசிரியர் உரைநடையில் 1740-இல் பமிலா என்ற பெயரில் படைத்துள்ள நாவலைத் தொடர்ந்து நாவல் என்ற இலக்கிய வகை உரைநடை யில் அமையவேண்டும் என்ற மரபு தோன்றி நிலைபெற்று வருகின்றது.

ஆனால், இந்திய ஆசிரியராகிய விக்ரம்சேட் 1986-இல் "The Golden Gate"என்ற பெயரில் Sonnett வடிவில் கவிதையாக ஆங்கில நாவல் ஒன்றைப் படைத்துள்ளார். இந்நூல் சமகால வாழ்வில் அமெரிக்காவில் காணப்பட்ட நிலையற்ற இளைய சமுதாயத்தை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டது. இந்நூல் நாவல் என்ற தகுதியைப் பெற்று இலக்கிய உலகின் வரவேற்பையும் பெற்றுள்ளது. ஆங்கில உலகின் பல பரிசுகளைப் பெற்றதுடன், இந்நூலின் பல இலட்சம் படிகள் விற்பனையாகியும் உள்ளன. இந்நூலை நாவல் என மதித்து இந்திய நாட்டின் சாகித்திய அகாதெமியும் பரிசளித்துள்ளது.

இவ்வடிப்படையில் பார்க்கும்போது ஆதியூர் அவதானி சரிதத்தை முதல் நாவல் எனக்கொள்ளலாம் என்கின்றனர். இந்நூல் 1875-இல் முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது.

"ஆதியூர் அவதானி சரிதம்" என்ற நூலைப் படைத்த சேஷையங்கார் "An Original Tamil Novel, Delineating Pictures of Modern Hindu Life"என ஆங்கிலத்திலும், இஃது இக்காலத்தில் ஹிந்துக்களுள் காணப்படும் குணா குணங்களையும் நடைகளையும் வர்ணித்து வித்வான் சேஷையங்கார் நவீனமாகவியற்றிய கட்டுரைக் கதை" என்று தமிழிலும் குறிப்பிட்டுள்ளமை இவண் சுட்டுதற்குரியதாகும்.

இந்நூல் அம்மானை வடிவில் இயற்றப்பட்டுள்ளது. சான்றுகளாக இந்நூலில் இடம்பெறும்,

"காலத்து இயற்கைதனைக் கண்டறியா மாந்தருக்குக்
கோல குறிவிளக்கும் கொள்கையுள்ள ஒண் சரிதம்
ஆதியூர் வாழும் அவதானி தன் கதையை
வழக்கத் தமிழாலே மாந்தர் படித்தறிய
பழக்கத்தால் அம்மானைப் பாட்டாகத்தாம் பகர
எழுதி முடிப்பதற்கு ஈசனே முன்னடவாய்"

"அம்மானை ஆடும் அழகு சகோதரிகாள்
இம்மாண் கதையை இதயம் களிகூரப்
பாடுவீர் பாடிப் பலன்கள் பெறுவீர்"

எனவரும் அடிகளைக் காட்டலாம்.

ஆதியூர் அவதானி சரிதம் - பொருண்மைப் போக்கு

இனி, ஆதியூர் அவதானி சரித்திரத்தில் இடம்பெறும் பொருண்மைப் போக்கைச் சுருக்கமாகக் காண்போம்.

விதவை மறுமணச் சிந்தனைகள்

நாவலின் முதன்மைப் பாத்திரமாகிய அவதானிக்கும் அவர் மனைவிக்கும் மனத்தளவில் இசைவில்லை. குடும்பத்தில் இருவருக்கும் எப்போதும் தகராறு நடைபெறும். இதனால் அவதானி தன் தாயிடம்,

"வீணான கல்யாணம் வேண்டாம் என உரைத்தேன்
கோணல் வழக்குரைத்துக் கூட்டி வைத்தாய் நீ அதனை"

என மனம் வெறுத்துக் கூறுகின்றார். தன் இல்லற வாழ்க்கை இனிது அமையவில்லை என்றும் தனக்கு ஏற்ற குணம் உடைய மனைவி அமையவில்லை என்றும் மனம் வெதும்பிய நிலையில் அவதானி,

"எக்குடியானாலும் எச்சாதியானாலும்
தக்க குணத்தோர் தருணியைக் கூடினக்கால்
மனதிற்கிசைந்தவொரு மாதெனக்கு வாய்த்தக்கால்
கைம்பெண்ணே ஆனாலும் கண்டு மணந்திடுவேன்"

என எண்ணுகின்றார். இவண் விதவை மறுமணம் பற்றிய சிந்தனை வெளிப்படக் காணலாம்.

இல்வாழ்க்கையில் ஏற்ற மனைவி அமையாமல் அல்லலுறும் அந்தணர்குல அவதானி ஒரு நாள் சென்னையில் சத்திரிய குலத்தைச் சார்ந்த தேவதத்தை என்ற பெண்ணைச் சந்திக்கிறார். இருவரும் மனம்விட்டுத் தத்தம் குடும்ப நிலைகளைப் பேசுகின்றனர். தேவதத்தையின் கணவன் தீய பழக்கங்களிலும் வேசியுறவிலும் ஈடுபட்டு நோயுற்று இறந்துவிட்டதாகக் கூறுகின்றாள். கணவனை இழந்த தேவதத்தையைத் தீய வழியில் அடையப் பலர் முயலுகின்றமையை அவதானியிடம்,

"இச்சகம் பாடி மெத்த என்னைப் பசப்பவரும்
பிச்சரை மெள்ளமெள்ளப்பேசிப் புறக்கணிப்பேன்
பதறி நடந்தவரைப் பாராமல் தூரலைக்கச்
சிதறு மனத்தார் தெருவில் குரைக்கலுற்றார்
பேரூ ருங்கட்டிவிட்டுப் பெண்பாவம் கொண்டார்கள்
சாரும் நரலகைவிட்டுத் தாம் மீளார் சத்தியம்தான்
தொப்லைப் பெருத்தவரும் துள்ளும் கடாக்களும்
எப்போதும் என்னை விழுங்க வழிபார்த்திருப்பார்
நம்பு மனிதர் என்னை நட்டாற்றில் கைவிடுத்தார்
கும்பலாய் வந்து பொருள்கொண்டு உடன்போய் ஒளித்தார்
பந்துக்கள் எல்லாரும் பார்த்து நகைக்கலுற்றார்
வந்ததுகொண்டு வசைசொல்லித்தாம் இருந்தார்
நல்லதிக்கில்லை ஐய நல்கூர்ந்த என்றவனுக்கும்
ஈதென் வரலாறு என்று ஏங்கியவள்தாள் முடித்தாள்"

எனக் கூறுகின்றாள். சமுதாயத்தில் கணவனை இழந்த பெண் உறும் அல்லல்களை இவண் ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

அவதானியும் தேவதத்தையும் குலவேறுபாடுகளை மறந்து அன்பினால் பிணைக்கப்பட்டு, மனம் ஒன்றி ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். ஒரு நாள் அவதானி தேவதத்தையிடம்,

"அமையும் புருஷன் ஆகாத பேயாகி
அற்றறிவு நீங்கி அலைகுவன் ஆமானால்

மற்றொருவன் தன்னை மணப்பது நீதியாகும்
மனுநீதி கோடா மனுவும் துணை இருக்கும்
இனி ஒன்றுரைப்பேன் நான் ஏந்திழையே நீ கேளு
அக்காலத்துள்ள அருமை அறிந்து மனு
தக்க விதியுரைத்தார் தரணியில் அந்நெறியுள்
பிற்காலம் தன்னில் பொருந்தாப் பகுதிகட்கு
மிக்க உரையாலும் வேறு விதியாலும்
திருத்திச் சனங்கள் உற்ற சீர்மைக்குத் தக்கபடி
பொருத்திச் சிடுக்கறுத்தார் பின்புதித்த மாரிஷிகள்
(நம்) பக்கமாய் நூலே பகராமற் போனாலும்
இக்காலத்துள்ளோர்க்கு இசைய விதி ஆக்க வேண்டும்
ஈங்கு இதுவுமல்லாமல் இன்னமொரு சன்னமுண்டு
பூங்கொடி நீ கேட்பை எனப் போற்றியுரைக்கலுற்றார்
ஈசன் படைத்த இருசாதி மக்களுக்குள்
நேசமும் நெஞ்சு நிலைக்கும் குணங்களும்தான்
இருவருக்கும் ஒன்றாயிருப்பது வையகத்தில்
அருமை அதனாலே அவ்வாறு அமைந்தவர்கள்
கூடுவரே ஆகில் வீடுவது இல் என்று அறிநீ
பாடுவதே ஆனாலும் பாவம் புரிந்தாலும்
ஒன்றியவர் இருப்பார் ஊறுவரில் தாம் முடிவார்
நின்ற நமக்கும் நிலை இது நீ அறிவாய்"

என்று கூறுவதாக ஆசிரியர் காட்டுகின்றார். இல்வாழ்க்கையில் ஏற்ற பண்புள்ள கணவன் அமையாவிடில் மனைவி அவளைத் துறந்துவிட்டுத் தான் விரும்பும் ஆடவனைக் கணவனாகக் கொள்வது நீதி என்று அறிவுறுத்துகின்றார். காலத்தின் சூழல்களுக்கேற்ப விதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் அன்பும் குணங்களும் பொருந்தியவர்கள் மட்டுமே இணைய முடியும் என்றும் கூறுகின்றார்.

அவதானி - தேவதத்தையின் காதலைக்கண்டு அவர் மனைவி, தாய், உறவினர்கள் கொதிப்புறுகின்றனர். எனவே, அவதானி தன் நண்பர்களிடம்,

"தேவதத்தை என்னோடு சேர்ந்து வந்தாள் என்றுரைப்பார்
பாவம் அதை மாற்ற ஒரு பக்குவம் செய்யவேண்டும்
நாடறியக் கல்யாணம் நான் அவளைச் செய்யவேண்டும்
தேடியே சூழிழைக்கும்தீயர் அடங்கவேண்டும்

புருஷன் பெண்சாதியென்று பூமியில் சொல்லவேண்டும்
வரிசை தப்பிச் சொல்பவரை வாய்மீது அடிக்கவேண்டும்
சாத்திரம் ஒப்பாது தப்பு விவாகம் என்று
பார்த்து எவர் சொன்னாலும் பாவமில்லை இக்கருமம்
விவகாரம் கண்டவர்கள் வேறாய் உரையார்கள்
இவளை மணந்தலைய வேதமிலை நீதியென்றார்
ஆபத்தோர் ஐந்தில் அருவை மறுமணந்தான்
பாவவிலக்காய் பரியும் தருமமுறை
பாதாரம் பார்த்தறியேன் பாவ்வழிபோயறியேன்
சரதம் இவள் உறவைத் தற்பரன் கூட்டிவைத்தான்
ஆன மனையாக யாவரும் கண்டறிய
நானிது செய்யவேண்டும் நண்பரே என்றுரைத்தார்"

எனக் கூறியதாகக் காட்டுகிறர்.

கணவனை இழந்து பல சமுதாயத் துன்பங்களை அனுபவிக்கும் பெண்ணாகிய தேவதத்தையைத் தான் திருமணம் செய்யவிருப்பதாகவும், அதனால் அவளுக்குத் தீமைகள் செய்யும் தீயர் கூட்டம் அடங்கவேண்டும் என்றும், இதனைத் தப்பு விவாகம் என்று சாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லையெனினும் திருமணம் செய்து கொள்வது என்றும் உறுதிபட அவதானி கூறுவதாகக் காட்டுகின்றார். கூறியதுடன் அமையாது அவதானி திருமணம் செய்து கொள்கின்றமையை,

"..................... ஈச்சுரப்பட்டர் எனும்
நன்றாய் மறை உணர்ந்த நல்லவர் கையாலே
வேதியர் கையால் விவாகச் சடங்கிழைத்தே
ஆதியூராரும் அரிவை கழுத்தினிலே
மங்கலமாகும் நல்லமாங்கிலியம்தான் முடித்தார்"

எனக் காட்டுகின்றார்.

அவதானியின் விதவை மறுமணச் செயலுக்கு முதலில் தடைவிதித்த அவர் தாய்,

"திருநெல்வேலி சேஷையங்கார் நேயமுள்ள புத்திரிக்குச்
சொல்லும் மறுமணம்தான் தோஷமில்லை என்று செய்தார்
கைம்பெண் விவாகம் இந்தக் காலத்தில் உண்டாச்சு
அம்புவி எங்கும் அதுவே தலையெடுக்கும்
காலத்து இயற்கைதனைக் கட்டமுடியாது

கோலமகனும் அந்தக் கொம்பனையைத் தான் மணந்தான்
சாதிவிட்ட சாதியென்று தள்ளலினி வாய்க்காது
நீதிக்கு அடுத்தென்று நின்று மகன் வாதிழைப்பான்
அவன் சொல் அனுமதிக்க ஆயிரம்பேர் முன் வருவார்
புவனத்து இதுவும் புதுமையாய்விட்டது இப்போ"

என எண்ணி ஏற்றுக்கொள்கின்றாள். சமுதாயம் விதவை மறுமணத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையைப் பெற்றுவிட்டமையைக் காட்டுகின்றார். மேலும் அக்காலத்தில் நிகழ்ந்த விதவை மறுமண நிகழ்ச்சி ஒன்றையும் சான்றாகச் சுட்டுகின்றார்.

ஆதியூர் அவதானி சரிதம் என்ற இந்நூல் வெளிவருவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் *(1873)* நாகர்கோவில் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராகத் தொழில் பார்த்தவர் திருநெல்வேலி சேஷையங்கார்.

இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த வடகலை வைணவ அந்தணர். திருவிதாங்கூர் நீதிமன்ற வழக்கறிஞர். அவருடைய ஒரே மகள் தன் பதின்மூன்றாவது வயதில் கணவனை இழந்து மிக்க துன்பம் அடைந்தாள். அச்சமயம் வங்காளத்தில் விதவை மறுமணம் நடைபெற, அதைப் பிரிட்டீஷ் அரசு சட்டபூர்வமாக அங்கீகரித்ததை அறிகின்றார். எனவே, சேஷையங்கார் தன் மகளுக்கும் விதவை மறுமணம் செய்விக்க எண்ணுகிறார். அவர் எண்ணத்திற்கு நண்பர்கள் ஆதரவு அளிக்கின்றனர். திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் திவான் ஆதரவுடன் திருமணமும் நடைபெறுகின்றது. இதனால் மனம் கொதிப்புற்ற சில அந்தணர்களும் மற்றவர்களும் அவர் வீட்டைத் தாக்குகின்றனர். மணப்பந்தலுக்குத் தீயிடுகின்றனர். சேஷையங்கார் வழக்கு தொடர, ஒருவருக்கு ரூபாய் *50* அபராதம் விதிக்கப்படுகிறது. அவருக்கு மேலும் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. சாதியிலிருந்து அவர் விலக்கி வைக்கப்படுகின்றார். சமூகத் தடைகள் பல விதிக்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சிகளைக் கண்டித்து ஆங்கில நாளேட்டின் பிரிட்டிஷ் ஆசிரியர் ஒருவர் தலையங்கம் எழுதுகின்றார். விசாரணை நடைபெறுகிறது. சேஷையங்காருக்கு உரிய பரிகாரம் அளிக்குமாறு சென்னைக் கவர்னர்

ஆணையிடுகின்றார். முற்கூறியவாறு சேஷையங்கார் 1873-ஆம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் நாள் Athenaeum and Daily News என்ற ஆங்கில நாளிதழில் வாக்குமூலம் அளித்த நிகழ்ச்சியும் சுட்டப் பெறுகின்றது. ஆதியூர் அவதானி சரிதம் என்ற நூலுள் இடம்பெறும் முதல் தமிழ்நாவல் என்ற பகுதியில் பெ.கோ.சுந்தரராஜன், கோ.சிவபாதசுந்தரம் ஆகியோர் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றனர்.

தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகள்

பல்வேறு சமுதாய, பொருளாதார, சமயக் காரணிகளால் தோற்றம் பெற்று, வளர்ச்சியுற்றுக் காணப்படும் நிறுவனம் சாதிமுறை ஆகும். சாதிமுறை பல்வேறு தன்மைகளைக் கொண்டு திகழ்கின்றது. அவற்றுள் ஒன்று தீண்டாமை ஆகும். குறிப்பிட்ட பிரிவினரை வேறுசில குறிப்பிட்ட பிரிவினர் சாதிமுறையின் அடிப்படையில் காண்டற்கும் தீண்டற்கும் தகுதியற்றவர்கள் எனக்கருதி ஒதுக்கிவைக்கும்போது சாதிமுறையின் தன்மைகளுள் ஒன்றாகிய தீண்டாமை எண்ணம் தலைதூக்குகின்றது.

தீண்டாமை என்ற சாதியத் தன்மை கொடுமையானது, மனித நேயமற்றது, சமுதாய நலனுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும், தனி மனித முன்னேற்றத்திற்கும் ஊறு விளைவிக்கக்கூடியது என்று கருதப்பெறும் நிலையில் இக்காலத்தில் பல சமுதாய நல அமைப்புகளும் சமுதாய நலச் சிந்தனையாளர்களும் அரசும் தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டுத் தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதைக் காணலாம். ஆனால் இற்றைக்கு 124 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய, ஆதியூர் அவதானி சரிதம் என்ற நூலில் தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகள் இடம்பெறுமாற்றை அறியமுடிகின்றது.

ஆதியூர் அவதானி சரிதம் என்ற படைப்பில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரம் வினையாளன் ஆகிய அவதானி. இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். இவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந்நூலின் ஆசிரியர் வித்துவான் சேஷையங்கார் அவதானி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து

மருத்துவம் பயிலுவதாகக் காட்டுகின்றார். இதைக் கண்ட அந்தணர்கள்,

"ஆங்காரத்தோடே அவதானி முன் திரண்டு
உன் சாதி என்ன உறுகுடியின் கீர்த்தி என்ன
புன்சாதி செய்யும் புழுக்கைத் தொழிலிழைத்துச்
சாதி கெடுக்கும் சதிகாரா எங்கிருந்தாய்
நீதி மதம் துறந்து நீங்கினால் தோஷமில்லை
பிணம் தின்னி அன்றோ பிணம் அறுத்துச் சோதிப்பான்
பிணம் தீண்டத் தீட்டுப்பிடியாதோ பார்ப்பானை
பார்ப்பானோ நீயும் படித்த பறையன் என்றார்"

என வசைபாடுவதாகக் காட்டுகின்றார். பிணம் அறுக்கும் தொழில் செய்பவர்கள் புன் சாதியினர் என்றும், அத்தொழில் புழுக்கைத் தொழில் என்றும் கருதப்பெற்ற சமுதாயச் சூழலில், உயர் சாதியினராகிய அந்தணர்கள் அத்தொழிலைச் செய்யும் போது தீட்டு ஏற்படும் என்று எண்ணிய தீண்டாமை எண்ணம் இவண் வெளிப்படுத்தப்படுகின்றது. தூய்மையின்மை என்பதன் அடிப்படையிலும் தீண்டாமை எண்ணம் தோன்றுவதாகச் சமூகவியலாளர்கள் சுட்டுதல் இவண் குறிப்பிடுவதற்குரியதாகும்.

அவதானியின் தாயும்,

"பிணமறுத்துப் பார்த்தல் பிசகிது ஞாயமன்று
குணமன்று பிள்ளாய் குரங்குப்பிடி வேண்டாம்"

என அறிவுரை கூறுகின்றாள். இவற்றைக் கேட்ட அவதானி,

"கள்ளைக் குடிப்பவரும் கைமோசம் செய்பவரும்
உள்ளத்துள் ஒன்றாய் உதட்டொன்றாய் உரைப்பவரும்
கொடுத்தவன் சாக என்று கோரும் பெரியவரும்
எடுத்தறு தக்கவென்றே எண்ணமிகும் புண்ணியரும்
பிறருடைய வாழ்வு பொறுக்காத பேதையரும்
பிறர் பொருளை வவ்வுதற்குப் பேராசை கொள்பவரும்
பொய்ச் சாக்ஷி சொல்லிப் பிழைக்கும் புரட்டர்களும்
இச்சகம்பாடி இருந்துண்ணும் பாவிகளும்
வக்கணை பேசி வழிச் சண்டை கிண்டிவிட்டுக்
கைக்கொள்ளை கொள்ளும் கடன்காரப் பேயர்களும்
திண்ணைகள் தூங்கித் திடங்கெட்ட மாக்களைக்கண்டு
உண்ணிகள் போல உறுக்கும் பதடர்களும்

கொடுத்த இடம் வாழ்வு, கொடாத இடம் கல்லெடுப்பு
வடிப்பமாய்ப் பேசிவரும் வல்லடி வம்பர்களும்
அடுத்துக் கெடுப்பவரும் ஆகாத செய்பவரும்
தொடுக்கும் வழிகளுக்குள் துட்டவழி நாடுவோரும்
பொய்யாணை இட்டுப் பொறுத்தார்க்குத் தீங்கு செய்தும்
ஐயோ என்று எண்ணா அநியாயப் பாதகரும்
கட்டுக் கட்டாகக் கணக்க விபூதியிட்டு
மட்டில்லா நாமம் வழித்துக் குழையவிட்டு
மாணிக்கப் பட்டையிட்ட வண்ணப் பெருந்தூண்போல்
சானுக்குமேல் அகலச் சாயக் கரை பொலிய
ஒப்பும் துகில் உடுத்து ஓரைந்து மட்டும் சொல்லி
வைப்பாட்டிக் கொண்டையிலே வாடும் மருவெடுத்தே
அம்மன் பிரசாதம் ஆத்தமா ஈடேறும்
இம்மைச் சுகம் தரும் இந்தாரும் என்று சொல்லி
ஏமாற்றி மூடர்களை எத்திப்பணம் பறிக்கும்
சீமான்கள் ஈங்கிவர்பின் தேடி நான் போகவோகாண்?

இப்படிப்பட்டவர்கள் எத்தனையோபேர் நம் குலத்தில்

செப்படுவித்தை காட்டிச் சீவனம் செய்பவர்கள்
அப்படிக்கு ஒன்றறியேன் ஆகாத காரியங்கள்
துப்பாம் என் வித்தையினால் சுகசீவியாயிருந்து
தத்துவங்கள் ஆராய்ந்தால் தரணியில் தீட்டுமுண்டோ!
வித்தகன் கைவேலை விரித்தறிந்தால் குற்றமுண்டோ
பிணத்தீட்டுப் போவதற்குப் பின்னவிலையில்லையோதான்
குணக்கு மனத்தவர்கள் கூறுவதுங் கோணலன்றோ?
ஈசன் கரத்தமைந்த எண்ணரிய இவ்வுடம்பை
சீசியெனத் தொலைத்தல் சிட்டர்கள் செய்கையாமோ?
ஆன்மா பிரிந்துவிட ஐம்பூத யாக்கையிது
தான் மாத்திரம் இராது தக்கதன் மாத்திரையாய்
பிரியும்சமயம் பிண நாற்றம்தான் எடுக்கும்
எரியிடாவிட்டாலே எங்கும் விஷமாகும்
என்பது கொண்டே இருந்த பெரியோர்கள்
என்பளவாக எரியிடுக என்று வைத்தார்
மற்ற உயிர்கள் மரித்தக்கால் ஆங்கவற்றை
செத்தவுடனே சேமிப்பார் தின்றொழிப்பார்
ஏனம்மா வீட்டில் எலிகள் பெருச்சாளி
ஈனப் புழுக்காப்பும் எத்தனையோ சாம் அவைக்கு
வீடே சுடுகாடு மேலாம் மனிதர் உடல்

காடே கழியவேண்டும் கைதொட்டால் தீட்டுமுண்டோ?
அற்பஉடல் போல் நம் அங்கம் அழியாது
சொற்பக் கடிகையிலே துர்நாற்றம் போகாது
காக்கைக் கழுகு பிடுங்கக்கண்டு சகியார்கள்
ஆக்கை அதனால் அரிய வரிசை உண்டு
பாக்கியமுள்ள பரமன் படைப்பதனில்
மிக்கோன் அறிவால் விளங்கிடும் இன் உயிர்தான்
உவந்து வசிக்கும் உடலுக்குத் தீட்டுமுண்டோ?

எனப் பதில் உரைக்கின்றார்.

அதாவது, கட்குடியர், கைமோசம் செய்பவர், போலிப் பேச்சுப் பேசுபவர், பொறாமையுடையவர், பேராசை யுடையவர்கள், பொய்ச்சாட்சி கூறுவோர், வீண்கலகம் மூட்டுவோர், சோம்பேறிகள், பிறரைச் சுரண்டுவோர்கள், வம்பு பேசுவோர்கள், அடுத்துக்கெடுப்பவர்கள், தீயவழிகளை நாடுவோர்கள், பொய்யாணை இடுவோர்கள், இறையடியார் போல் வேடமிட்டுப் பெண்ணாசை கொள்வோர்கள், பிறரை ஏமாற்றுவோர்கள் முதலியோர் நம் குலத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு செய்யாமல் மருத்துவக் கல்வி பயில்வதால் தீட்டு ஏற்படாது. மேலும், உடலைவிட்டு ஆன்மா பிரியும்போது பிணநாற்றம்தான் வீசும். இறந்த உயிரை எரிக்கின்றனர். பிற உயிர்கள் இறந்தால் மக்கள் அவற்றை உண்பர். எலிகள், பெருச்சாளிகள் முதலியனவற்றிற்கு வீடு இடுகாடு. ஆனால் மனிதர்கள் இறந்தால் வீட்டைவிட்டுக் காட்டிற்குக் கொண்டு செல்வர். எனவே இறைவன் படைத்த உடம்பில் தீட்டு கிடையாது என்று அவதானி அறிவுரை கூறுவதாகக் காட்டித் தீண்டாமை எண்ணத்திற்கு எதிரான சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார்.

ஏற்கனவே திருமணமான அவதானி மனைவியின் நடத்தையாலும் தீய பண்புகளாலும் மனம் புண்பட்டநிலையில், சத்திரியச் சாதியைச் சார்ந்த தேவதத்தை என்ற, நற்பண்புகளைக் கொண்ட விதவைப் பெண்ணை மணம் செய்ய விரும்புகின்றார். இதை அறிந்த அவர்தாய்,

“குணம் தரு வித்தையென்று கொண்டாடி முன்பொருகால்
பிணம் அறுத்துச் சாதிகெட்டுப்போக வழிதேடி நின்றான்

சூத்திர மாதவளைத் தொட்டு மனைவியென்று
சாத்திரம் சொல்லியவள்தன்னை மருவுகின்றான்"

என்றும்

"மாதின் மயக்கில் மயங்கிய என் மகன்தான்
சாதிக்கடுக்காத சங்கடம் செய்கின்றானே"

என்றும் வருந்துகின்றாள். ஆதிக்கச் சாதியைச் சார்ந்தவர்கள் தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோர்களைத் தொட்டு மணம் செய்வதன் மூலம் தீட்டு ஏற்படும் என்ற ஆதிக்கச் சாதியினரின் சாதிய நம்பிக்கை இவண் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கு அவதானி, இச்சமுதாயத்தில் பலர் நாட்டுக்குத் கேடிழைத்தல், தீயநெறியில் நடத்தல், பொய்ச் சாட்சிக்கூறல், பிறன் மனை நயத்தல், கைக்கூலி வாங்கல், களவாடல், கற்பழித்தல், பொய் வேடமிட்டுத்திரிதல், கடன் வாங்கிவிட்டு ஏமாற்றல் எனப் பல இழிசெயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் தேவதத்தை தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்தவள் என்பதால் அவளை மணப்பின் தீட்டு ஏற்படும் என்று அனைவரும் கூறுகின்றனர். ஆனால் முற்கூறிய சமுதாயத் தீங்கிழைக்கும் மக்கள்தான் தீண்டத்தகாதவர்கள் என்கின்றார்.

இவ்வாறு, சமுதாயத்தில் காணப்பெறும் தீண்டாமை பற்றிய எண்ணத்தை வெளிப்படுத்தி, இத்தீண்டாமை எண்ணம் ஒழிவதற்குரிய சிந்தனைகளையும் வித்தவான் சேஷையங்கார் புலப்படுத்தக் காணலாம்.

இராமலிங்க அடிகளாரின் படைப்புக்கள்

இராமலிங்க அடிகள் தாம் இயற்றிய நூல்களில் சாதி முறையின் கொடுமைகள், பொருளாதார நிலையில் தாழ்வுற்றவர் களின் இழிநிலைகள், சமயக் காழ்ப்புணர்வு இவை அகன்று சமத்துவச் சமுதாயம் மலர்வதற்குரிய சிந்தனைகளை வெளிப்படுத்துமாற்றை இனிக் காணலாம்.

சாதிமுறையைக் கண்டித்தல்

சாதிமுறை என்ற சமுதாய நிறுவனம் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிச்

சமுதாயத்தைத் துண்டாடும் நிலையைக் கண்ணுற்ற வள்ளலார் சாதிமுறையைக் கண்டிக்கின்றார். வள்ளலார் சாதிமுறையை இருட்சாதி,[2] மருட்சாதி[3] என அடைகொடுத்து இகழ்கின்றார். சாதியைச் சழக்கு என்றும்,[4] பேயாட்டம் என்றும்,[5] விகற்பம் என்றும்[6] கடிகின்றார். சாதிமுறை தோன்றுவதற்குரிய காரணிகளில் ஒன்றாகிய ஆச்சிரம முறையைப் பேயாட்டம் என்கிறார்.[7] சாதிமுறையை வளர்க்கும் சாத்திரங்களைக் குப்பைகள் என்றும்,[8] சந்தடி என்றும்,[9] உருவகிப்பதுடன், அவை பொய்வகைச் சாத்திரங்கள்[10] என்கின்றார். மக்களிடையே வேறுபாடுகளை வளர்க்கும் குலத்தைப் புலையுறுகுலம்,[11] பொய்க்குலம்[12] எனச் சாடுகின்றார். இவற்றால் சாதி வேறுபாடுகள் மக்களால் கடியத்தக்கன என்பதையும், இவற்றைக் கூறும் சாத்திரங்கள் சமுதாய நலத்திற்கு ஊறுவிளைவிப்பன என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகின்றமை புலனாகும்.

அறிவுரைகள் கூறல்

சமுதாயத்தில் சாதிவெறி பிடித்தலையும் பகுதியினர் மனம் திருந்திச் சமத்துவ உணர்வு பெற்றுவிட்டால் இச்சாதி வேறுபாடுகளை அகற்றிவிடலாம் எனறு துணிந்த வள்ளலார் தம் படைப்புக்களில் பல்வேறு அறிவுரைகளைக் கூறக் காணலாம். வள்ளலார் தம் படைப்புக்களில்,

1. சாதி அடிப்படையில் வேறுபாடுகள் பாராட்டாது அனைவரும் சமம் எனக் கண்டு மகிழ வேண்டும்.

2. சாதி அடிப்படையில் ஒத்தவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என வேற்றுமை பாராட்டாது, அனைவரும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் கூடிச் சமுதாய வாழ்க்கை வாழ வேண்டும்.

3. சாதி வேறுபாடுகளை மறந்து சன்மார்க்கப் பொது அடைதல் வேண்டும்.

4. நால்வருணப் பாகுபாடுகள், ஆசாரங்கள் என்பன மக்களுள் ஒரு பிரிவினர் தம் உயர்நிலையை (Superiority) நிலை நாட்டவும், மற்றவர்களை அடக்கி ஆளவும், பிறரை ஏமாற்றி இன்ப வாழ்க்கை வாழவும் அமைத்துக் கொண்டனவே ஆகும். எனவே, தோலின் நிறத்தின் அடிப்படையில் உயர் வருணத்தினர் தாழ்ந்த வருணத்தினர் எனப் பாகுபாடு பாராட்டக்கூடாது.

5. சாத்திரங்களைப் பின்பற்றினால் சமுதாய வாழ்க்கை தடுமாற்றமடையும்.

6. மக்களால் பாகுபாடு செய்யப்பெற்ற உயர்ந்தகுலம், தாழ்ந்தகுலம் என்பனவற்றுள் எதுவும் இறக்கும்போது உடன் வராது. எனவே, இவற்றைப் புழுக்குலங்கள் என உணர்ந்து, களைய வேண்டும்.

7. அன்பின் அடிப்படையில் அனைத்து மக்களும் சமம் என உணர்ந்து வாழவேண்டும்.

8. சாத்திரம், கோத்திரம், சாதிகள் முதலியவற்றால் சமுதாயத்தில் பூசல்களும், போராட்டங்களும் ஏற்படும். இவற்றால், போற்றற்கரிய மானிடப் பிறப்பு அழிய நேரிடும்.

9. பொய்மையான சாதிவேறுபாடுகளைப் பாராட்டக் கூடாது.

என்பன போன்ற அறிவுரைகளைக் கூறக் காணலாம். சான்றுகளாக,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்
ஒருமை உளர் ஆகி உலகியல் நடத்தல் வேண்டும்"[14]

"இச்சாதிசமய விகற்பங்களெல்லாம் தவிர்த்தே
எவ்வுலகும் சன்மார்க்கப்பொது அடைதல் வேண்டும்"[15]

"நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலை சரிதம் எலாம் பிள்ளைவிளையாட்டே."[16]

"சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற் காட்ட நேராவே"[17]

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே"[18]

எனவரும் அடிகளைக் காட்டலாம்.

இறைவன் சாதி வேறுபாடு கருதாதவன்

இறைவன் உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற வேறுபாடு பாராட்டாது, அன்பர்கள் அனைவரையும் சமமாக நோக்கும் பேராளன். எனவே,சாத்திரங்களையும், வேதங்களையும்,

ஆகமங்களையும் காட்டி மக்களிடையே சாதி வேறுபாடு பாராட்டக்கூடாது என இராமலிங்க அடிகள் அறிவுறுத்தக் காணலாம்.

இறைவனைப் பல்வேறு நிலைகளில் புகழும் இராமலிங்க அடிகள்,

"– இப்பாரில்
சாதி உருவாக்கும் தளை அவிழ்த்துத் தன்மயமாம்
சோதி உருவாக்கும் துணை"[19]

"சாதி மதம் சமய முதற் சங்கற்ப விகற்பமெலாம் தவிர்ந்துபோக
ஆதிநடம் புரிகின்றான்......"[20]

"சாதியும் மதமும் சமயமும் பொய்என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"[21]

என்று பாடுகின்றார். மக்களால் உருவாக்கப்பட்ட சாதி ஆகிய தளைகளிலிருந்து அன்பர்களை விடுவிப்பவன் என்றும், சாதி வேறுபாடுகள் ஒழிய நடனம் புரிபவன் என்றும், மக்களால் உருவாக்கப்பட்ட சாதி வேறுபாடுகள் பொய் என உணர்த்துபவன் என்றும், அன்பர்கள் உள்ளத்திலிருந்து சாதி வேறுபாடுகளைத் தூக்கி எறிபவன் என்றும் இராமலிங்க அடிகள் இறைவனைப் போற்றக் காணலாம்.

பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகள்

சமுதாயத்தில் தரப்பிரிவுகளை (stratifications) உருவாக்கும் காரணிகளில் பொருளாதார ஏற்றத்தாழ்வும் இன்றியமையாத பங்கு வகிக்கின்றது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் சமுதாய வகுப்புகள் (social classes) உருவாகத் துணை நிற்கின்றன. வகுப்புச் சமுதாயம் பொருளாதார வரிசைகளை (economic rankings) அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும், வருவாயின் அளவிற்கேற்பவும், செல்வத்தின் அளவிற்கேற்பவும் மக்கள் தரப்படுத்தப் பெறுகின்றனர் என்றும், இத்தரப்பிரிவுகளின் கீழ் வாழும் மக்கட் பிரிவினர் சமுதாய வகுப்புகள் எனச் சுட்டப் பெறுகின்றனர் என்றும் மேக்சுவெபர் கூறுவதாகக் காட்டுவர்.[22] மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் பொருளாதாரக்

காரணிகளும், சுற்றுப்புறச்சூழல்களும் பெரும் பங்காற்றுகின்றன என்றும்,[23] சமுதாய அமைப்பு பல்வேறு உறவுகளால் வரலாற்று முறையில் அமைகின்றது; அவ்வுறவுகளில் பொருளாதார உறவே சுட்டுதற்குரியது என்றும்[24] கூறப்பெறும் கருத்துக்கள் இவண் சுட்டுதற்குரியன ஆகும்.

இவ்வடிப்படையில், இராமலிங்க அடிகள் தாம் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் காணப்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலைகளையும், பொருளாதார மேம்பாடுற்ற செல்வர்களின் நிலைகளையும், பொருளாதார நலிவுற்ற வறியவர்களின் நிலைகளையும் கண்ணுற்று, மனம் புண்பட்டு, இவ்வேற்றத் தாழ்வு நிலை அகல வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு சிந்தனைகளைத் தம் படைப்புக்களில் வெளிப்படுத்தக் காணலாம்.

வறியவர் நிலைகள்

சமுதாயத்தில் பொருளாதார நலிவுற்ற பிரிவினர்களாகிய வறியவர்களின் பல்வேறு இயலாமை நிலைகளையும், இழிநிலைகளையும் படம்பிடித்துக் காட்டுவதன் மூலம் செல்வர்களின் மனம் பக்குவப்படும் என்ற நோக்கில் இராமலிங்க அடிகள் தம் படைப்புக்களில் வறியவர்களின் நிலையை எடுத்துக் கூறக் காணலாம்.

"கஞ்சிக்கும் வழி இல்லை இங்கு ஐயனே"[25]

"உண்ணும் உணவுக்கும் உடைக்கும் முயன்றோடுகின்ற
மண்ணுலகத்தென்றன் மயக்கறுத்தல் ஆகாதோ"[26]

"....... புற்கை யுண்ணுதற்கோர்
உப்பிலையே பொருளொன்றிலையே என்று உழல்பவர்மேல்"[27]

எனவரும் அடிகள் மூலம் வறியவர்கள் உண்ண உணவின்றி, உடுத்த உடையின்றித் துன்புறும் நிலையை விளக்குகின்றார்.

வறியவர்களைப் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கும் பசியை விஷக்காற்று என்றும்,[28] நெருப்பு என்றும்[29] கூறுவதுடன்,

"பசி எனும் ஓர் பாவிப்பயலே"[30]

என மணம் புண்பட்டுக் கடியவும் செய்கின்றார்.

ஏழைகள் படும் அல்லல்களைச் சுளிக்கும் மிடித்துயர்,[31] ஏரார் செல்வப் பெருக்கிகவா இடும்பை,[32] வன்மை செய்திடும் வறுமை,[33] நாணமும் உள்நோயும்செயா நின்றவன்மிடி,[34] மிடிபட்ட வாழ்க்கை[35] என்று சுட்டுகின்றார்.

வறியவர்கள் தம் வறுமை காரணமாகவும், அதனால் தம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிப்பதன் காரணமாகவும், வன்புலைய வயிறோம்புதற் காரணமாகவும் செல்வர்கள் மனைகளை நாடிச் சென்று இரத்தல், மனம் அயர்வுறுதல், நெஞ்சழிதல், முகம் வாட்டமுறல், கலங்குதல், குறையிரத்தல், தாழ்ந்து நிற்றல், ஏங்கிநிற்றல், பல நாட்கள் அலைதல், இலவுகாத்த கிளிபோல் செல்வர்கள் வாயிலில் காத்து நிற்றல், திகைத்து நிற்றல், நெடுநேரம் கால்கடுக்க நிற்றல், வீணே காலம் கழித்தல், கண் கலங்குதல் போன்ற இழிநிலைகளுக்கு உள்ளாகின்றமையை இராமலிங்க அடிகள் தம் படைப்புக்களின் வழி விளக்குகின்றார். சான்றுகளாக,

"புன்புலைய வஞ்சகர்பால் சென்று வீணே
புகழ்ந்து மனம் அயர்ந்துறுகண்வொருந்திப் பொய்யா
வன்புலைய வயிறோம்பி . . . . . ." [36]

"கல்லாய வன்மனத்தற் தம்பால் சென்றே
கண்கலங்கக்கொள்கின்றேன் கவலை வாழ்க்கை"[37]

"வனம்போய் வருவது போலே வன் செல்வர் மனையிடத்தே
தினம் போய் வருமிச்சிறியோன் . . . . ." [38]

என்பன போன்றுவரும் அடிகளைக் கூறலாம்.

"நேரா அழுக்குத் துணியாகில் உன்றனை நேரில் கண்டும்
பாராதவர் என நிற்பார்...."[39]

"மாவாக்கொடிய மனச்செல்வர் வாயிலிற்போய்
கோனாச் சிவ நிந்தை கேட்டதுண்டு"[40]

என வறியவர்கள் இகழப்படும் நிலைக்குள்ளாயினமையைக் காட்டுகின்றார்.

செல்வர்கள் நிலைகள்

சமுதாயத்தில் பொருளாதார வளம் மிக்க மேட்டுக்குடியினருள் சிலர் கருணையுள்ளமின்றிக் காணப்படல், இறப்பவர்க்கு ஈயாதிருத்தல், பசியினால் வருந்துவோரைப் பார்க்கவும் விருப்பமின்றி வாழ்தல் போன்ற நிலைகளில் காணப்படுகின்றமையை இராமலிங்க அடிகள் காட்டுகின்றார்.[41] இத்தகைய நிலை கண்டு மனம்புண்பட்டு,

"....... வள்ளலாரிலையே"[42]

என்று இரங்குகின்றார். சிலர், பிறர் கொடுப்பதைத் தடைசெய்யும் நிலையில் வாழ்கின்றமையைக் கண்டு,

"......... மன்னுகின்ற
மானஞ்செயாது மனநொந்திரப்போர்க்குத்
தானஞ் செய்வாரைத் தடுத்ததுண்டு"[43]

என்கிறார். மேலும்,

"பணமிலார்க்கு இடுக்கண் புரிந்துனும் சோற்றுப்பணம் பறித்
துழல்கின்ற படிறேன்"[44]

எனச் செல்வர்கள் வறியவர்களுக்குத் துன்பம் செய்கின்றமையையும்,

"எளியார் விளைத்த நிலமெலாங் கவரும்
எண்ணமே பெரிதுடையேன்"[45]

என வறியவர்களைச் சுரண்டுகின்றமையையும்,

"....... தேற்றாமல்
ஈபத்தா என்றிங் கிரப்போர்தமைக்கண்டு
கோபத்தால் நாய்போற் குரைத்ததுண்டு"[46]

என வறியவர்களைச் சினக்கின்றமையையும்,

"........ உடுத்தது பட்டெனிலோ
வாராதிருப்பதென் வாருமென்பார்....."[47]

எனச் செல்வர்கள் செல்வர்களுக்கே சிறப்புச் செய்கின்றமையையும்,

> **"கனமுடையேம் கட்டுடையேம் என்று நினைத்திங்கே**
> **களித்திறுமாந் திருக்கின்றீர் . . . . ."[38]**

என ஆவணம் கொள்கின்றமையையும் காட்டுகின்றார்.

அறிவுரைகள்

பொருளாதார நிலையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றாகக் காணப்படுவதும், மனிதநேயம் மிக்கதும் ஆகிய செயல் செல்வர்கள் வறியவர்களுக்குக் கொடை கொடுத்தல் ஆகும்.

மக்களின் பல்வேறு இழிசெயல்களுக்குக் காரணமாக அமைவது பசிக்கொடுமை. இதனை உணர்ந்த இராமலிங்க அடிகள் கொடைகளுள் உணவு அளித்தலாகிய செயலை முதன்மையாகக் கருதிப் பல அறிவுரைகள் கூறுகின்றார்.

பசிப்பிணியை அகற்ற வள்ளலார் கருதிய நெறி சீவகாருணிய ஒழுக்கம் ஆகும். சீவகாருணிய ஒழுக்கத்தால் கடவுள் அருளைப்பெறக் கூடுமே அன்றி வேறு எந்த வழியாலும் பெறமுடியாது என்று வள்ளலார் உறுதிபடக் கூறுகிறார்.[49] எனவே, இவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும், இவ்வாறு உண்டாகுமென்று அறிந்த போதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறியவேண்டும் என வேண்டுகின்றார்.[50] பசியினால் வரும் துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரசீவகாருண்யம் ஆகும்.[51] பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்வதில் வரும் இன்பம் பர இன்பம் ஆகும்.[52] நரக வேதனை. சனன வேதனை, மரண வேதனை என்ற மூன்று வேதனைகளும் கூடி முடிந்த வேதனையே பசி வேதனை.[53.] பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தில் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கிறதுதான் சீவகாருணியம்.

பசி என்கிற விசக்காற்று ஏழைகளின் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம் ஆகும்.[54] பசியினால் வறியவர்கள் தூக்கம் பிடியாமல் துக்கப்படுவர்.[55] இவ்வாறு தூக்கம் பிடியாமல் துக்கப்படுவோர்க்கு ஆகாரம் கொடுத்துத் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம் ஆகும்.[56] அடிவயிற்றில் கொடிய பசியை வைத்துக்கொண்டு தூங்கத் தொடங்கும் விபோகிகளுக்கு ஆகாரம் கொடுத்துப் பசி நெருப்பை ஆற்றுவதே சீவகாருணியம்.[57] பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தவராயினும், எந்தச் சாதிய ராயினும், எந்தச் செய்கையாராயினும் அவர்களுடைய தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் போதித்து விசாரியாமல் எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம் ஆகும்[58] என்று பல்வேறு நிலைகளில் வறியவர்களின் பசித்துன்பத்தை அகற்ற இராமலிங்க அடிகள் அறிவுரைகள் கூறுகின்றார்.

செல்வர்களிடம் வறியவர்களின் பசியை அகற்றக் கொடை கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் இராமலிங்க அடிகள், வறியவர்களிடம்,

> **“எம்மை வாட்டும் இப்பசியினுக்கெவர்பால்**
> **ஏகுவோம் என எண்ணலை நெஞ்சே”**

என இரவாமையையும் அறிவுறுத்துகின்றார்.

இவ்வாறு, வள்ளலார் தம் படைப்புக்களில் வகுப்புப் பிரிவினைகளை அகற்றுதற்குரிய வழிமுறைகளைக் கூறக் காணலாம்.

சமயக் காழ்ப்புணர்வை அகற்ற அறிவுரைகள் கூறுதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் இந்து சமயம், கிறித்தவ சமயம், இசுலாமிய சமயம் ஆகிய சமயங்கள் காணப்பட்டன. இச்சமயங்கள் மக்களிடையே செல்வாக்கைப் பெறுவதற்காகப் போட்டியிட்டன. இதனால் பூசல்கள்

நிகழ்ந்தன. இந்து சமயத்திலும் சைவ சமய, வைணவ சமயப் பூசல்கள் காணப்பட்டன. இச்சமயக் காழ்ப்புணர்வின் அடிப்படையிலும், சில இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சமயத்தின் பெயரால் மக்களிடையே காழ்ப்புணர்வு ஏற்பட்டுச் சமுதாயம் துண்டாடப்படுவதைக் கண்ட வள்ளலார் சமயக் காழ்ப்புணர்வு அகல்வதற்குரிய அறிவுரைகள் பலவற்றைத் தம் படைப்புக்களின் வழி வெளிப்படுத்தக் காணலாம்.

சமயக் காழ்ப்புணர்வின் விளைவுகள்

"பேருற்ற உலகிலுறு சமய மத நெறிஎலாம்
பேய்ப்பிடிப்புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென உணர்ந்திடாதுயிர்கள் பல
போருற்றிறந்து வீண் போயினார்"[59]

"கூறுகின்ற சமயம் எலாம் மதங்கள் எலாம் பிடித்துக்
கூறுகின்றார் பலன் ஒன்றும் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார்"[60]

"மதத்திலே சமய வழக்கிலே மாயை
மருட்டிலே இருட்டிலே மறவாக்
கீதத்திலே மனத்தை வைத்துவீண்பொழுது
கழிக்கின்றார்......"[61]

"குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்து வீண்பொழுது
நிலத்திலே போக்கி மயங்கி ஏமாந்து
நிற்கின்றார்....."[62]

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே"[63]

என்பன போன்று வரும் அடிகள் மூலம் வள்ளலார் மக்கள் சமயக் காழ்ப்புணர்வு கொண்டு பேய் பிடித்தலைகின்றமையையும், சமயக் காழ்புணர்வு காரணமாகச் சண்டையிட்டு வீணாக இறக்கின்றமையையும், வீணாகப் பொழுதைப் போக்கு

கின்றமையையும், வீண் வாதங்கள் செய்கின்றமையையும் வெளிப்படுத்தக் காணலாம்.

சமயக் காழ்ப்புணர்வைக் கடிதல்

சமயத்தின் உண்மை நோக்கங்களை உணராது, காழ்ப்புணர்வு கொண்டு, மக்கள் சமுதாயத்தில் பிளவுபட்டு நிற்கின்றனர். இத்தகைய நிலைக்கு உள்ளாக்கும் சமயத்தை வள்ளலார் சமயப் பிணக்கு.[64] சமயப் புன்மை,[65] துட்ட கண்கெட்ட ஆங்காரி[66] விகற்பம்[67] வெப்பகம்[68] சங்கடம்[69], சழக்கு,[70] தடை [71] பேய்,[72] வலை,[73] குழி,[74] பித்துறு சமயம்,[75] சமயப்புன்மை[76] எனச் சுட்டிக் காட்டி, மக்கள் மனத்தில் சமயக் காழ்ப்பும், சமய வெறியும் அகல வழிவகை செய்கின்றார்.

சமயவாதிகள்

"தவமயத்தார் பல சமயத் தலைவர் மதத்தலைவர்
தத்துவர் தத்துவத் தலைவர் அவர்தலைவர் தலைவர்
இவர் அவர் என்றயல்வேறு பிரித்தவர்பால் வார்த்தை
இயம்புவதென் என்றாய்...."[77]

"மறங்குலவும் அணுக்கள் பலர் செய்த விரதத்தால்
மதத்தலைமை பதத்தலைமை வாய்ந்தார்"[78]

என்பதால், சமயத்தின் அடிப்படையில் பல சமயத்தலைவர்கள் காணப்படுகின்றனர் என்றும், அவர்கள் செய்த விரதத்தால் சமயத் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர் என்றும் காட்டுகிறார்.

இத்தகைய சமயத்தலைவர்கள் கடவுள் ஒருவரே என்ற கருத்தை மக்களிடையே பரப்பாது, தத்தம் சமயக் கொள்கைகளே உயர்ந்தவை என வாதிட்டு, மக்களிடையே பிரிவு மனப்பான்மையை ஊட்டுகின்றனர். எனவே, அவர்களை வள்ளலார், "பதமறியா இந்த மதவாதிகள்" என்கிறார். சமயத் தலைவர்களின் வேடத்தை உணராத மக்கள் அவர்களை வாயாரப் புகழும் நிலையை,

"பொய்ச் சமய வாதியை மெச்சுகின்றாரும்"[79]

என்ற அடியில் சுட்டுகின்றார்.

இறைவன் சமயம் கடந்தவன்

சமயத்தின் பெயரால் மக்கள் பிளவுபட்டு நிற்பதைக் கண்ட வள்ளலார் இறைவன் சமயம் கடந்தவன் என்பதை,

"சமயமும் மதமும் கடந்ததோர் ஞான
சபை நடம்புரிகின்றதனியை"[80]

"சாதிமதம் சமயமுதற் சங்கற்ப விகற்பம்எலாம் தவிர்ந்துபோக
ஆதிநடம் புரிகின்றான் அருட்சோதி..."[81]

"சாதியும் மதமும் சமயமும் பொய் என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"[82]

என்று பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

சமய ஒற்றுமைக்கான அறிவுரைகள்

சமயக் காழ்ப்புணர்ச்சியின் கேடுகளையும், இறைவன் இயல்புகளையும் வெளிப்படுத்திய இராமலிங்க அடிகள் சமயக் காழ்ப்புணர்வும், சமய வேறுபாடுகளும் அகன்று மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்குரிய அறிவுரைகளையும் கூறுகின்றார்.

சமுதாயத்தில் மக்கள் சமயத்தின் பெயரால் துண்டுபட்டு நிற்கும் நிலையைக் கண்ட இராமலிங்க அடிகள்,

"பொறித்த மதம் சமயம் எல்லாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர்........"[83]

என வேண்டுகின்றார். சமயக் காழ்ப்புணர்வு அகன்றால்தான் இறைவனைக் காணமுடியும் என்பதை,

"சாதி சமயச் சழக்கை விட்டேன் அருட்
சோதியைக் கண்டேனடி – அக்கச்சி"[84]

என்கிறார்.

"எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குதல் அறிந்தனன் எல்லாம்
சம்மதம் ஆக்கிக் கொள்கின்றேன் – அல்லால்
தனித்து வேறெண்ணியதுண்டோ"[85]

"எம்பொருள் எம்பொருள் என்றே – சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொருள் என்பது பாரீர் . . . ."[86]

"தெய்வம் ஒன்றே எனும் திறமும்"[87]

என்ற அடிகள் மூலம் இறைவனுடைய வடிவங்கள்தான் வேறு வேறாக உள்ளனவே அன்றிப் பரம்பொருள் என்பது ஒன்றே என்றும், பல சமயங்களுள்ளும் காணப்படும் செம்பொருள் ஒன்றே என்றும் கூறி மக்கள் மனத்தில் காணப்படும் சஞ்சலங்களை அகற்றுகிறார்.

இவ்வாறு அறிவுரைகள் பல கூறும் இராமலிங்க அடிகள், மக்களிடம் சமயக் காழ்ப்புணர்வு அகன்று சமய ஒருமைப்பாடு மலரவேண்டும் என்ற நோக்கில்,

"ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்னுறுமோ"
என ஏங்குகின்றார். இந்த ஏக்கத்தின் வெளிப்பாடாக,

"இச்சாதிசமய விகற்பங்களெல்லாம் தவிர்த்தே
எவ்வுலகும் சன்மார்க்கப்பொதுவடைதல் வேண்டும்"[88]

"வாதெல்லாம் தவிர்த்துச் சுத்த சன்மார்க்கம்
வழங்குவித்து அருளுக விரைந்தே"[89]
என இறைவனிடம் வேண்டக் காணலாம். மேலும்,

"மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மைஇது
தூக்கமெலாம் நீங்கித் துணிந்துளத்தே – ஏக்கம்விட்டுச்
சன்மார்க்கச் சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம்நீர்
நன்மார்க்கம் சேர்வீர் இந்நாளே"[90]
என மக்களை நன்மார்க்கமாம் சன்மார்க்கச் சங்கத்தில் சேர வருமாறும் அழைக்கிறார்.

முற்கூறியவாறு, வள்ளலாரின் படைப்புக்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமுதாய மாற்றங்களின் விளைவாக எழுந்த சிந்தனைகளில் சாதீய எதிர்ப்புச் சிந்தனைகள், பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகள், சமயக் காழ்ப்புணர்வை

அகற்றுதற்குரிய சிந்தனைகள் என்பன இடம்பெறும் போக்கை உணரமுடிகிறது.

மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் படைப்புக்கள்

மாயூரம் வேதநாயகம்பிள்ளை திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, பெரியநாயகி பதிகம், தேவமாதா அந்தாதி, தேவதோத்திரமாலை, தயாபரக் கண்ணிகள் போன்ற சமயச் சார்புடைய, மரபுவழி வந்த இலக்கியங்களைப் படைத்துள்ளமை யுடன், பெண்மதிமாலை, பெண்கல்வி, பெண்மானம், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி, நீதிநூல், சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் முதலான சமுதாய நலம்பயக்கும் பொருண்மைகளை உள்ளடக்கிய இலக்கியங்களையும் படைத்துள்ளார். இனி, வேதநாயகம்பிள்ளையின் படைப்புக்களில் காணப்பெறும் பொருண்மைப் போக்கைச் சுருக்கமாகக் காணலாம்.

பெண்ணின முன்னேற்றச் சிந்தனைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் காணப்பட்ட அரசியல் சூழல், ஆங்கிலக் கல்வி முறையின் அறிமுகம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கை, அரசின் சீர்திருத்தச் சட்டங்கள், சீர்திருத்த இயக்கங்களின் சிந்தனைகள், சமுதாய நலச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் முதலான பல்வேறு காரணங்களால் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களில் ஒன்றாகப் பெண்களின் நிலைபற்றிய சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றங் களையும் கூறலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்களின் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் நீதியற்ற செயல்களும் அகற்றப் பெற்றன. பெண்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பும் வேலை வாய்ப்பும் ஏற்பட்டன. எனினும், பெண்கள் நிலை முழுமையான அளவில் மேம்பாடடையவில்லை. இதனை உணர்ந்த தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள் தம் படைப்புக்களின் வழிப் பெண்ணின மேம்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்தத் தொடங்கினர். இத்தகையோருள் மாயூரம் வேதநாயகம்பிள்ளையும் குறிப்பிடத்தக்க பங்காற்றி

யுள்ளமையை அறியலாம். அவர், தம் படைப்புக்களின் வழிப் பால் வேறுபாடற்ற சமத்துவச் சமுதாயம் அமைவதற்கு வழி வகைகள் கூறுமாற்றைக் காணலாம்.

பெண்களின் உயர்நிலை

பெண்கள் சமுதாயத்தில் வீட்டுவேலைகளைக் கவனித்தல்,[91] வீட்டுக் கணக்கெழுதுதல்,[92] வீட்டு வேலைகளை மேற்பார்வை செய்தல்,[93] சேமிக்கும் திறன் பெறல்,[94] தையல் கலையில் தேர்ச்சி பெறல்,[95] புகுந்த வீட்டுப் பெருமைகளைக் காத்தல்,[96] குடும்ப உறுப்பினர்களுக்காகத் துன்பமுறல்,[97] விருந்தினரை வரவேற்றல்,[98] கணவன் புகழுக்காகப் பாடுபடல்,[99] கணவனுக்கு ஆறுதல் அளித்தல்,[100] கணவரை நன்னெறியில் செலுத்தல்,[101] கணவன் குணங்களை மதித்தல்,[102] கணவனுக்குத் தொண்டுகள் செய்தல்,[103] கணவருடன் இணைந்த வாழ்க்கை வாழ்தல்,[104] கணவன் கற்பைப் பேணுதல்,[105] கணவனின் செல்வமாகத் திகழ்தல்,[106] ஆடவர்களின் வாழ்க்கையாதல்,[107] குடும்ப விளக்காக விளங்குதல்,[108] அறிவுடையவராகத் திகழ்தல்,[109] சிக்கனப் பண்புடையவராதல்,[110] இரக்கமுடைய வராக விளங்குதல்,[111] தியாக உள்ளமுடையவராகத் திகழ்தல்,[112] இனிமைப் பண்புடையவர்களாக விளங்குதல்,[113] அமைதியின் இருப்பிடம் ஆதல்,[114] உயர் பண்புகளுடையவராக விளங்குதல்,[115] தீமைகளை எதிர்க்கும் துணிவுடையவராதல்,[116] மானம் காக்கும் உணர்வு மிகுந்தவர்களாக விளங்குதல்,[117] ஆற்றல் மிக்கவர்களாகத் திகழ்தல்[118] போன்ற நிலைகளில் சமுதாயத்தினரால் நன்கு மதிக்கப் பெற்றிருந்தமையை வேதநாயகம்பிள்ளை தம் படைப்புக்களில் எடுத்துக் காட்டுகின்றார்.

பெண்களின் தாழ்நிலைகள்

சிற்சில நிலைகளில் சமுதாய உயர்நிலையையும், நன் மதிப்பையும் பெற்றுள்ள பெண்கள் சிற்சில நிலைகளில் தாழ்வடைந்துள்ளமையையும் வேதநாயகம் பிள்ளை தம் படைப்புக்களின் வழி வெளிப்படுத்துகின்றார். பெண்கள் இழிவாகக் கருதப்பெறல்,[119] கற்றவர்களாலும் இழிவுபடுத்தப் பெறுதல்,[120] அடிமைகள்போல் நடத்தப்பெறல்,[121] வசைபாடப் பெறல்,[122] கொடுமைப்படுத்தப்பெறல்,[123] அடிக்கப்பெறல்,[124]

திட்டப்பெறல்,[125] அன்பின்றி நடத்தப்பெறல்,[126] கடுமையான வேலைகளுக்குள்ளாக்கப்படல்,[127] குடும்ப உறுப்பினர்களின் கொடுமைகளுக்குள்ளாக்கப்படல்,[128] கட்டுப்பாடுகளுக் குள்ளாக்கப்பெறல்,[129] கட்டாய மணத்திற்குள்ளாக்கப்பெறல்,[130] குழந்தை மணத்திற்கு இலக்காதல்,[131] கணவனை இழந்து துன்புறல்[132] போன்ற இழிநிலைகளுக்குள்ளாகிக் காணப்படு கின்றமையைக் காட்டுகின்றார். சான்றாகக் குழந்தை மணத்திற்குப் பெண்கள் இலக்காகும் இழிநிலையை வேதநாயகம்பிள்ளை சுட்டுமாற்றைக் காணலாம்.

குழந்தைகள் மனத்தளவிலும் உடலளவிலும் பருவம் அடைந்து தகுதிபெற்ற பின்னரே மணம் செய்வித்தல் வேண்டும் என மருத்துவ வல்லுநர்கள் அறிவுறுத்துகின்றனர். வேதநாயகம் பிள்ளை வாழ்ந்த காலச் சமுதாயத்திலும் பல்வேறு சமுதாய, பொருளாதாரக் காரணங்க்ளால் குழந்தை மணம் காணப்பட்டது. இந்நிலை அகல வேதநாயகம்பிள்ளை குழந்தை மணத்தின் கொடுமைகளையும் தீமைகளையும் தம் படைப்புக்களில் சுட்டிக்காட்டுகிறார்.

"அநேகர் சீக்கிரத்திலே பெண்ணைக் கொடுத்துப் பணம் வாங்குவதற்காக அதி பால்யத்தில் பெண்களுக்குக் கலியாணம் செய்கிறார்கள்" எனக் குழந்தை மணத்தின் பொருளாதாரக் காரணத்தைச் சுட்டுகின்றார்.

"சிறு பிள்ளைகள் பொம்மைக் கலியாணம் செய்து விளையாடுவதுபோல், பெரிய பிள்ளைகளாகிய தாய் தந்தைகள் தங்களுடைய பிள்ளைகளுக்கு அதிபாலிய விவாகம் செய்து வேடிக்கை பார்த்து மகிழ்வதாகக் காணப்படுகிறது" என்றும், "ஜீவதேகத்தோடு கூடிய பிள்ளைகளுக்கு அதிபாலிய விவாகம் செய்வதினால் அநேக விபரீதங்களுக்கு இடமுண்டாகின்றது" என்றும், "ஆணுக்கும் பெண்ணுக்கும் ஈடுசோடு பார்த்து விவாகம் செய்யவேண்டியது எவ்வளவோ முக்கியமாயிருக்கிறது" என்றும், "ஆண் பெண்ணினுடைய குணங்களையும் தேகஸ்திதி முதலியவைகளையும் அறியாமல் அதிபாலியத்தில் விவாகம் செய்வது ஆழமறியாமல் ஆற்றில் இறங்குவது போலவும், கண்ணை மூடிக்கொண்டு காட்டில் நடப்பது போலவும் இருக்கிறது. ஆனது பற்றியே சில ஸ்திரீ, புருஷர்களுடைய

குணங்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் அவர்கள் கீரியும் பாம்பும்போல் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்வதைக் காண்கிறோம்" என்றும் "பால பருவமே அம்மை, மாந்தம், கணம் முதலிய வியாதிகளுக்கு உரிய காலமாகையால் அந்தக் காலம் கடக்கும் முன் அதிபாலியத்தில் விவாகம் செய்வது ஆபத்தை விலைக்கு வாங்குவதற்குச் சமானமாயிருக்கிறது" என்றும், "தாங்களே தாய் தகப்பன்மார்கள் சம்ரக்ஷணையிலிருக்க வேண்டிய சிறு பெண்கள் பிள்ளைகளைப் பெற்று நிர்வகிக்கும் படி செய்வது சிட்டுக்குருவியின் தலைமேலே பனங்காயைக் கட்டிவைப்பதற்குச் சமானமாயிருக்கிறது" என்றும், "கலியாணமென்பது ஸ்திரீ புருஷர்கள் இருவரும் சேர்ந்து செய்துகொள்கிற உடன்படிக்கையேயல்லாமல் வேறல்ல. அப்போது நடக்கிற சடங்குகளும், கிரியைகளும், மந்திரங்களும், ஸ்திரி புருஷர்கள் இனிமேல் நடக்கவேண்டிய சிரமங்களைப் பற்றி, அவர்கள் செய்துகொள்ளும் பரஸ்பர நிபந்தனைகளாயிருக் கின்றன. அந்த நிபந்தனைகளின் கருத்தையும் கலியாணத் தினுடைய விஷேஷத்தையும் மணமகனும் மணமகளும் கூடிய வரையில் அறிந்திருக்கவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. அதிபாலியத்தில் விவாகமாகிற பிள்ளைகளுக்குக் கலியாணத்தின் தன்மை இன்னதென்று எப்படித் தெரியும்? அப்படிப்பட்ட பகுத்தறிவில்லாத பிள்ளைகளைக் கலியாண நிபந்தனைகள் எப்படிக் கட்டுப்படுத்தும்" என்றும், "மாப்பிள்ளையும் சிறு குழந்தையானதால் இன்னாருக்குத் தாலி கட்டுகிறதென்று தெரியாமல், சில சமயங்களில் மாமியார் கழுத்திலே தாலி கட்டிவிடுகிறான்"என்றும் குறிப்பிடுகிறார்.

இவற்றால், குழந்தைமணம் பொம்மைக் கலியாணம் போன்று பொருளற்றது என்றும், இணைப் பொருத்தமற்றுப் போகிறது என்றும், ஆண்கள் பிற பெண்களை நாடும் சூழல் உண்டாகின்றது என்றும், கருத்து வேறுபாடுகள் ஏற்படக் காரணமாகின்றது என்றும், பல நோய்கள் உண்டாக வாய்ப்புள்ளது என்றும், பொறுப்புணர்வு ஏற்படுவதில்லை என்றும், திருமணத்தின் பொருள் புரிவதில்லை என்றும் குழந்தை மணத்தின் கேடுகளை எடுத்துக்கூறக் காணலாம்.

இவ்வாறு, சமுதாயத்தில் பெண்கள் அடைந்துவரும் இழிநிலைகளைக்கண்ட வேதநாயகம்பிள்ளை பெண்கள் நிலை

உயர்வடையவும், ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் வாழவும் பல அறிவுரைகளையும் கருத்துக்களையும் தம் படைப்புக்களின் வழி வெளிப்படுத்துகின்றார். அவை பற்றிச் சுருக்கமாக இனிக் காணலாம்.

பெண் கல்வி

சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலைகள் அகன்று மேன்மையடைய அவர்களுக்குக் கல்வி தேவை என உணர்ந்த வேதநாயகம்பிள்ளை தம் படைப்புக்களின் வழிப் பெண்கல்வியை வலியுறுத்தக் காணலாம்.

ஆற்றலில் வேறுபாடின்மை

பால் அடிப்படையில் ஆடவர் - பெண்டிர் என்ற வேறுபாடுகள் காணப்படுகின்றனவே அன்றி, பெண்கள் ஆற்றலில் குறைந்தவர்களல்லர். ஆதலின், அவர்களுக்கும் ஆடவர்களுக்கு நிகராகக் கல்வி கற்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்கிறார்.[133]

பெண்கல்வியின் தேவை

பெண்களின் ஆற்றலில் நம்பிக்கைகொண்ட வேத நாயகம்பிள்ளை பெண்கல்வியின் தேவையைப் பல இடங்களில் வலியுறுத்துகின்றார்.

பெண்களின் அணியாகத் திகழ்வது நல்லறிவே ஆகும். அந்த நல்லறிவைப் பெறப் பெண்களுக்குக் கல்வி தேவை என்பதை, “கல்லாத ஸ்திரீகள் விவேகிகளாக இருப்பது எவ்வளவு ஆச்சரியமென்றால், மூடவர்கள் ஆடவும், குருடர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்துச் சந்தோஷிக்கவும், ஊமைகள் பாடவும், செவிடர்கள் அந்தப் பாட்டைக் கேட்டு மகிழவும் கண்டால் எவ்வளவு அதிசயமோ அவ்வளவு அதிசயந்தான்” என்று காட்டுகிறார்.[134] பெண்கள் நிலை உயரக் கல்விதேவை என்பதை,

“படித்தால் மிருகம் போல் நாள் கழிப்போமோ”[135] என்று பெண்களே வேதனையுடன் கூறுவதாகப் பாடுகிறார்.

"நிரக்ஷரகுக்ஷியாகயிருக்கிற தலைவியானவள் வேலைக்காரர்கள் செய்கிற திருட்டுக்களையும் புரட்டுக்களையும் மோசங்களையும் கண்டுபிடித்துப் பொருட்சேதமில்லாமல் குடும்பத்தை எப்படிப் பராமரிக்கக்கூடும்? "மூடன் ஆஸ்தி முழுவதும் நாஸ்தி" என்பது போலப் பெண்களுக்குப் படிப்பில்லாமையால் திரவிய நஷ்டம் சம்பவிக்கவும் இடமுண்டாகிறது"[136] என்றும்,

> **"கலை உணர்ந்து அறியாதவோர் கன்னியை**
> **உலைவுறும் சமுசாரத்தின் உய்க்குதல்**
> **நிலையுணர்ந்து அறல் நீத்தறியான்தனை**
> **அலைகடற்கண் அமிழ்த்தலை ஒக்குமே"[137]**

என்றும் கூறும் வேதநாயகம்பிள்ளை பெண்கள் குடும்பத்தைத் திறம்பட நிருவகிக்கக் கல்வி தேவை என்கிறார்.

வேதநாயகம் பிள்ளை வாழ்ந்த காலச் சமுதாயத்தில் பெரும்பான்மையும் கூட்டுக்குடும்பங்களே காணப்பட்டன. இக்கூட்டுக் குடும்ப உறுப்பினர்களிடையே பூசல்கள் காணப்பட்டன. இந்நிலையில் பெண்கள் கல்வி கற்றவர்களாகக் காணப்படின் குடும்ப ஒற்றுமையைப் பேணமுடியும். இக்கருத்தை வேதநாயகம் பிள்ளை, "பெரிய குடும்பங்களில் அநேக பந்துக்களும் பிள்ளைகளும் வேலைக்காரர்களும் இருக்கிறபடியால் அடிக்கடி கலகங்களும் மனஸ்தாபங்களும் உண்டாகுமே. குடும்பத் தலைவி படியாத அவிவேக சிந்தாமணியாயிருந்தால் அவள் அந்தக் கலகச் சண்டைகளை நிவர்த்தி செய்யவும் மற்றவர்களுக்குப் புத்தி கற்பிக்கவும் எப்படிச் சாத்தியமாகும்?"[138] என்று வினவுவதன்மூலம் உணர்த்துகிறார்.

இதைப்போன்று பெண்கள் ஆடம்பரங்களை வெறுக்கவும்,[139] திறம்பட உணவு சமைக்கவும்,[140] ஆடவர் மேம்பாடடையவும்,[141] பெண்கள் நன்னெறியில் ஒழுகவும்,[141] .இறைவனை உணரவும்,[143] உடம்பைப் பேணவும்,[144] நாடு முன்னேறவும்,[145] குழந்தைகளின் கல்வி முன்னேறவும்[146] அவர்களுக்குக் கல்வி அளிப்பது இன்றியமையாத கடமை என வலியுறுத்துகிறார்.

ஆண்-பெண் சமத்துவச் சிந்தனைகள்

பெண்கல்வியை வலியுறுத்திய வேதநாயகம்பிள்ளை ஆடவர்-பெண்டிர் சமத்துவ நிலையையும் உணர்த்துகிறார்.

கணவனும் மனைவியுமாய் வாழும் ஆடவரும் பெண்டிரும் வாழ்க்கைத் துணைகளே தவிர அவர்களுக்கிடையே எவ்வித வேறுபாடுகளும் கிடையா என்பதை, "புருஷனும் பத்தினியும் ஒரே தேகமானதால் புருஷனுடைய சுகதுக்கங்களுக்குப் பெண்சாதியும், பெண்சாதியினுடைய சுக துக்கங்களுக்குப் புருஷனும் சம பாகஸ்தர்களே தவிர, அவர்களுக்குள் யாதொரு வித்தியாசமும் இருக்கக்கூடாது" என அறிவுறுத்துகிறார்.[147]

> **"இக்கிணை நகுமொழி எழில் மின்னாரின் ஆண்**
> **மக்கள் மிக்கோர் எனல் மடமையாம் இரண்டு**
> **அக்கமும் ஒக்குமே அன்றி நல்ல கண்**
> **எக்கண் மற்று எக்கணே இழிவுடைக்கணே"**

என்றும்,

> **"பாதியுடலைப் பறக்க விடலாமோ"**[148]

என்றும் கூறிக் கணவனும் மனைவியும் இணையானவர்களே என்பதை நிறுவுகின்றார்.

"ஜனங்களுடைய நன்மைக்காக இராஜா, மந்திரி முதலானவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால் அந்த விஷயம் தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் இராஜா, மந்திரி முதலான அதிகாரிகளும் மற்ற ஜனங்களும் ஸமானஸ்தர்கள் தாமே. அப்படியே குடும்ப நன்மைக்காகப் புருஷனுக்கு எஜமானப்பட்டங் கொடுக்கப்பட்டிருப்பதனால் அந்த விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களிலிலெல்லாம் புருஷனும் பெண்சாதியும் சமானஸ்தர்களாகயிருக்கிறார்கள் என்றும் ஆண் - பெண் சமத்துவத்தை வலியுறுத்தக் காணலாம்.

பெண்கல்வியை ஆதரித்தல்

பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையுடைய வேதநாயகம்பிள்ளை பெண்கல்வியை ஆதரித்தும் பல கருத்துக்களை வெளிப்படுத்தக் காணலாம்.

"ஸ்திரீகள் படித்தால் தங்களுக்கு அடங்கமாட்டார் களென்று புருஷர்கள் பயப்படுவது வியர்த்த பிராந்தியே தவிர உண்மையல்ல என்றும், "அவர்க்கு உரிய நன்னூல் உணர்த்தாமை கூடையால் எரியொளி விளக்கினை மறைத்தல் ஒக்குமே" என்றும், "இங்கிலீஷ்காரர்களுடைய தர்ம ராஜரீகத்தில் நம்முடைய பூர்வீக வழக்கங்ளெல்லாம் விட்டு, நாள்தோறும் சீர்திருத்தத்தையும் நாகரிகத்தையும் அடைகிற நாம் ஸ்திரீகளுடைய பாவத்தைக் கட்டிக்கொள்வதற்காக மட்டும் அவர்கள் விஷயத்தில் பூர்வீக வழக்கத்தை அனுசரித்து அவர்களை அஞ்ஞானக் கடலில் அமிழ்த்துவது நீதியா?" என்றும் கூறும் வேதநாயகம்பிள்ளை பெண்கல்வியை ஆதரிப்பதை உணரமுடிகிறது. பெண்கல்வியைத் தம் படைப்புக்களின் வழி ஆதரித்த வேதநாயகம் பிள்ளை தாம் மயிலாடுதுறையில் நகர்மன்றத்தலைவராகப் பணியாற்றியபோது அந்நகரில் பெண்களுக்காகத் தனிப் பள்ளி ஒன்றைத் தொடங்கிச் செயல்படுத்தியுமுள்ளார்.[149] இதனால் தமிழகத்திலேயே பெண்கள் பள்ளியை முதன்முதலில் நிறுவிய பெருமைக் குரியவராகவும் திகழ்கின்றார்.[150]

இவ்வாறு, வேதநாயகம்பிள்ளை ஆடவர் - பெண்டிர் சமத்துவ நிலைக்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பல கருத்துக்களைத் தம் படைப்புக்ளில் வெளிப்படுத்தி யுள்ளமையை அறியலாம்.

தாய்மொழி பற்றிய சிந்தனைகள்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலமொழி ஆதிக்கம் செலுத்தியது. இந்நிலையில் தாய்மொழியாகிய தமிழ்மொழியும் ஏற்றம் பெறவேண்டும் என்ற நோக்கில் வேதநாயகம்பிள்ளை தம் சிந்தனைகளைத் தம் படைப்புக்களில் எடுத்துக் காட்டுமாற்றை அறியமுடிகிறது.

தாய்மொழி வளர்ச்சியின் தேவை

தாய்மொழிக் கல்வியையும் தமிழ்மொழியின் மேம்பாட்டையும் வெளிப்படுத்த முனைந்த வேதநாயகம் பிள்ளை தாய்மொழியாகிய தமிழின் சிறப்புக்களை விளக்குகின்றார். "அப்படியே நம்முடைய சுய பாஷைகளில்

வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்[151] என்ற ஞானாம்பாள் கூற்று மூலம் தாய்மொழியில் பல வசன காவியங்கள் படைக்கப்படவேண்டும் என்ற தம் கருத்தை வெளிப்படுத்தக் காணலாம். ஒரு சமுதாயத்தின் பல்துறைசார் செயல்பாடுகளும் தாய்மொழி வழியாக நடைபெற்றால்தான் மக்களால் புரிந்துணர்வுடனும் விழிப்புடனும் செயலாற்ற முடியும் என்ற தம் சிந்தனையை உணர்த்துகிறார். "சனங்களுக்குத் தெரிந்த பாஷையிலே வக்கீலினுடைய வாதமும் மற்ற நடபடிகளும் நடந்தால் மட்டுமே உண்மை வெளியாகுமே தவிர, அவர்களுக்குத் தெரியாத பாஷையில் நடந்தால் எப்படி உண்மை வெளியாகும்?"[152] என்றும், "தேச பாஷையும் தமிழ்! நியாதிபதியும் தமிழர்! வாதிக்கின்ற வக்கீலும் தமிழர்! மற்ற வக்கீல்கள், கட்சிக்காரர்கள் முதலானவர்களும் தமிழர்களே! இப்படியாக எல்லாந்தமிழ் மயமாயிருக்க அந்த வக்கீல்கள் யாருக்குப் பிரீதியார்த்தமாக இங்கிலீஷில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை"[153] என்றும் நீதிமன்ற மொழியாகத் தமிழ் திகழவேண்டியமையின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார்.

தாய்மொழியை இழிவெனக் கருதுதல்

மக்களில் சிலர் தாய்மொழியாகிய தமிழை இழிவாகக் கருதும் மனப்பாங்குடன் திகழ்கின்றமையை, "அநேகர் தங்கள் சுய பாஷைகளில் தங்களுடைய கையெழுத்துக்களைக்கூடப் பிழையில்லாமல் எழுத அசத்தர்களாயிருக்கிறார்கள். சிலர் தமிழ் பாஷை தெரியாமலிருப்பது தங்களுக்குக் கௌரவமாகவும், அந்த பாஷையை அறிந்திருப்பது தங்களுக்கு அகௌரவமாகவும் எண்ணுகிறார்கள்"[154] என்று குறிப்பிடுகின்றார்.

தாய்மொழியைப் புறக்கணிக்கும் செயல்

மக்களில் சிலர் தாய்மொழியைக் கற்பது இழிவு என எண்ணி அதைப் புறக்கணிக்கும் நிலையைக் கண்டு வேதநாயகம்பிள்ளை, "தமிழ் நியாதிபதி முன்பாக இங்கிலீஷில் வாதிக்கிற தமிழ் வக்கீல்கள் இந்தத் தமிழ் நாட்டையும் தமிழ் பாஷையையும் மற்ற வக்கீல்களையும் கட்சிக்காரர்களையும் சகல சனங்களையும் மெய்யாகவே அவமானப்படுத்து கிறார்கள்"[155] என மனம் புண்பட்டுக் கூறுகிறார்.

பிறமொழிகளைக் கற்போர் நிலை

"பிள்ளை வரத்துக்குப் போய்ப் புருஷனைச் சாகக் கொடுத்தது போலவும், தாது புஷ்டிக்கு மருந்து சாப்பிட உள்ள புஷ்டியும் போய்விட்டது போலவும் சிலர் இங்கிலீஷ் முதலிய அந்நிய பாஷைகளைப் படிக்க ஆரம்பித்து அந்தப் பாஷையுந் தெரியாமல் சுயபாஷையுந் தெரியாமல் அபாஷிகளாகப் போய்விடுகிறார்கள்"[156] என்று வேதநாயகம்பிள்ளை தாய்மொழிக் கல்வியைப் புறக்கணிப்போரின் உண்மை நிலையை எடுத்துக்காட்டுகிறார்.

தாய்மொழியைக் கற்காதோருக்குரிய தண்டனை

தாய்மொழியைப் புறக்கணித்து, இழிவுபடுத்தி, பிறமொழி மோகம் கொண்டு திரியும் தமிழ் மக்களைத் தமிழ் நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று வேதநாயகம்பிள்ளை தாய்மொழி உணர்வு நிறைந்த புரட்சிக்குரல் எழுப்புவதை, "தமிழ் படிக்காதவர் தமிழ்நாட்டில் வசிக்க யோக்கியர்கள் அல்லர். அவர்கள் எந்தப் பாஷைகளைப் படிக்கிறார்களோ, அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால் சுய பாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலீஷ் தேசத்துக்கு அனுப்பி வைப்போம்"[157] என்ற அவர் கூற்றுமூலம் அறியலாம்.

இவ்வாறு தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தும் வேதநாயகம்பிள்ளை தமிழ்மொழியை நன்கு கற்றல்,[158] பிறமொழி இலக்கிய வகைகளைத் தமிழில் படைத்தல்,[159] மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ளல்[160] முதலிய செயல்கள் மூலம் தமிழ்மொழியை மேம்படுத்த முடியும் என்று காட்டுகிறார்.

இவ்வாறு, ஆங்கில ஆதிக்கம் செலுத்திய சமுதாயத்தில் வாழ்ந்த வேதநாயகம்பிள்ளை தமிழ்மொழி ஏற்றம் பெறுதற்குப் பாடுபட்டமையை அறியலாம்.

குடும்பம் தொடர்பான சிந்தனைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பல்வேறு காரணிகளால் கூட்டுக்குடும்பங்கள் சிதைவடைய ஆரம்பித்தன.

குடும்ப உறவுகளில் விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. முதியோர்கள் குடும்பத்தின் தூண்கள் என்பதற்குப் பதில் சுமைகளாகக் கருதப்பட்டனர். இத்தகைய சூழலில் வாழ்ந்த வேதநாயகம்பிள்ளை குடும்பம் தொடர்பான சிந்தனைகளையும் தம் படைப்புக்களில் வெளிப்படுத்துகிறார்.

கணவன் - மனைவி நல்லுறவு

குடும்ப வாழ்க்கையில் கணவன் - மனைவி உறவு மிக இன்றியமையாததாகும். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களின் காரணமாகச் சில நிலைகளில் கணவன் - மனைவி உறவு சிதைந்து வருவதைக் கண்ட வேதநாயகம்பிள்ளை கணவன் - மனைவி நல்லுறவை வலியுறுத்தித் தம் கருத்துக்களை வெளிப்படுத்தக் காணலாம். குடும்பமாகிய வண்டியில் இல்வாழ்க்கையாகிய சரக்கை ஏற்றிக் கணவனும் மனைவியுமாகிய குதிரைகளைப் பூட்டிச் செல்லும்போது இரு குதிரைகளும் மனம் ஒத்து இறைவனை அடையும் குறிக்கோளுடன் செயல்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் வண்டியும் சரக்கும் அழிந்துவிடும். வண்டியைச் செலுத்தும் வலவன் போன்ற முழுமுதலும் சினமுறுவான் என்று கணவன் - மனைவி இருவரிடையே கருத்தொற்றுமை தேவை என்கிறார்.[161] இக்கருத்தை வலியுறுத்தும் வகையில், "ஸ்திரீயும் புருஷனும் ஒரு தேகமானதால் அவர்கள் ஒருவரொருவரை அதிகப் பிரியமாக நேசிக்க வேண்டுமென்று வேதம் ஆக்ஞாபிக்கின்றது" என்றும்,[162]

> "தேகமும் சீவனும் போலே – கொண்ட
> மாகணவனுடன் வாழ்வது மேலே[163]

என்றும் கூறுவதைக் காணலாம். திருமணத்திற்குப்பின் கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் நிகழ்வதைக் கண்ட வேதநாயகம் பிள்ளை, தவத்தால் அமைந்த இருவரிலும் குணமுள்ளவர்கள் இவர், குணமில்லாதவர் இவர் என்று ஒருவரையொருவர் ஆராய்வது புதுமணம் செய்து கொள்வதற்கு முன்னரே ஆகும். திருமணத்திற்குப் பின்னர் ஆராய்வது கப்பலை நடுக்கடலில் ஆராய்ந்து நன்றன்று எனக் கண்டாலும் விடமுடியாமையையும், உடம்பில் நோயும் உறுப்புக்குறைதலும்

ஏற்பட்டாலும் அவ்வுடம்பை விடமுடியாமையையும் போலப் பயனற்றதாகும் என்று அறிவுரை கூறுகின்றார்.[164]

குழந்தைகளின் கடமைகள்

சமுதாய மாற்றங்களினால் பெற்றோர் - பிள்ளைகளிடையேயும் உறவு விரிசல் காணப்படுகின்றது. எனவே, வேதநாயகம்பிள்ளை குழந்தைகளின் கடமைகளையும் எடுத்துரைக்கக் காணலாம்.

குழந்தைகளை மனிதனாக்கும், தம் உயிரைவிடவும் மேலாகப் பாதுகாக்கும், பொய்யற்ற அன்பு செலுத்தும் பெற்றோர்போல் உலகில் எவரும் கிடையாது என்பதை உணர்ந்து,

> **"ஐயமெய் அம்மனைத்தோடு அழுவதை அன்றிப் பேசச்**
> **செய்ய ஒன்றறியாத நொய்ய சிற்றுடல் சேய் வளர்ந்திங்கு**
> **உய்யவேண்டுவன செய்தார் உயிரிலும் இனிதாகக் காக்கும்**
> **பொய்யில் அன்புடைத் தாய்தந்தை போல்வார் உளரோ நெஞ்சே"[164]**

என வினவுகின்றார். மேலும், உயிரையும் உடலையும் உலக வாழ்க்கையையும் அளித்த பெற்றோர்க்குக் குழந்தைகள் செய்யும் கைம்மாறு உண்டோ என வினவுவதை,

> **"..................தேகந்**
> **தன்னை ஆருயிரை சீரார் தரணியில் வாழ்வைத் தந்த**
> **அன்னை தந்தைக்குச் செய்யும் அகம் கைம்மாறு உளதோ"[165]**

என்ற அடிகளால் உணரலாம். எனவே, பிள்ளைகள் பெற்றோர்களைப் போற்றி அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதை,

> **"மாதா பிதாவை வணங்கு – நாளும்**
> **ஆதாரமாகவே யவர் சொல்லுக்கிணங்கு"[166]**

> **"கடல்போல் மாதா சகாயம் – அதற்**
> **குடல் செருப்பாய்த் தைத்துப் போடுதல்ஞாயம்"[167]**

எனவரும் அடிகளில் காட்டுகிறார்.

முதியோர்களைப் போற்றுதல்

சமுதாய மாற்றங்களின் விளைவான பிரச்சனைகளில் ஒன்று முதியோரைப் பேணும் மனநிலை குறைந்துவருவது ஆகும். இதனை உணர்ந்த வேதநாயகம்பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரத்தில் ஆசிரியர் கருணானந்தம் பிள்ளையின் மகளும் மருமகனும் அவர் உடைமைகளைப் பறித்துக் கொண்டு அவரை வீட்டை விட்டுத் துரத்துவதாகக் காட்டுகின்றார்.[168]

ஞானாம்பாளிடம் தனக்கு ஆட்சியில் உதவும்படி வேண்டும்போது அவள், "நான் குடித்தன முறையை அனுசரித்து என்னுடைய நாயகர், மாமனார், மாமியார் முதலானவர்களை உபசரிக்க வேண்டியவளே தவிர நான் அரசு செய்வது தகுதியல்ல"[169] எனக் கூறுவதாகக் காட்டுகிறார். இதன்மூலம் முதியவரைப் பேண வேண்டிய இன்றியமையாமையைச் சுட்டுகிறார் எனலாம்.

குடும்ப ஒற்றுமை

பல்வேறு சமுதாய, பொருளாதார, அரசியல் காரணங்களால் குடும்ப ஒற்றுமை குறைந்துவருவதைக் கண்ட வேதநாயகம்பிள்ளை, கயிற்றாலான ஓர் இழையை எளிதில் அறுக்க இயலும். ஆனால் பல இழைகள் இணைந்து காணப்படுமாயின் அறுத்தல் இயலாது. அதுபோலக் குடும்பத்திலுள்ள உடன்பிறந்தார்கள் அனைவரும் கூடிவாழ்ந்தால் அவர்களை வெல்லுதல் அரிதாகும் என்றும்,[170]

"ஒற்றை ஒண்சுடரினை ஒழிக்கும் மெல் வளி
கற்றையாப் பலசுடர் கலப்பின் மாவளி
சற்றும் வெல்லாது சூழ்தமர் சகோதரர்
பற்றொடு மருவிடிற் படர் உறார்களே"[171]

என்றும் குடும்ப ஒற்றுமையை அறிவுறுத்தக் காணலாம்.

இவ்வாறு வேதநாயகம் பிள்ளை தம் காலத்து நிகழ்ந்த சமுதாய மாற்றங்களின் விளைவான செயல்களையும் நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் தம் படைப்புக்களின் பொருண்மைகளாக இடம்பெறச் செய்துள்ளமையை அறிய முடிகிறது.

முற்கூறியவாறு, இராமலிங்க அடிகள், மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆகியோர்களின் படைப்புக்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களின் தாக்கத்தைக் காணமுடிகிறது.

வடக்கில் இராமகிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் இராமலிங்க அடிகள் தோன்றிச் சமயத் துறைகளிலும், சமுதாயத் துறைகளிலும் பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்துள்ளார். தமிழ் இலக்கியத்திலும் புதிய திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளார். எனவே, இராமலிங்க அடிகளைத் தமிழக மறுமலர்ச்சியின் தந்தை எனப் புகழ்வர். சென்ற நூற்றாண்டில் தமிழ்க் கவிதைக்குத் தெளிவும் எளிமையும் உருக்கமும் தந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை இராமலிங்க சுவாமிகளுக்கு உரியது என்று மு.வரதராசன் குறிப்பிடுகிறார். சமயநிலையில் சமரசம் போற்றிய நிலையை இராமலிங்கரின் ஸ்ரீராமநாதத் திருப்பதிகம், ஸ்ரீவீரராகவப்பெருமாள் போற்றித் திருப்பஞ்சகம், இலக்குமி தோத்திரம் மூலம் காண முடிகின்றது. இவர் தம் அருள்நெறிக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கில் சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் அமைப்பை நிறுவி அதன் மூலம் சாதி, சமய வேறுபாடுகளும் மூட நம்பிக்கைகளும் அற்ற ஒரு புத்தம் புதிய மனித சமுதாயத்தை உருவாக்க முயன்றதாக ம.பொ.சிவஞானம் கூறுகிறார்.[173] வள்ளலாரின் உரைகளின் அடிப்படையாக மனிதநேயம் அமைவதைக் காணமுடிகிறது. சாதி வேறுபாடுகளைக் களைந்து சைவ சமயத்தை மறுபார்வை பார்க்க வழிவகை செய்துள்ளார்.

மேலைநாட்டு இலக்கியங்களின் பாதிப்பாலும் பழைய செந்நெறி இலக்கியங்களுக்குப் புத்துயிர் தரும் புதுப் போக்காலும் முகிழ்ந்து எழுந்த பிற்காலத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிக் கவிஞராக வேதநாயகம் பிள்ளை திகழ்கின்றார்.[174] முதல் புதினத்தைப் படைத்தளித்தவர் எனப் பெரும்பாலோரால் கருதப்படும் வேதநாயகம் பிள்ளை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகின்றார். பிரதாப முதலியார் சரித்திரம் மூலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய இலக்கிய வகையை அறிமுகப்படுத்தியதுடன் சுகுண சுந்தரி மூலம வரலாற்றுப் புதினத்திற்கும் வழியமைத்துக்

கொடுத்துள்ளார் எனலாம். சமுதாயம் மேம்பட உரைநடை இலக்கியம் பரவ வேண்டும் என்ற சிந்தனையுடையவராய்த் திகழ்ந்தவர் வேதநாயகம் பிள்ளை என்பர்.

வேதநாயக சாஸ்திரியார்

பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியப் பொருண்மைப் போக்கைப் பற்றி அறியும் முயற்சியில் வேதநாயகம் சாஸ்திரியாரின் படைப்புகளும் பெரிதும் துணை நிற்கின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு நிலை மாறுபட்ட காலகட்டத்தில் (Transitional period) வாழ்ந்தவர் வேதநாயகம் சாஸ்திரியார். நிலப்பிரபுத்துவ அமைப்பும் அது தோற்றுவித்த இலக்கிய இரசனைகளும் கோட்பாடுகளும் மெல்லமெல்லக் கட்டவிழத் தொடங்கின. தொழில் நுட்ப நாகரிகமும் அது புதிதாகத் தோற்றிய முதலாளித்துவ அமைப்பும் மேல்நாட்டுக் கல்வி முறையின் பாதிப்பும் தமிழ்ச் சமுதாயத்தின் கலை, கலாச்சாரக் கருவூலங்களில் பெரும்பாதிப்புகளை ஏற்படுத்தின. சாஸ்திரியார் இவ்விருவகைக் காலங்களின் இயல்புகளை ஒருங்கே பிரதிபலித்து நிற்பதைக் காண்கிறோம். ஓரளவுக்கு நிலப் பிரபுத்துவ இலக்கியமான புதுச் செந்நெறி இலக்கிய வடிவங்களும் கோட்பாடுகளும் அவரிடத்தில் நெகிழ்ச்சி பெற்று மெல்ல மெல்ல மறைவதைக் காணலாம் என்றும், தொடக்க நிலைத் தமிழ் கிறித்தவக் கவிஞர்களின் கவிதைகள் மிகச் சிறப்பு வாய்ந்தன என்று குறிப்பிடமுடியவில்லை. தமிழ்நாட்டு புதுச் செந்நெறி இலக்கிய வடிவங்களான பிரபந்த வடிவங்களில் இவை கிறித்தவச் சிந்தனைகளைத் தந்து நின்றன. ஓரளவிற்கு ஏதோ ஒன்றைப் பார்த்து எப்படியோ படைப்பதைப் போன்ற செயற்கைத் தன்மை இவற்றில் மலிந்து கிடப்பதைக் காணலாம் என்றும், தொடர்ந்து தோன்றிய கவிஞர்கள் பிரபந்த வடிவங்களைச் சற்றும் மாறுபடாமல் அப்படியே கையாளுவதில் ஆர்வம் காட்டவில்லை. பிரபந்த வடிவங்களைப் படைப்பு உள்ளத்துடனும், திறனாய்வு நோக்குடனும் பரிசீலனை செய்து தேவையான மாற்றங்களுடன் அவர்கள் கையாளத் தொடங்கினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வேதநாயகம் சாஸ்திரியார் ஆவர் என்றும், மேல்நாடுகளில் வீறுணர்ச்சிக் கவிதைகள் தோன்றிப் பெரும் பாதிப்பினை ஏற்படுத்திக்

கொண்டிருந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர் சாஸ்திரியார். அவரது படைப்புகளை ஆழமாகப் பயிலும்போது அவர் கொண்டிருந்த இலக்கியக் கோட்பாடுகள் ஐரோப்பிய வீறுணர்ச்சிக் கவிஞர்களின் இலக்கியக் கோட்பாடுகளோடு கைகோர்த்து இணைந்து நடைபயில்வதைக் காண்கிறோம் என்றும், தேவையற்ற யாப்பு விதிகளைப் புறக்கணிப்பதிலும் நெகிழ்ந்து கொடுக்காத இலக்கிய வடிவங்களைத் தவிர்ப்பதிலுமே அவயவிக் கோட்பாட்டை (Organic Theory of Art)ஏற்றுக் கொள்வதிலும் சாஸ்திரியார் மக்களின் மொழியைக் கவிதைக்குரிய மொழி நடையாகப் போற்றுவதிலும், கவிதை உள்ளத்திலிருந்து தோன்றி வெளிப்படுகிறது என்ற அகவெளியீட்டுக் கொள்கையை (Expressive Theory) வலியுறுத்துவதிலும் தன்னுணர்ச்சிப் பாடல்களுக்கு அதிக சிறப்பளிப்பதிலும் தமிழ்நாட்டுக் கவிஞராகிய வேதநாயகம் சாஸ்திரியார் ஆங்கிலத் தன்னுணர்ச்சிக் கவிஞர்களை ஒத்துக் காட்சி தருகின்றார் என்றும் அவரது படைப்புக்களில் மேல்நாட்டு இலக்கிய உள்ளீடும் தமிழ்நாட்டு இலக்கிய உள்ளீடும் தமிழ்நாட்டு இலக்கிய வடிவமும் கலைநுட்பத்துடன் இணைந்து சங்கமமாவதைக் காண்கிறோம் என்றும், மேல்நாட்டுத் தத்துவங்களையும் இலக்கிய உணர்வுகளையும் இந்திய நாட்டு இலக்கிய வடிவத்தோடும் சமய இலக்கிய உணர்வோடும் சாஸ்திரியார் ஐக்கியப்படுத்த முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார் என்றும் ஜான் சாமுவேல் கூறும் கருத்துக்கள்[174] அவர் இலக்கியப் படைப்பின் போக்கையும் பொருண்மைப் போக்கையும் காட்டுகின்றன எனலாம்.

புதிதாக மதம் மாறியோரிடத்துக் காணப்படும் வரம்பு மீறிய கொள்கை வெறியும் பற்றார்வமும் சாஸ்திரியார் பாடல்களில் பிரதிபலிக்கின்றன. எனினும் அவர் இந்துக்களை ஆகடியம் பண்ணி எழுதிய பாடல்கள் ஒருவிதத்தில் அக்காலத்துச் சமுதாய அமைப்பில் சில அம்சங்களைச் சீர்திருத்தவேண்டும் என்ற உணர்ச்சியின் அடிப்படையிலும் எழுந்தனவாகத் தோன்றுகின்றன என்ற கைலாசபதியின் கருத்துக்கள்[175] வேதநாயகம் சாஸ்திரியாரின் படைப்புக்களில் சமுதாயச் சிந்தனைகள் இடம்பெறுமாற்றைப் புலப்படுத்துகின்றன.

இவ்வகையில் சாஸ்திரியார் ஞானத்தச்சன் நாடகம் என்ற நூலில் சாதிக் கொடுமைகள், மனித குல வளர்ச்சிக்குச் சாதிமுறை

ஏற்படுத்தும் தடைகள், சமுதாய உறவை வலுப்படுத்த வேண்டிய தேவை, சாதி வேறுபாடுகளற்ற சமத்துவச் சமுதாயம் படைத்தல் போன்ற சிந்தனைகள் இலக்கியப் பொருண்மையாக அமையக் காணலாம்.

ஞான நொண்டி நாடகத்தில் சாஸ்திரியார் நொண்டியை வீழ்ந்து போன மனிதச் சமுதாயத்தின் குறியீடாகக் கையாண்டுள்ள போக்கை உணரமுடிகிறது.

புதின இலக்கியங்களின் பொருண்மைப் போக்கு

இனி, புதின இலக்கியங்களில் இடம்பெறும் பொருண்மைப் போக்கிற்குச் சில சான்றுகளைக் காணலாம்.

புதினங்கள், சிறுகதைகள் ஆகிய இலக்கிய வகைகள் ஆங்கிலக் கல்வி மூலம் இந்திய மொழிகளுக்குக் கிடைத்த புதிய கொடைகள் எனக் கருதலாம். ஆங்கிலக் கல்வி கற்ற நடுத்தர வகுப்பினருள் ஒரு பிரிவினரின் கலை முயற்சியின் அரிய விளைவே புதினம், சிறுகதை ஆகிய புதுவகை இலக்கியங்கள் என்று ந.பிச்சமுத்து குறிப்பிடுகிறார்.[176]

ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் ஆங்கில நாவல்களையும் கற்கவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. இதனால், சிலர் நாவல் எழுதும் ஊக்கமும் உந்துதலும் பெற்றனர். அவர்களுக்கு வாசகர்கள் உற்சாகம் அளிக்கவும் இது காரணமாக அமைந்தது என்று சிட்டி சிவபாத சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

சமுதாயத்தில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பற்ற, கற்பனை நிறைந்த இலக்கியங்களையும் புராணங்களையும் மக்கள் புறக்கணித்தமை யால் புதினங்கள் தோற்றம் பெறலாயின என்றும் கருதப்படுகிறது. புதினத்தின் தோற்றம் பற்றிக் கூறும் ந.பிச்சமுத்து, நிலமானிய அமைப்பில் கூட்டுக் குடும்ப வாழ்வு ஒரு சிறந்த கூறு ஆகும். நிலமானிய அமைப்பின் சிதைவில் கூட்டுக்குடும்பங்களும் சிதைவுற்றன. கூட்டுக்குடும்பங்கள் சிதைவுறும் நிலையில் தனி மனித நெறிக்கு இடம் கொடுக்கும் தொழில்துறைகள் ஊக்கமளிக்கப்படுகின்றன. இதுவே முதலாளித்துவ வளர்ச்சிக்கும்

நடுத்தர வகுப்பின் வாழ்வுக்கும் வழி வகுக்கின்றது. இந்தச் சூழலில் தனிமனிதனும் அவனுடைய நலன்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. சமுதாய நெறிமுறைகளிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் தனிமனிதன் பிறழ்கின்றபோது புதினம் பிறக்கிறது என்று விளக்குகின்றார்.[177] மேலும், அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட சமுதாய மறுமலர்ச்சியோடு மலர்ந்த இலக்கிய மறுமலர்ச்சியின் வரலாற்றுப் பெருமை சான்ற விளைவு புதினம் என்றால் மிகையாகாது என்றும் கூறுகின்றார்.[178]

மனித உறவுமுறைகளை எடுத்துக்காட்டும் ஆற்றல் வாய்ந்த படைப்பாகப் புதினங்கள் திகழ்கின்றன. எனவே, சமுதாய மாற்றங்கள் பற்றி அறிவதற்கும், சமுதாய மாற்றங்களினால் ஏற்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி அறிவதற்கும் புதினங்கள் சமகாலச் சான்றுகளாக அமைகின்றன. இது பற்றிய நாவல் இலக்கியமே நவீன உலகின் சிக்கல் நிறைந்த வாழ்க்கைப் பிரச்சனைகளையும் சமுதாயச் சலனங்களையும் இயக்கங்களையும் நுணுக்கமாகச் சித்தரிக்கின்றது என்று கைலாசபதி கருதுகின்றார்.[179]

ஆங்கில ஆட்சியில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றத்தினால் பெண்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால், தமிழகத்திலுள்ள ஆடவர் பெண்டிர் பற்றிய சிந்தனைகளில் மாற்றங்கள் தோன்றலாயின. கல்வி கற்ற பெண்கள் தம் உரிமைகளை மீட்டெடுக்கத் துணிந்தனர். தொழில் முன்னேற்றம் காரணமாகக் கல்வி பெற்றவர்கள் வேலை வாய்ப்பைத் தேடி நகரங்களுக்குச் செல்லலாயினர். இதனால் அண்ணன் - தம்பி, கணவன் - மனைவி போன்ற குடும்ப உறவுகள் பாதிக்கத் தொடங்கின. இவற்றைக் கண்ட பழைய பண்பாட்டில் ஊறிய மக்கள் இவற்றைச் சமுதாயச் சீர்கேடுகள் எனக் கருதினர். இவ்வகையில் இவர்களின் கருத்துக்களையும் புதினங்கள் பிரதிபலிக்கலாயின.

ஜார்ஜ் ஸ்டெய்னர் (George Steiner) என்பவர் தொழில்துறையில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றம், அதன் விளைவான உற்பத்தி, விநியோகம், குடும்பத்திலிருந்து ஒதுங்கி யிருக்கும்நிலை, ஓய்வு, வாசகர்களின் படிக்கும் பழக்கம் போன்ற

வாழ்க்கை முறைகள் வளர்ந்துள்ள தொழில் மயமான வாணிக முதலாளித்துவ அமைப்புடன் புதினங்கள் பெரிதும் தொடர்புடையன என்கிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்தவ மதத்தால் வைதீக மதத்தில் ஏற்பட்ட தாக்கம், மேலை நாட்டுக் கலாச்சார நுழைவால் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல், ஆங்கிலக் கல்வி, வேலைபெறும் ஆசை முதலியவற்றால் ஏற்பட்ட தாய்மொழி இலக்கியப் புறக்கணிப்பு, ஒழுக்கச் சிதைவு போன்ற பல புதிய பிரச்சனைகள் முதலியன சமுதாயத்தை ஆட்டிக் குலுக்கின என்பர். இவற்றின் தாக்கத்தால் ஏற்பட்ட சமுதாய உயர்வைப் புதினங்களும் பிரதிபலிக்கத் தொடங்கின என்று ந.பிச்சமுத்து கூறுகிறார்.[180]

மற்றெல்லா இலக்கிய வடிவங்களை விடவும் நாவல் மனிதச் சமுதாயத்தை ஓவியப்படுத்துவதால் அது சமுதாயத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. போராட்டம் (struggle), ஒழுங்கின்மை (Chaos), அமைதிக்குறைவு (anarchy) முதலான சமுதாயக் குழப்ப நிலைகளில் நாவல் படைப்பாளர்கள் பல பிரச்சனைகளை எழுப்பி, அப்பிரச்சனைகளை மையமாகக் கொண்டு தம் படைப்புக்களை உலவ விடுகின்றனர். சமகாலச் சமுதாயத்தில் நிலவும் மதிப்புகள் (Values), கருத்துகள் (ideologies), பிரச்சனைகள் (issues) முதலியவற்றைத் தம் எதிர்விளைவுகளாக மட்டுமன்றி, தாம் படைக்கும் நாவல் உலகில் உருவாக்கும் மக்களாகவும் காட்டுகின்ற காரணத்தால் நாவலாளி ஏறத்தாழச் சமூகவியலாளர் ஆகிறார் என்ற கருத்தும் உள்ளது.181

தொழிற் சமுதாயத்தில் முக்கிய இலக்கிய வகையாகத் திகழும் நாவல் குடும்பம், அரசியல், நாடு முதலியவற்றுடன் உறவுடைய மனிதனின் சமுதாய உலகத்தை மறு உருவாக்கம் (recreate) செய்கிறது. மேலும், அது குடும்பத்திற்கும் மற்றச் சமுதாய நிறுவனங்களுக்கும் இடையேயுள்ள மனித உறவுகளையும், சமூக வகுப்புகளுக்கும் சமூகக் குழுக்களுக்கும் இடையேயுள்ள முரண்களையும் எடுத்துரைக்கின்றது. நாவல் ஒரு தூய ஆவணம் என்ற நிலையில் அச்சமுதாயத்தின் சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளை விளக்கும் தன்மையை உணரலாம்[182] என்ற கருத்துக்கள் நாவலின் பொருண்மைப் போக்கை விளக்குகின்றன.

இவ்வகையில் பார்க்கும்போது மாயூரம் வேதநாயகம் பிள்ளை, குருசாமி சர்மா, இராசமையர், மாதவையா முதலிய நாவல் இலக்கியப் படைப்பாளர்கள் கற்ற ஆங்கிலக் கல்வி அதனால் பெற்ற துரைத்தனம், தொழில் முதலியவற்றால் கனவான்கள் ஆனவர்கள் என்று கருதப்படுகின்றனர். எனினும், இவர்கள் சாதி, மதம், நிலவுடைமை முதலியன மனித குல முன்னேற்றத்தின் தடைகள் எனக் கருதினர். தாம் வாழும் சமுதாயத்தில் காணப்படும் சாதிப்பாகுபாடுகளும், சடங்கு முறைகளும் காலத்திற்கு ஏற்புடையன அல்ல எனக் கருதினர். இச்சூழலில் இவர்கள் புதிய எண்ணங்கள், புதிய இலட்சியங்கள், கருத்துக்கள் ஆகிய தம் முற்போக்குச் சிந்தனைகளுக்கு வடிகாலாகப் புதிய இலக்கிய வடிவமான புதினங்களைப் பயன்படுத்தினர் என்பர்.

புதினத்தின் கலைத்தன்மை என்ற நிலையில் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் கருத்து மாறுபாடுகளுக்குரியதாகக் காணப்படினும் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமுதாயத்தின் படப்பிடிப்பாகவும் கதை என்ற அளவில் சுவை பயப்பதாகவும் அமைதல் அறியத்தக்கது என ந.பிச்சமுத்து குறிப்பிடுகின்றார்.

வேதநாயகம் பிள்ளையை அடுத்துத் தமிழ்ப் புதினம் படைத்தவராகக் கருதப்படும் குருசாமிசர்மாவின் பிரேமாவதி கலாவத்யம் சிற்றன்னையின் கொடுமைகளை விளக்கும் குடும்பக் கதையாகத் திகழ்கின்றது.

இராசம் ஐயரும் மாதவையாவும் குடும்ப வாழ்க்கை சிதைவுறுவது கண்டு மனம் வருந்திய நிலையில் புதினங்களைப் படைத்துள்ளனர். நகர நாகரிக வளர்ச்சியின் விளைவால் கிராம வாழ்க்கை பாதிக்கப்படுவதை எழுதுகின்றனர். கமலாம்பாள் சரித்திரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேலை நாட்டுக் கல்வி பரவியுள்ள நிலையில், சமுதாயத்தில் விரைவான மாற்றங்கள் எழும் நிலையில் தோன்றியது. கமலாம்பாளின் தூய வாழ்க்கையில் ஏற்பட்ட ஆபத்துக்கிடமான அபவாதமே இக்கதையின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையக் காணலாம். கிராம வாழ்க்கையையும் பண்பாட்டையும் பிரதிபலிக்கின்றது. மேலும், இந்நாவல் இளைஞர்களின் காதல்

ஒருபுறமும் நடுவயதினரின் அன்பான குடும்ப வாழ்க்கை ஒருபுறமும் முரண்படுவதையும் காட்டுகின்றது.

பத்மாவதி சரித்திரத்தில் பல சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகள் இடம்பெறுவதை அறியமுடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்வி வேண்டியும், வேலை வேண்டியும் கிராம மக்கள் நகரத்திற்கு இடம்பெயர்வதால் நகர வாழ்க்கை மேம்பாடடைவதையும் கிராமவாழ்க்கை சீர்கேடு அடைவதையும் இது விளக்குகிறது. இந்நாவல் பற்றிக் குறிப்பிடும் வீராசாமி நம்மில் ஒருவராய் நாம் செய்யும் செயல்களையே செய்யும் மக்களாய் நடமாடும் மாதவையாவின் படைப்புக்கள் தமிழ் நாவலின் புதிய படைப்பு என்பதில் ஐயமில்லை என்கிறார்.[183]

இவ்வகையில் தமிழில் தோன்றிய புதினங்கள் அனைத்தும் நிலமானிய அமைப்பிலிருந்த சமுதாயத்தில் முதலாளித்துவ அமைப்பு நுழைந்ததன் தாக்கத்தால் ஏற்பட்ட கலாச்சாரப் போராட்டங்களையும் அவற்றின் விளைவுகளையும் சித்திரிப்பதாக ந.பிச்சமுத்து கருதுகின்றார். தமிழ்ச் சமுதாயத்தில் கிறித்துவ மதம் பரவத் தொடங்கியதன்மூலம் தங்கள் மதத்துக்கு ஓர் ஆபத்து வந்துவிட்டதாக இந்து சமயத்தவர் கருதத் தலைப்பட்டனர். தமிழ்ச் சமுதாயமும் சமயமும் இடைக்காலத்தில் மோசமடைந்துவிட்டன என்றும் மீண்டும் பழைய புனிதநிலை வந்தால் சமுதாயம் சீராகும் என்றும் மனப் பூர்வமாக எண்ணினர். இந்த எண்ணம் நம் புதினங்களிலும் இடம் பெறுவதாயிற்று என்று கைலாசபதி கூறுகின்றார்.[184]

இதுகாறும் கண்டவற்றால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கியப் பொருண்மைப் போக்கைக் குறித்து நாம் அறியமுடிகிறது. பெரும்பாலான நூல்கள் பழைய மரபைப் பின்பற்றியே எழுந்துள்ளன. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமுதாய மாற்றங்களின் விளைவுகளால் சாதி வேறுபாடுகளை அகற்றுதல், சமத்துவச் சிந்தனைகளை வெளிப்படுத்தல், சமயக் காழ்ப்புணர்வைச் சாடுதல், தாய்மொழியின் வளர்ச்சியைப் பேணுதல், பெண்களின் சமுதாய நிலையை மேம்படுத்தல், குடும்ப வாழ்வைச் சீராக்கல், விதவைநிலை, குழந்தை மணம் போன்ற சமுதாயச் சீர்கேடுகளை

அகற்றுதல் போன்ற பல்வேறு சிந்தனைகள் இலக்கியப் பொருண்மைகளாக அமைந்துள்ளமையையும் அறியமுடிகிறது.

மேற்கோள் சான்றுகள்

1. *சேஷையங்கார், ஆதியூர் அவதானி சரிதம், பக்.*
2. *தி.அ.பா. 6 : 85 : 10, 6 : 142 : 97*
3. *தி.அ.பா. 6 : 85 : 10, 6 : 142 : 97*
4. *தி.அ.பா. 6 : 96 : 8, 6 : 108 : 8, 6 : 110 : 3*
5. *தி.அ.பா. 6 : 129 : 22*
6. *தி.அ.பா. 6 : 56 : 8*
7. *தி.அ.பா. 6 : 129 : 22*
8. *தி.அ.பா. 6 : 55 : 7, 6 : 85 : 10, 6 : 142 : 92*
9. *தி.அ.பா. 6 : 133 : 1*
10. *தி.அ.பா. 6 : 133 : 5*
11. *தி.அ.பா. 6 : 133 : 7*
12. *தி.அ.பா. 6 : 138 : 6*
13. *தி.அ.பா. 6 :*
14. *தி.அ.பா. 6 : 56 : 4*
15. *தி.அ.பா. 6 : 56 : 9*
16. *தி.அ.பா. 6 : 57 : 85*
17. *தி.அ.பா. 6 : 129 : 29*
18. *தி.அ.பா. 6 : 133 : 1*
19. *தி.அ.பா. 3 : 4 : 5*
20. *தி.அ.பா. 6 : 77 : 2*
21. *தி.அ.பா. 6 : 81 : 211 - 212*
22. **Ronald W.Smith, Sociology - An Introduction, p.147.**
23. எஸ். இராமகிருஷ்ணன், **மார்க்சியப் பொருளாதாரப் பார்வை,** பக்.. *6 - 7*
24. *தா.செல்லப்பா,* **அரசியல் பொருளாதாரச் சுருக்கம்,** *ப.12*
25. *தி.அ.பா. 1 : 52 : 17*
26. *தி.அ.பா. 2 : 60 : 10*
27. *தி.அ.பா. 3 : 6 : 148*
28. *உரைநடைப்பகுதி, ப.68*
29. *உரைநடைப்பகுதி, ப.68*
30. *தி.அ.பா. 6 : 102 ; 19*
31. *தி.அ.பா. 1 : 6 : 3*

104. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப. 8
105. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப.8
106. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப. 79
107. பெ.மா.4, பெ.ம.மா. புருஷர்களை வேண்டுதல், அனுபல்லவி
108. பெ.க.ப.19
109. பெ.ம.மா. பெ.பா.தூ.அ.ப.10, ச.சு.ப.10
110. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப.5
111. ச.ச.ச.கீ.181 : 9 : 6-8, பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப.9
112. பெ.க.ப.74, பெ.மா.ப.6
113. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப.4
114. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. ப. 5
115. பெ.ம.மா.தூ.பெ.பா.வ.சொ. பக். 3, 6
116. பி.மு.ச. பக்.33 - 34, 63-64, 109-201
117. பி.மு.ச. பக். 83 - 84
118. பெ.ம.மா. புருஷர்களை வேண்டுதல், ப.9
119. பெ.ம.மா.ப.1
120. பெ.ம.மா.ப.16
121. பெ.ம.மா.ப.5
122. பி.மு.ச.ப.: 102
123. பெ.ம.மா.பக்.1 & 25
124. பெ.ம.மா.ப.15, ச.ச.ச.கீ.182 : 3 : 2, 192 : 5 : 2
125. பெ.ம.மா : புருஷர்களை வேண்டுதல், ப.12
126. பெ. மா.ப.2
127. ச.ச.ச.கீ. 189 : 1 : 1 - 4
128. பெ.தே.ப.1, 15 பி.மு.ச.பக்.103, 104, 105, 106
129. பெ.ம.மா.பக்.54, 107, பி.மு.ச.பக்.113, பெ.மா.ப.2
130. சு.சு.ப.87
131. பெ.மா.ப.25, சு.சு.பக்.73, 79, 80, 83, 86
132. பெ. மா. பக்.7, 21, 22, 23
133. நீதிநூல், இணைப்பு : 9 : 1
134. பெ.க.ப. 3
135. பெ.ச.ப. 13
136. நீதிநூல் : 9 : 9
137. பெ.க.ப. 13
138. பெ.க.ப. 22
139. பெ.க.ப.21

140. பெ.க.பக்.3-4, 13, 15 நீதிநூல் இணைப்பு 9 : 3
141. பெ.க.பக். 2,3, 6
142. பெ.க.ப.6
143. பெ.க.ப.21
144. பெ.க.ப. 40
145. பெ.க.பக். 14, 19 - 20
146. பெ.ம.மா. புருஷர்களை வேண்டுதல், ப.12
147. நீதிநூல் 12 : 5 : 1
148. ஆ. பாண்டுரங்கன், **வேதநாயகம்பிள்ளை**, ப.92
149. அமுதன் அடிகள், **தமிழ்வளர்த்த வேதநாயகர்**, அணிந்துரை
150. பி.மு.ச. ப. 308
151. பி.மு.ச. ப. 302
152. பி.மு.ச. ப. 299
153. பி.மு.ச. ப. 307
154. பி.மு.ச. ப. 302
155. பெ.க.ப. 26
156. பி.மு.ச. ப. 310
157. பி.மு.ச. ப. 306
158. பி.மு.ச. பக். 308, 310
159. பெ.க.ப. 26
160. பெ.க.ப. 24
161. பெ.ம.மா.ப.91
162. நீதிநூல் 11 : 4
163. நீதிநூல், 7 : 8
164. நீதிநூல், 7 : 1 : 3 - 4
165. பெ.ம.மா.25
166. பெ.ம.மா. 32
167. பி.மு.ச.பக்.67 - 68
168. பி.மு.ச. ப.361
169. நீதிநூல், 10 : 5
170. நீதிநூல் 10 : 4
171. மு. வரதராசன், **தமிழ் இலக்கிய வரலாறு**, ப.128
172. ம.பொ.சிவஞானம், **வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு**, ப.33
173. ஜான் சாமுவேல், **பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்**, ப. 158
174. ஜான் சாமுவேல், **பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்**, பக்.138, 139, 144, 164, 167
175. க. கைலாசபதி, **பாரதிக்கு முன் .....** பக். 6 - 9

176. ந.பிச்சமுத்து, **மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம்**, *ப.14*
177. ந.பிச்சமுத்து, அதே நூல், *ப.37*
178. ந.பிச்சமுத்து, அதே நூல், *ப.30*
179. க.கைலாசபதி, **சமுதாயமும் இலக்கியமும்**, *ப.124*
180. ந.பிச்சமுத்து, மு.கூ.நூ.ப.46
181. Sulochana Rengeya Raghava, **Sociology of Indian Literature**, p.3.
182. Diana T, Laurenson & Alan Swing Wood, **The Sociology of Literature**, p.12
183. தா.வே.வீராசாமி, **தமிழ் நாவல் முன்னோடிகள்**, *ப.150*
184. க. கைலாசபதி, **தமிழ் நாவல் இலக்கியம்**, *ப.55*

முடிவுரை

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வின்மூலம் அறியலாகும் குறிப்பிடத்தக்க செய்திகளைத் தொகுத்துத் தரும் நிலையில் இப்பகுதி அமைகின்றது.

சமுதாயம், சமுதாய மாற்றம் என்பன குறித்துச் சமூகவியலாளர்கள் அளிக்கும் விளக்கங்களுள் சிலவற்றை அறிந்துகொள்ள முடிகிறது.

சமுதாய அமைப்புக்கும் சமுதாய மாற்றங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளமை புலனாகின்றது.

சமுதாய மாற்றம் பற்றி ஆராய்ந்த சமூகவியலாளர்கள் சமுதாய மாற்றத்தின் இயல்பு, சமுதாய மாற்றத்தின் போக்கு ஆகியன தொடர்பான பல கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர்.

சமுதாய மாற்றம் பற்றிய ஆய்வில் சமுதாயத்தில் காணப்படும் ஒரு குழு பிற குழுக்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஏற்படும் மாற்றங்களை ஆராய்தல், நகரியமயமாதல் பற்றி ஆராய்தல், மக்கள் தொகை மற்றும் இடச்சூழல் பற்றி ஆராய்தல், நிறுவனங்களைப் பற்றி ஆராய்தல், சமூக இயக்கங்களைப் பற்றி ஆராய்தல் எனப் பல முறைகள் உள்ளன.

சமுதாய மாற்றம், சமுதாயப் பரிணாம வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம், சமுதாயப் புரட்சி, சமுதாய மறுமலர்ச்சி,

நவீனமயமாதல், ஆரியமயமாதல், தொழில்மயமாதல் என்பன அடிப்படையில் தொடர்புடையன போன்று காணப்படினும் இவை வேறுபட்டனவே என்பது தெரியவருகின்றது.

சமுதாய மாற்றத்திற்குரிய ஆதாரங்களாக அகத்தூண்டல், புதிய மாறுதல்கள், பரவுதல், நெருக்கடி, முரண் என்பன சமூகவியலாளர்களால் சுட்டப்பெறுகின்றன.

சமுதாய மாற்றம் குறித்த கொள்கைகளாகச் செயல்பாட்டுக கொள்கை, போராட்டக் கொள்கை, பரிணாம வளர்ச்சிக் கொள்கை, சுழற்சிக்கொள்கை, நேர்கோட்டுக் கொள்கை என்பன அமைகின்றன.

படிப்படியாகத் திரண்டுவரும் மாற்றம், சில கூறுகளில் ஏற்படும் மாற்றம், குறிப்பிட்ட காலம் வரையிலும் கூடத் தொடர்ச்சியாக இல்லாத மாற்றம், இயற்கை மாற்றம், உடற்கூறு மாற்றம், தொழில்நுட்ப மாற்றம் என்பன சமுதாய மாற்றங்களின் முறைகளாகக் கருதப்படுகின்றன.

தொழில்நுட்பக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள், மக்கள் தொகைக் காரணிகள், நிலவியல் காரணிகள், உயிரியல் காரணிகள், பண்பாட்டுக் காரணிகள் என்பனவும் சட்டங்கள், அறிவியல் முன்னேற்றம், தொலைத்தொடர்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள், குறைந்த அளவு ஒழுங்கின்மை, நிலைப்பற்ற தன்மை, சிறுபான்மை இனங்களின் பெருக்கம் என்பனவும் சமுதாய மாற்றங்களை உருவாக்கும் காரணிகள் எனச் சமூகவியலாளர்களால் விளக்கப்படுகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் அரசியல் சூழல் அமைதியற்ற நிலையில் காணப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட 1801ஆம் ஆண்டு தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆண்டு எனக் கருதப்படுகிறது.

சமுதாய மாற்றங்கள் உருவாகுவதற்கு ஏற்ற சூழல்கள் தமிழகத்தில் நிலவின.

நிரந்தர ஆட்சியால் அமைதியும் ஒழுங்கும் நம்பிக்கையும் காணப்பட்டன.

சின்னாபின்னமாகச் சிதறுண்டு கிடந்த நாடு ஒரே ஆட்சியின் கீழ் வந்தது.

ஆட்சித்துறையில் மக்களையும் உளப்படுத்தும் போக்கு ஏற்பட்டது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தலசுய ஆட்சி நடத்தும் வாய்ப்பைப் பெற்றனர்.

தனி நபர் ஆட்சி என்பதற்குப் பதில் சட்டத்தின் ஆட்சி என்பது ஏற்பட்டது.

சட்டத்தை ஒருபடித்தாக்கல், நிருவாகத்தை மையப்படுத்தல் என்பன ஆங்கிலேயர்களின் நிருவாகக் கொள்கைகளாக அமைந்தன.

தமிழகத்திற்குப் புற உலகத்தொடர்பு முன்பைவிட அதிகமாக ஏற்பட்டது.

வரிவிதிப்பில் ஓர் ஒழுங்குமுறை கொண்டுவரப்பட்டது.

பகுத்தறிவு, சமத்துவம், பொதுவுடைமை போன்ற பண்பாட்டு மதிப்புகள் ஏற்றம் பெற்றன.

புதிய மரபுகள் சிலவற்றின் வருகையால் பொது வாழ்க்கையின் தன்மை மாறியது.

ஆங்கிலேயர் ஆட்சியால் தமிழகக் கல்வித்துறையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பல பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் தொடங்கப்பட்டன.

மேல்நாட்டுக்கல்விமுறையின் அறிமுகத்தால் நகரங்களில் குடியேறல், மேலைநாட்டு முறையிலான மருத்துவமனைகள், நீதிமன்றங்களைப் பயன்படுத்தல், செய்தித்தாள்கள் படித்தல் முதலியவற்றில் மக்கள் ஈடுபடலாயினர்.

அச்சு இயந்திரம் நிறுவப்பட்டுப் பள்ளிப் பாட நூல்கள் வெளியிடப்பட்டன.

ஆங்கிலக் கல்வியால் மக்களுக்குப் புறவுலக வாழ்க்கை அனுபவம் கிடைத்தது.

இதனால் மக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் போன்ற உணர்வுகள் ஏற்பட்டன.

எதையும் பகுத்தறியும் எண்ணம் எழுந்தது.

சமயச் சார்பற்ற கல்வி கிடைத்தது. இதனால் மூடநம்பிக்கைகள் குறைய ஆரம்பித்தன.

பல பிரிவுகள், சாதிகளைச் சார்ந்தவர்கள் ஒன்றாகப் பயிலும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஆங்கிலக் கல்வியால் மேற்கத்தியமயமாதல் நிகழ்ந்தது.

மேற்கத்தியமயமாதலால் குழந்தைமண மறுப்பு, விதவை மறுமண ஆதரிப்பு, பெண்களை உயர்வுபடுத்தல், பெண்கல்வி அளித்தல், தீண்டாமை எதிர்ப்பு, புறமணமுறை ஆதரவு முதலிய சீர்திருத்த எண்ணங்கள் தோன்றின.

அனைவர்க்கும் கல்விகற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

பல்துறைக் கல்வி வாய்ப்பு ஏற்பட்டது.

இதழ்களின் பங்கு மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டது.

சட்டத்தின்முன் சமம் என்ற கொள்கையால் சாதி வேற்றுமை குறைய ஆரம்பித்தது.

சாதிமுறை இயலாமையை அகற்றும் சட்டத்தால் சாதிமுறையின் ஆதிக்கம் குறைந்தது.

சிறப்புத் திருமணச் சட்டம் சாதிமுறையின் அகமணமுறைக் கொள்கையைத் தளர்த்தியது.

ஆங்கிலக் கல்வி, புதிய தொழிற்சாலைகள் ஆகியவற்றால் இந்துச் சமுதாய அமைப்பு மாறத் தொடங்கியது.

தங்குமிடங்கள், சிற்றுண்டி விடுதிகள் ஆகியவற்றின் வருகையால் தூய்மையின்மை, தீண்டாமை போன்றன அகல ஆரம்பித்தது.

போக்குவரத்து வசதி, தொடர்பு வசதி ஆகியவற்றால் சாதிமுறை நெகிழ்ச்சி அடைய ஆரம்பித்தது.

குழந்தைமணத் தடைச்சட்டத்தால் பெண்கள் நிலை ஓரளவு உயர ஆரம்பித்தது.

பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

பெண்கள் வேலைக்குச் செல்லல் மூலம் அவர்களுடைய பொருளாதார நிலை உயர ஆரம்பித்தது.

சதித்தடைச் சட்டம் மூலம் சதி என்ற சமுதாயக் கொடுமையிலிருந்து பெண்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்தியச் சமுதாய மாநாட்டின் தோற்றம் பெண்களின் நிலை உயரக் காரணமானது.

சமுதாய நல இயக்கங்களும், சமுதாய நலச் சிந்தனையாளர்களும் பால் சுதந்திரம், பால் சமத்துவம் ஆகியவற்றுக்காகப் பாடுபட்டமையால் பெண்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தனர்.

சட்டங்கள் பெண்கள் நலன்களுக்காகப் பெரும் பங்காற்றின.

பெண்களின் திருமண வயது நிர்ணயிக்கப்பட்டது. இதனால் குழந்தை மணக் கொடுமை அகன்றது.

சட்டங்கள் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் வேலியிட்டன.

சென்னையில் உயர்நீதிமன்றம் நிறுவப்பட்டுப் பல சட்டங்கள் கொண்டுவரப் பட்டன. இதனால் சாதிமுறையின் சாதிப் பஞ்சாயத்துக்களும் சாதிச்சட்டங்களும் வலுவிழந்தன.

கல்வி, பொருளாதார முன்னேற்றம், சமுதாயச் சூழல், வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு காரணங்களால் பல கூட்டுக் குடும்பங்கள் சிதைவுற்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்களுடைய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் ஒரு புதிய அதிகார வர்க்கத்தைத் தோற்றுவித்தனர்.

ஆங்கிலேயர்களின் வாணிபக் கொள்கையால் வாணிப இலாபம் ஆங்கிலேயர்களின் கைகளுக்குச் சென்றது.

நிலமற்ற விவசாய உழைப்பாளர்கள் இன்னல் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.

சமுதாய மதிப்புகளிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

தொடர்பு வசதிகள் சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக நிலவிவந்த பழக்கவழக்கங்களிலும் கிராமிய வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தின.

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையால் பல ஏட்டுச் சுவடிகள் நூல் உருவம் பெற்றன.

ஒரு நாட்டின் சமுதாய மாற்றம் பிற நிறுவனங்களைப் போல் கல்வி என்ற சமுதாய நிறுவனத்திலும் தாக்கங்களைச் செலுத்தும் என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

இதன் விளைவாக இலக்கியப் போக்கிலும் பல மாறுதல்கள் நிகழ்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் சமயச் சார்பு குறைந்து சமுதாயச் சார்பு மிகுவதாயிற்று.

காப்பியங்கள் போன்ற பேரிலக்கியம் தோன்றுவது குறைந்தது.

செய்யுள்களின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதிய போக்கு ஏற்பட்டது.

மனிதாபிமானம் உயிர்நாடியாக அமைந்தது.

உரைநடை இலக்கியம் தோன்றியது.

பல்வேறு இலக்கிய வகைகளில் பல நூல்கள் தோன்றின.

பல்வேறு இந்து சமய, கிறித்தவ சமய, இசுலாமிய சமயப் படைப்பாளர்கள் தோன்றித் தமிழ் இலக்கிய உலகிற்கு வளம் சேர்த்தனர்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த தின, வாரம் இருமுறை, வார, மாத இதழ்கள் தோற்றம் பெற்றன.

கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தனர்.

உரைநடையின் தோற்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் போக்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம் எனக் கருதப்படுகிறது.

உரைநடை சமகால உலகைச் சித்தரிக்கும் ஆற்றல் வாய்ந்த கருவியாகக் கருதப்பெற்றது.

கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ்மொழியைக் கற்கப் பல எளிய இலக்கண நூல்களை உரைநடையில் எழுதினர்.

பாடநூல்கள் அச்சிடப்பட்டமையால் உரைநடை வளர்ச்சியுற்றது.

கிறித்தவ சமயக் கொள்கைகளை விளக்க உரைநடை பயன்படுத்தப்பட்டது.

குழந்தைகளுக்கான இனிய உரைநடை நூல்கள் எழுதப்பட்டன.

பாமர மக்களுக்குப் பயன்படும் வகையில் பல கதைகள் உரைநடையில் எழுதப்பட்டன.

பல கதைகள், புராணங்கள், காப்பியங்கள், பொது அறிவு நூல்கள், சிறுவர்களுக்கான நூல்கள், நாடகங்கள், இலக்கண வினாவிடைகள், வரலாற்று நூல்கள் முதலியன உரைநடையில் எழுதப்பட்டன.

பல நூல்கள் அச்சேற்றி வெளியிடப்பட்டன.

பல நூல்கள் தமிழ்மொழியிலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பல இலக்கியங்களுக்கு உரைகள் எழுதப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களின் விளைவாகத் தமிழ் இலக்கியப் பொருண்மையிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை புலனாகின்றது.

மரபு வழியாக வந்த இலக்கியப் பொருண்மைகளுடன் சமுதாய மாற்றங்களினால் விளைந்த சிந்தனைகளின் அடிப்படையிலான பொருண்மைகளும் இடம் பெறுகின்றமையை இவண் சான்றுகளாகக் கொள்ளப்பட்ட இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது.

ஆதியூர் அவதானி சரிதத்தில் விதவை மறுமணச் சிந்தனைகளும், தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகளும் இடம்பெறக் காணலாம்.

இராமலிங்க அடிகளாரின் படைப்புக்களில் சாதி வேறுபாடுகள் பாராட்டும் எண்ணத்தைக் கடிதல், பொருளாதார நிலையில் வறியவர்களுக்கு உதவ வேண்டும் என்று அறிவுறுத்தல், சமயக் காழ்ப்புணர்வைச் சாடுதல் ஆகியனவும் இலக்கியப் பொருண்மைகளாக அமைகின்றன.

மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் படைப்புக்களில் பெண்கள் முன்னேற்றச் சிந்தனைகள், சாதிய எதிர்ப்புச் சிந்தனைகள், தாய்மொழி வளர்ச்சிக்கான சிந்தனைகள், குடும்ப நலச் சிந்தனைகள் ஆகியனவும் இடம்பெறுகின்றமையை உணரமுடிகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமுதாய மாற்றங்களினால் விளைந்தனவற்றுள் புதின இலக்கியத்தின் வருகையும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

புதினங்களில் மனித உறவு முறைகள் எடுத்துக்காட்டி விளக்கப்படுகின்றன.

அவை சிக்கல் நிறைந்த சமுதாய வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கின்றன.

கூட்டுக்குடும்பச் சிதைவு, அதன் விளைவு என்பனவும் சுட்டப்பெறுகின்றன.

இரு தலைமுறையினர்களுக்கிடையேயுள்ள பண்பாட்டு மோதல்களையும் புதினங்கள் விளக்குகின்றன.

நகரிய வளர்ச்சியின் காரணமாகக் கிராம வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகள் விளக்கப்படுகின்றன.

பொதுவாகக் கூறின், பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமுதாய மாற்றத்தால் சாதி வேறுபாடுகளற்ற சமத்துவச் சிந்தனைகள், பொருளாதார வேறுபாடுகளற்ற சமத்துவச் சிந்தனைகள், பால் வேறுபாடுகளற்ற சமத்துவச் சிந்தனைகள், மதிப்பு முரண்களால் ஏற்பட்ட சிக்கல்கள், குடும்ப நிறுவனங்களில் நிகழ்ந்த மாற்றங்கள், சமுதாயக் கொடுமைகளை எதிர்க்கும் சிந்தனைகள் முதலியன தமிழ் இலக்கியப் போக்கில் இடம்பெறுகின்றன எனலாம்.

கால அருமை கருதி இவ்வாய்வில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சில நூல்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளன. இவ்வாய்வைத் தொடர்ந்து

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஒவ்வோர் இலக்கிய வகையின் பொருண்மைப் போக்கையும் சமுதாய, பொருளாதார, அரசியல், சமய நோக்கில் ஆராய வாய்ப்புகள் உள்ளன.

இதைப்போன்று இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களையும் அதன் விளைவான தமிழ் இலக்கியப் போக்கையும் ஆய்வு செய்யவும் வாய்ப்பு உள்ளது.

துணை நூற்பட்டியல்

தமிழ்

இலக்கியம்

இராமலிங்க அடிகள் - **திருவருட்பா, முதல் ஐநது திருமுறைகள்,** இராமலிங்கர் பணிமன்றம், சென்னை, 1981

இராமலிங்க அடிகள் - **திருவருட்பா, ஆறாம் திருமுறை,** இராமலிங்கர் பணி மன்றம், சென்னை, 1981.

இராமலிங்க அடிகள் - **திருவருட்பா, உரைநடைப்பகுதி,** இராமலிங்கர் பணி மன்றம், சென்னை, 1981

சேஷையங்கார் - **ஆதியூர் அவதானி சரிதம்,** விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், 1994.

வேதநாயகம் பிள்ளை, மாயூரம், ச. **பெண்மதிமாலை,** பெண்கல்வி, பெண்மானம், தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி, 1978.

வேதநாயகம் பிள்ளை, மாயூரம் - **பிரதாபமுதலியார் சரித்திரம்,** வானவில் பிரசுரம், சென்னை, 1981

வேதநாயகம் பிள்ளை, மாயூரம் - **திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, பெரியநாயகி பதிகம், தேவமாதா அந்தாதி, தேவதோத்திரமாலை, தயாபரக்கன்னிகள்,** ஆரோக்கியம் பதிப்பகம், திருச்சி, 1986.

வேதநாயகம் பிள்ளை, மாயூரம் - **சுகுணசுந்தரி,** இமயம் பதிப்பகம், நாகப்பட்டிணம், 1992

வேதநாயகம் பிள்ளை, மாயூரம் - **நீதிநூல்,** திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1950

வேதநாயகம்பிள்ளை, மாயூரம், ச. - **சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்,** பி. இரத்தினநாயகர் அன்ட் சன்ஸ், சென்னை.

நூல்கள்

ஆரோக்கியசாமி, மு., - **நாமிருக்கும் நாடு அல்லது தென்னிந்திய வரலாறு, முதற்பாகம்,** அமுதநிலையம் லிமிடெட், சென்னை, *1956.*

இளங்குமரன், இரா., - **இலக்கண வரலாறு,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, *1988.*

கிருட்டிணமூர்த்தி, சா., அரங்கன், கி. சுப்பராயலு, ஏ., (பதிப்பாசிரியர்கள்) **தமிழியல் ஆய்வுகள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, *1999.*

கைலாசபதி, க., - **தமிழ் நாவல் இலக்கியம்,** பாரி நிலையம், சென்னை, *1968.*

கைலாசபதி, க., - **சமூகவியலும் இலக்கியமும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, *1979.*

சிட்டி (சுந்தரராசன்) பெ.கோ.சிவபாதசுந்தரம், - **தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்,** கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, *1977.*

சிதம்பர ரகுநாதன் - **இலக்கிய விமர்சனம்,** தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, *1948.*

சிவகாமி, ச. - **பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்,** உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, *1994.*

சிவசுப்பிரமணியன், ஆ., - **அடிமைமுறையும் தமிழகமும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, *1984.*

சுந்தரமூர்த்தி, இ., அரசு, மா. ரா., - **இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், தொகுதி – I,** உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, *1998.*

சுப்பிரமணியன், ந., - **தமிழக வரலாறு,** என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, *1983.*

சேஷையா, மா., **முதல் தமிழ் நாவலாசிரியர் நீதிபதி வேதநாயகர்,** வானதி பதிப்பகம், சென்னை, *1989.*

சோமசுந்தரம், பூ., - **இந்தியாவின் வரலாறு,** முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1987.*

ஞானசம்பந்தன், அ.சா., **இலக்கியக்கலை,** தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, *1956.*

பாண்டுரங்கன், ஆ.. - **வேதநாயகம் பிள்ளை,** சாகித்திய அகாதெமி, நியூடெல்லி, *1994.*

பாவேந்தன், இரா., - **தமிழில் அறிவியல் இதழ்கள்,** சாமுவேல் ஃபிஷ்கிறீன் பதிப்பகம், கோயம்புத்தூர், *1998.*

பிச்சமுத்து, ந., - **மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம்,** சக்தி புத்தக நிலையம், சென்னை, 1988.

பிள்ளை, கே.கே., **தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும்,** தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1981.

வரதராசன், மு., **தமிழ் இலக்கிய வரலாறு,** சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1986.

வாசுதேவராவ், டி.என்.**ஐரோப்பிய வரலாறு, கி.பி.1452 முதல் 1769 வரை,** தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1972.

வீராசாமி, தா.வே., **தமிழ் நாவல் முன்னோடிகள்,** மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர், 1972.

வேங்கடசாமி, மயிலை.சீனி., **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்,** சாந்தி நூலகம், சென்னை, 1962.

வேங்கடசாமி, மயிலை, சீனி., **கிறித்தவமும் தமிழும்,** தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1962.

வேலுப்பிள்ளை, ஆ., **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,** பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1969.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., **இலக்கியச் சிந்தனைகள்,** நவபாரதி பிரசுராலயம் லிமிடெட், சென்னை, 1947.

ஜான் சாமுவேல், **பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்,** ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1986.

ஜீவானந்தம், பா., **இலக்கியத்தில் சோஷலிஸ்ட் எதிர்வாதம்,** நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, 1973.

கட்டுரை

இராசாராம், சு., "சமூக மாற்றமும் இலக்கணம் மற்றும் மொழியியல் வளர்ச்சியும்" **தமிழியல் ஆய்வுகள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999, பக்.129 - 141.

ஆங்கிலம்

நூல்கள்

Das, A.C., **An Introduction to the Study of Society,** Motilal - Benaosidas, Delhi,....

Diana T., Laurenson & Alan Swing Wood, **The Sociology of Literature,** Margibbon and Kee, London, 1972.

James B. Mckee, **Sociology - The Study of Society,** Rine Hart and Winston, New York, 1981.

Jon M. Shepard, **Sociology.** West Publishing Company, New York, 1981.

Kettle Arnold, **An Introduction of English Novel,** Vol.II, Arrow Book, 1962.

Kuppuswamy, B., **Social Change in India,** Vikas Publishing House Pvt. Ltd., Ghaziabad, 1979.

Meenakshisundaram, K., **The Contribution of Europian Scholars to Tamil,** University of Madras, Madras, 1974.

Narain, V.A. **Social History of Modern India, 19th Century,** Meenakshi Prakasan, Delhi, 1972.

Ramachandran, C., **East India Company and South Indian Economy,** New Era Publications, Madras, 1980.

Richard Hoggart, **Literature and Society,** Weiden Field and Nicolson, London, 1966.

Satyendra Tripathi, **Anomic and Social Change in India,** Rawat Publications, Jaipur, 1985.

Sen, S.P. (Edit). **Social and Religious Reform Movements in the Nineteenth and Twentieeth Centuries,** Institute of Historical Studies, Calcutta, 1979.

Subramanian, P., **Social History of the Tamils,** D.K.Print World (P) Ltd., New Delhi, 1994.

Sulochana Rengeya Reghava, **Sociology of Indian Literature,** Rawat Publications, Jaipur, 1987.

Tanner, E.M., The **Renaissance and Reformation, A Text Book of European History, (1494 - 1610),** Oxford at the Clarindan Press, 1925.

Wilbert E.More, **Social Change,** Prentice - Hall of India, Private Limited New Delhi, 1981.

M.A. Sociology, Ist Year paper I, Advanced Sociology, Principles, Directorate of Distance Education, Annamalai University.

கட்டுரைகள்

Sadasivam, D., "Social Reform Movements in Tamil Nadu with particular Reference to Women", **Social and Religious Reform Movements in the Nineteenth and Twentieth Centuries,** Institute of Historical Studies, Calcutta, 1979, pp. 345 - 354.

Subramanian, N. "Social and Religious Reform Movements in the Nineteenth and Twentieth Centuries", **Social and Religious Reform Movements in the Nineteenth and Twentieth Centuries,** Institute of Historical Studies, Calcutta, 1979 , pp.331 - 344.

Tara Sankar Banerjee - "Social Reform Movements in Bengal in the Nineteenth and Twentieth Centuries - A study in Social Change", **Social and Religious Reform Movements in the Nineteenth and Twentieth Centuries,** Institute of Historical Studies, Calcutta, 1979, pp.18 - 42.